இலக்கியச் செல்வம்

ஆசிரியர் :
பண்டித வித்துவான் தி. இராமானுசன்,
தமிழ் விரிவுரையாளர்,
திருச்சித் தனிப் போதனைக் கல்லூரி,
மதுரை.

THE MADURA TAMIL SANGAM

வெளியிடுபவர் :
A. T. N. நாகலிங்கம் & கம்பெனி
புது மண்டபம், **மதுரை.**

உரிமை பதிவு
செய்யப்பட்டது.

விலை ரூ. **1-12-0**

முதற்பதிப்பு, 1952.
இரண்டாம் பதிப்பு, 1955.

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை—857.

ஆசிரியர் குறிப்பு

எண்ணங்களாலேயே மனிதன் சிறந்து நிற்கின்றான். அங்ஙனம் சிறந்து நின்ற பழந்தமிழர்களது எண்ணத் தொகுதிகளே தமிழ் இலக்கியங்கள். அவ்விலக்கியக் கருத்துக்களை அறிவதனால் வருங்கால மக்கள் இனம் பண்பாடு பெற்று உயர்ந்தோங்க முடியும்.

தமிழ் மறுமலர்ச்சி பெற்று வரும் இந்நாளில், பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாக மாணவர் உலகமும் அத்தகைய இலக்கியக் கருத்துக்களை ஊன்றிப் படிப்பது இன்றியமையாததாகும்.

இந்நோக்கினைக் கொண்டு இத்தகைய பொருள் பொதிந்த நூல் ஒன்று எழுத வேண்டுமென்ற அவா பன்னாட்களாக எனக்கு இருந்து வந்தது. இவ்விருப்பத்தினைத் தமிழன்பரும் என் நண்பருமாகிய திருவாளர் **A. T. N. நாகலிங்கம் அவர்கள்** போற்றி ஏற்று, நூலாக வெளியிட முன்வந்தார்கள். அதன் பயனாகவே **'இலக்கியச் செல்வம்'** என்னும் இக்கட்டுரைத் தொகுதி வெளிவரலாயிற்று.

இதனுள் மாணவர்கட்குப் பெரிதும் பயன்படும்படி **இசை, இலக்கியம், ஆராய்ச்சி, விமரிசனம், கவி நயம், உளத்தியல்** முதலிய பல்வேறு துறைக் கருத்துக்களடங்கிய கட்டுரைகள் அடங்கியுள்ளன.

இந்நூல் பலவகையாலும் சிறப்புற அமைதற்துப் பெருந்துணை புரிந்த அன்பர்கள் **திருமங்கலம் தமிழாசிரியர் பண்டித, நா. லக்ஷ்மீநரசிம்மன் அவர்களுக்கும், காஞ்சீபுரம் வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கும்** *என் மனமார்ந்த நன்றி உரியதாகும்!*

பல்கலைக் கழகங்களின் பாட புத்தகக் குழுவினர்களாகிய அறிஞர்கள் இதனைக் கருத்தறிந்து ஆதரிக்க வேண்டுகின்றேன்.

தி. இராமானுசன்

உள்ளுறை

1.	கம்பரின் கலை வளம்	1
2.	வள்ளுவரும் பாரதியாரும்	32
3.	தமிழிசை வளர்ச்சி	45
4.	திருவாசகத்துள் ஒரு வாசகம்	62
5.	இலட்சியவுலகம்	74
6.	நினைவும் செயலும்	98
7.	பிற்காலத் தமிழ் இலக்கியம்	111

இலக்கியச் செல்வம்

1. கம்பரின் கலை வளம்

கவிஞர் கருவிலே வாய்த்த திருவுடையர். அவர் கல்லாத கலையும் நூற்கடலும் இல்லையென்னும் காட்சி, அவர்தம் சொல்லாலே தோன்றும். அத்தகைய கவிச்செல்வருள் தமிழரால் என்றும் மறவாது போற்றுதற்குரியவர் கம்பர். தமிழ் மொழியில் கம்பரையன்றிப் புலவர் பிறர் இல்லையா? பலர் இருக்கின்றனர். இருந்தும் என்ன? தமிழிலக்கியவுலகில் கம்பருக்கு முன் ஏனைய புலவர் இரவி முன் மின்மினியென்றுதான் கூற வேண்டும். மற்றைய புலவர்கள் கவியரசர்கள் என்றால், கம்பரைக் கவிச் சக்கரவர்த்தியார் என்னல் வேண்டும்.

செல்வம், இன்பவாழ்வு, ஆட்சி நிலை என்னும் இவற்றால் சிறந்து, எவர்க்கும் அடங்காது, பிறரை அடக்கியாளும் திறம்பெற்று உயர்ந்துள்ளவர்களைப் 'புவிச்சக்கரவர்த்திகள்' என்கின்றோம். இலக்கியவுலகில் நுண்ணுணர்வு, கற்பனைத்திறன், கவிதை நலன் முதலியவற்றிற்சிறந்து, வீறு பெற்றுயர்ந்த விழுப் பெரும்புலவரை அவ்வாறே 'கவிச்சக்கரவர்த்தி' என்று போற்றுவதும் இயல்பே. இத்தகுதி பெற்றுயர்ந்த பெரும்புலவர்களுள் கம்பர் தலை சிறந்தவராவர்.

தமிழறிஞர் செல்வக்கேசவராய முதலியார் அவர்கள், கம்பரை நன்குணர்ந்து, நயமான ஒரு செய்தியை

வெளியிட்டிருக்கின்றூர். அவர், "உலகம் முழுமைக்குமே பொதுவாய் அமைந்துவிளங்கும் நூல்நிலையம் ஒன்றில் உலக மொழிகள் எல்லாவற்றிலுமுள்ள இலக்கியங்கள் இடம்பெற்றிருக்கவேண்டும். ஒவ்வொரு மொழியிலும் மிகச்சிறந்த இரண்டுநூல்களுக்குத்தான் அதில் இடமுண்டு. அந்த இரண்டு நூல்களும் மற்றைய உலக இலக்கியங்களின் சிறப்பிற்குக் குறையாமல், தத்தம் மொழியின் பண்பாட்டையும் இலக்கியவளத்தையும் சிறப்புறக்காட்டிப் போட்டியிடுவனவாய் அமைதல் வேண்டும். இத்தகைய கட்டுப்பாட்டிலே தமிழில் இரண்டு நூல்கள் தெரிந்தெடுக்கவேண்டுமாஞல், கம்பரது இராமாயணம் ஒன்று; வள்ளுவரது திருக்குறள் மற்ருென்று. இவையொழிய வேறில்லை," என்று கூறுகிருர்.

கற்பனை வளம், கலைத்திறம், கவியின் தெளிவு, அணி நலம், சொல்லாட்சி, பொருள் நயம், பண் இனிமை, கருத்தமைதி ஆகிய இவை யாவுமே கம்பர் காவியத்துள் சிறந்தமைந்து நிற்கின்றன. கம்பர் கவிதையில் ஈடுபடுபவர் அடையும் இன்பத்தை வேறு எந்த நூலிலும் ஒருவர் அடைதற்கு இயலாது. 'கம்பநாடன் கவிதையிற்போல் கற்ருேர்க்கு இதயம் களியாதே,' என்று அதில் ஈடுபட்ட பிற்காலப் புலவர் ஒருவர் பாராட்டியுள்ளார்.

கம்பர் பாட எடுத்துக்கொண்டது நம் நாட்டிலே பலரும் பலவாறு வழங்கி வரும் பழங்கதைதான். கண் காணத் திரண்டுருண்டு நிற்கும் கருங்கல்லைச் செதுக்கி, அது உயிர் கொண்டதெனக் கண்டோர் மருளுமாறு சிலையாகச் சமைக்கும் சிற்பி போல, பழங்கதைக்குப் புது மெருகேற்றி, தம் இசை மிக்க மொழிகளால் கவி பாடித் தம்மையொத்த நாவலர்

களும் 'நனி சிறந்தது!' என்று வியக்குமாறு விருந்திட்ட காவியப்புலவர் கம்பர். அவர் தமிழரது பழமை மரபு, பண்பாடு, அறநிலை, இலக்கியப்பண்பு, குறிக்கோள் இவைகளையே பெரிதும் பேணிப் பாராட்டித் தமது காவியத்துள் போற்றியுரைத்துள்ளார். வாழ்க்கையை வளம் பெறச் செய்யும் பொருள் நுட்பங்கள், அறிவிற்கு விருந்தளிக்கும் புலமை நுட்பங்கள், உள்ளத்திற்கு உவகையூட்டும் கலைத் திட்பங்கள், வாழ்க்கையை முடிவில் அருள் நிலைக் கேற்றி உய்விக்க வேண்டிய ஞான ஒட்பங்கள் இவை யாவும் அவரது இராம காதையிலே கொள்ளக் கொள்ளக் குறையாது நிறைந்திருக்கின்றன.

பல்வேறு கருத்துணர்த்தும் புதிய புதிய செஞ்சொற்கள் அவர் வாக்கில் மின்னுகின்றன. பலபலவாகக் கிளைத்துச் சொற்கள் பொருளுணர்த்தும் முறைகளை வியப்பதா! அல்லது கருத்தொடு பிறந்து இதயவுணர்ச்சியைத் தட்டியெழுப்பும் அருவி நீரோட்டம் போன்ற செய்யுள் நடையைக் கண்டு மகிழ்வதா! இணையற்ற முறையில் உவமைகளைக் கையாளும் திறத்தைப் போற்றுவதா! எளிய நடை, மிடுக்கு நடை, நகைச்சுவை நடை, சொற்போர் நடை என்றெல்லாம் சொல்லும் நடை விகற்பங்களைக்கண்டு நயப்பதா! எல்லாம் ஒரே அழகு மயம்! நெஞ்சையள்ளும் இன்ப மயம்!

'புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவி' என அவர் கூறிய கவிதையிலக்கணத்திற்கு அவர் கவிதையே சிறந்த இலக்கியமாய்த் திகழ்கின்றது.

'நன்மை இது; தீமை இது,' என்று ஆராய்ந்து அறுதியிட்டுரைக்கும் வகையால், அவரது நூல் அற நூலாய் நமக்குத் தோன்றுகின்றது. அரக்கர் நெஞ்சம், முனிவர் உள்ளம், குரங்கின் கருத்து, வீரர் நினைவு, தாயர் அன்பு இவைகளை நன்கறிந்து அவர் பேசுவனவாயுள்ள இடங்களைக் காணின், இந்நூல், உள்ளத்தின் இயல்பை நன்கு தெரிவிக்கும் 'உளநூல்' எனக் காட்சியளிக்கின்றது; பாடல்களில் எவரும் போற்றும்படியான பண் வகைகளை மிக இனிமையாக எடுத்தாண்டுள்ளதை நோக்கும் பொழுது, 'இசைத்தமிழ்' என்றே புகழும்படியாய் விளங்குகின்றது. கதையை நடத்திச்செல்லும் திறந் தான் என்ன! நேருக்குநேர் நின்று பேசும் நாடகக் காட்சியைக் காண்பது போல, உணர்ச்சி ஓவியங் களாகவே கதையை நடத்திக் காட்டுகின்றார் கம்பர். ஆங்காங்கு அவர் வெளியிட்டுள்ள அரசியற்கருத் துக்களை ஒரு கோவைப்பட வைத்து நோக்கினால், அவரது இராம கதை, கதை சொல்லும் ஒரு நூலாக நமக்குத் தோன்றுவதில்லை. அரசியற்பெருநூல் என்றே நாம் அதனைக்கண்டு மகிழ்வோம். இவ் வாறே இறையருட்கண் கொண்டு பார்ப்பவர்க்கு அருட்பெருநூலாகவும், அணிகளின் அழகை அள்ளிப்பருகுவார்க்கு அணி நூலாகவும் அக்கம்பர் நூல் ஒன்றுதானே வேறு வேறு காட்சியளிக்கின் றது. அரசியல் நுணுக்கங்களை அவர் பெய்துவைத்த தைப் பார்த்து அவரை அரச மரபினர் என்றே கூறும் ஆராய்ச்சியாளர் பலருளர்.

இப்படிக் கவிதைக்கலைக்கே ஒரு புதுக்கவர்ச்சி யைக் கொடுத்துக் கவினுறுத்தியவர் கம்பர் என்றால், அவரது கல்வித்திறம் எப்படிப்பட்டதாய் இருக்க

வேண்டும் என்பது நமக்கு வியப்பளிப்பதாய் இருக்கின்றது! 'கல்வியிற்பெரியன் கம்பன்,' என்று தமிழுலகம் பாராட்டிய தனிப்பெருங்கவிஞரல்லரா கம்பர்!

உலகிலே உயர்வு தரும் பொருள்கள் பலவுள. அவை தம்மையடைந்தவர்க்கெல்லாம் உயர்வைக் கொடுக்கும். அப்படி மேம்பட்ட சிறப்புக்களை அடைந்த ஒருவரது உயர்வு அளவு கடந்து தோன்றும் நிலையிலே நமக்கு என்ன சொல்லத்தோன்றுகிறது? அவ்வோதரும்பொருள்களாலே அவர் பெருமை பெற்ருர் என்று சொல்லும் உண்மை நிலை மாறி, அப்பொருள்கள்தாம் அவரால் பெருமை பெற்றன என்று சொல்லிப் புகழும் நிலைக்கு நாம் துணிந்துவிடுகிறோம். இது புனைந்துரையாயினும், பொய்யன்று. அவ்வுயர்நிலையிலே பதிந்தவுள்ளம் உணர்ச்சியில் ஈடுபட்டுப் பேசுகிற பேச்சு அது. பெருங்கவிஞர்களும் இப்படித்தான் பேசுகிருர்கள். கம்பரே சொல்கிருர் சீதையின் பண்பைப் பேசும் போது:மற்றைப்பெண்கள் நற்பண்பிலோ கண் கவர் வனப்பிலோ உயர்ந்து தோன்றினல், முன்னைப் பிறப்பில் செய்த நல்வினை, தவப்பயன் என்றெல்லாம் காரணம் கூறுவோம். சீதைக்கும் அப்படித் தானே? நாணம் என்ற நற்பண்பு சீதையிடம் மிக்கிருந்தது,நல்ல சிறப்பளித்தது. அதனல், அவள் பலராலும் பாராட்டிக் கடவுளெனப் போற்றப்பட்டாள்.இதுதான்முழுவுண்மை. இப்படிஅப்பண்பின் சிறப்பால் மற்றைப்பெண்களினும் சீதை சிறந்து தோன்றிப் பெருமை பெற்றதற்கு அவளது முன்னைய நல்லூழையும் தவத்தையும் காரணமாகச் சொல்லுவது ஓரளவில் பொருந்தும். ஆனல், கம்பர் எவ்வாறு கூறுகிருர்? அரக்கியர் சூழ்ந்து துன்

புறுத்த, கணவனைப் பிரிந்து வருந்தும் போதும் அசோகவனத்தில் சீதை கற்புக்கெடாதிருந்தாள் என்ற நிலையினை நினைக்கும் போது, பெண்மைக்குரிய இயல்புகள் மிகமிக உயர்ந்த நிலையில் அவளிடம் நிறைந்து காட்சியளிப்பதை எண்ணினார்; அதை எண்ணும்போது 'சீதை குணங்களால் உயர்ந்தாள்' என்றுசொல்வதில்பொருளில்லையென்றுகருதினார்; உடனே தம் மனக்கண்ணால் கண்டகாட்சியை மாற்றிப் பேசி மகிழ்கின்றார்: நாணம் முதலாகிய நல்லியல்புகள் தவம் செய்து சீதையை அடைந்து உயர்வுற்றன. ஏனென்றால், அப்பண்புகள், 'இதுவரை நாம் பிறரைச் சேர்ந்து அவர்கட்குப் பெருமை அளித்துக்கொண்டிருந்தோம். நமக்கு நாம் பெருமை தேடிக்கொள்ள வேண்டாவா? நமக்குப் பெருமை வேண்டுமாயின், சீதை பிறக்கும் போது அவளைத் தேடியடைந்தால்தான் உண்டு,' என்ற நினைப்புடையனவாய்த் தவம் செய்து, சீதை தோன்றியவுடன் அவளையடைந்து, அவை பெருமை பெற்று விளங்கின,' என்ற கருத்துப்படும்படி,

'நாணம்நோற் றுயர்ந்தது நங்கை தோன்றலால்'

எனப்பாடினார் கம்பர். இதனை இன்னும் விளக்கமாக முன்னரே கூறி வைத்துள்ளார்: 'குணங்கள் மட்டுமன்றி, அழகும் தவம் செய்து இவளையடைந்து பெருமை பெற்றது,' என்ற கருத்தில்,

'குணங்களைஎன் கூறுவது? கொம்பினைச்சேர்ந் தவையுய்யப்
பிணங்குவன. அழகுஇவளைத் தவம்செய்து பெற்றதுகாண்!'

எனக் கூறி வியக்கின்றார். இவ்வாறு கூறுவது கற்பனையேயாயினும், ஒரு பொருள் அளவு கடந்து பெருமை பெறும் நிலையிலே இப்படி மாறிப் புகழும்

நிலைபெறும் என்ற கருத்து நமக்கு நன்கு விளங்குகின்றது.

இவ்வாறே, கம்பரின் கல்வி நலத்தைப் பிற புலவர் நன்கு தெரிந்து பாராட்டியிருக்கின்றனர்.

'புலம்மிக் கவரை புலமை தெரிதல்
புலம்மிக் கவர்க்கே புலனும்.'

என்பது உண்மை மொழியன்றோ? இந்நாளில் புரட்சிக்கவியென்றும் புதுமைக்கவியென்றும் புகழ் பெற்ற தேசியப் பெருங்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்,

'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை; உண்மை; வெறும்
புகழ்ச்சி யில்லை.'

என எங்கும் காணாத சிறப்புடையராக முப்பெரும் புலவர்களைப் பாராட்டும் முறையிலும் கம்பரை முன் வரிசையில் நிறுத்தி வைத்தது இத்தகவுடைமை கருதியே என்று கூறலாம். பின்னும் அவர்,

'கல்வி சிறந்த தமிழ்நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு'

என்று நாட்டுப் பெருமை கூறுமிடத்திலும் இக்குறிப்பைக் காணலாம். கல்வி தமிழ் நாட்டில் சிறந்து விளங்கியது. காரணம், 'கம்பர் பிறந்து கல்வியைச் சிறக்க வைத்ததே,' என்று அவர் கருதியதை மிகச் சீரிய முறையில் தெளிவாகச் சொல்லும் பாரதியார் கம்பர் பெருமையை நன்றாகக் கண்டறிந்தவர் என்பதில் தடையில்லை. கல்வியாற் சிறந்த கம்பர் பெருமையைக் 'கம்பராற்சிறந்தது கல்வி,' என்னும் பொருள்படக் கூறினார் எனக் கருதுவதே தகுதியுடையதாகும்.

இதுவரை கம்பருக்கும் கல்விக்கும் உள்ள தொடர்பு காணும் வழியால் அவரது பெருமையை ஒருவாறு உணர்ந்தோம். பொதுவாகக் கம்பர் கவிதையில் ஈடுபடுவார் காணும் சுவை நயங்களையும் சுருங்க அறிந்தோம். இனிக் கம்பர் அமைத்த கலைக் கோயிலுள் நுழைந்து, அதன் அழகைக் காண்போம். 'கலையின் இயல்பு, நோக்கம், போக்கு, வடிவு முதலியவை யாவை? அவைகளின் சீரிய நலங்களைக் கம்பர் எவ்வளவில் தம் காவியத்தில் அமைத்துள்ளார்?' என்பன பற்றிச் சிறிது ஆராய்வோம் :

கலை என்பது பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நாட்டிடையே உலவுகின்றன. அவைகளில் பலவும் மேனாட்டுக் கருத்துக்களைத் தழுவியவையாகவே காணப்படுகின்றன. எல்லாப்படியாலும் ஓரினத்தாரின் வாழ்க்கையோடு மிக நெருங்கிய இயைபுடையது கலை. ஆகவே, அதன் விளக்கத்தை அந்தந்த இனத்தவரின் பண்பாட்டிற்குஇயைந்த முறையிலே பொருள் பண்ணிக் காண வேண்டும். 'அவ்வாறு ஆயின், கலையைப் பற்றிய தமிழர் கருத்து யாது?' என்பது பற்றி முதலில் நாம் ஆராய்ந்தறிய வேண்டும்.

உள்ளும் புறமும் ஒத்தியங்குவதே கலையின் உண்மை நிலை. இதனாலேயே தமிழர் வாழ்வு கலை வாழ்வாய் விளங்கியது. அவர்கள் வாழ்வு 'அகம், புறம்' என்ற இரு கூறாய் நின்று, ஒன்றுபட்டு இணைந்தது. அகவாழ்வில் அன்பாய் இன்பம் நிறைந்தது. புறவாழ்வில் அறமும், அறிவும், செல்வமும், அரசும், வாணிபமும், வீரமும், போரும், தவமும், இறை வழிபாடும் சிறந்து விளங்கின. அகம்

புறம் என்ற இவ்விரண்டுமே, அறம், பொருள், இன்பம் எனப் பகுக்கப்பட்டன. அறத்தில் நின்று, பொருள் ஈட்டி, இன்புற வாழ்ந்தனர் தமிழர்; மனிதன் மனம், மொழி, மெய் மூன்றினும் தூயனாய், உண்மை, வாய்மை, மெய்ம்மையுடன் வாழ வேண்டும் எனக் கருதினர். மொழியின் இயல்பு அறமாயிற்று. மெய்யினது உழைப்பு, பொருளாயிற்று. மனத்தால் உணர்வது இன்பமாயிற்று. இவ்வாறே அம்மனம் மொழி மெய்களைச் சிறந்த முறையிற் செழுமைபெற வளர்த்து, அறிவையும் ஆற்றலையும் அழகுணர்ச்சியையும் பெருக்கினர் பழந்தமிழர். அவர்கள் தாங்கள் பேசும் மொழியையும் அம்முறையைப் பின்பற்றியே இயல், இசை, நாடகம் என வகுத்தனர். மனம் மொழி மெய் மூன்றுக்கும் அப்பாற்பட்ட — ஆனால், அவற்றுள்ளும் கலந்து விளங்குகின்ற — அருளொளியை ஆராய்ந்தனர். இவ்வாறு அறம் பொருள் இன்பங்களைத் துய்த்து, அவற்றின் விழுமிய விளைவாகிய வீட்டு நெறியையும் காண முனைந்தனர். அதற்காக இயற்கையின் மடியில் இயற்கையோடொன்றி வாழ்ந்த அவர்கள், இயற்கையில் தோன்றும் எல்லை அற்ற பேரழகைக் கண்டு மகிழ்ந்து, அதனை மேலும் காண விழைந்து, இயற்கையெங்கும் துருவினர். அவர்களது இயற்கையறிவு விரிந்தது; அழகு உணர்ச்சி பெருகியது; பண்பு வளர்ந்தது. அவர்களது வாழ்வே கலை வாழ்வாய்க் கனிந்தது. அவ்வாழ்வில் அறமும், வீரமும், அன்பும் பொங்கி வழிந்தன. அவை அவர்களிடம் செழித்து வளர்ந்து பயன்பட்ட முறையும் அறிந்து மகிழ்வதற்குரியது. அறிவும், ஆற்றலும், பண்பும் அவர்களிடை ஒருங்கே கலந்து ஒரு நிலையில் வளர்ந்தன. இவை தனித்

தனியே எவ்வளவு செழித்து வளர்ந்தாலும், ஒன்று பிறவற்றினும் பெருகிச் சிறந்தாலும், நன்மை பயவாமையேயன்றித் தீமை விளைதற்கும் காரணமாகும் என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தார்கள். அதனால், அவர்கள் வாழ்வில் அறமும் வீரமும் அன்பும் ஒன்றற்கொன்று இன்றியமையாது நின்று கலந்து செழித்தன. சுருங்கச் சொன்னால், இம்மையிலே மக்கள் வாழ்க்கை நிலையை எல்லாப்படியாலும் உயர்த்திச்செம்மையுறுத்தி, அவ்வளவோடமையாது, மறுமை பற்றிய நினைவையும் ஊட்டி, அவ்வுலக நல்வாழ்விற்கும் வித்திட்டு நிற்கும் பெருவாழ்வு வாழ்ந்தனர் தமிழர்! அவர்கள் வாழ்ந்த வாழ்வின் வகையே சிறந்த கலை என்று உணரப்படும். இதனை உட்கொண்டு கம்பர் அமைத்த கலைக் கோயிலுட் புகுவோம் :

கம்பர் இராம கதையைப் பதினாயிரம் பாடல் அளவிலே பெருங்கலைக் கோயில் ஆக்கித் தந்திருக்கின்றார். ஒரு சிறந்த கலையிலே கூறும் பொருள் பற்றிய 'பொருண்மைச் சிறப்பும்,' சொல்லும் முறை பற்றிய 'வடிவச் சிறப்பும்' ஆகிய இரு பெருஞ்சிறப்புக்களும் நன்கமைதல் வேண்டும். இராம கதை சொல்லப்புக்கதனாலேயே அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு உறுதிப் பொருளையும் கூறும் பொருண்மைச் சிறப்புத் தானே வந்து அமைகிறது. அவைகளைத் திறம்பட விரித்து அழகுபடுத்திப் பேசும் போது அமையும் வடிவச் சிறப்பால் அக்காவியம் கலைகட்கெல்லாம் நிலைக்களனாகிக் காட்சியளிக்கிறது. கம்பர் கலைஞர் கட்கெல்லாம் கலை விருந்தளிக்கும் தலைவராகிவிடுகின்றார். மேனாட்டுப் பெரும்புலவராகிய செகப்பிரியர்

நூலுக்குச் சிறந்த முறையில் ஆய்வுரை எழுதிய 'பிராட்லி' (Bradley) என்பார், கவியின்பம் பற்றிப் பேசும் பொழுது 'கவிதை எதைச் சொல்லுகிறது என்று பொருள் நலம் காணுவதினும், எப்படிச் சொல்லுகிறது என்ற வடிமைப்பு நலமே கண்டு மகிழ வேண்டும்,' என்று கூறியுள்ளார். உண்மையில் அவரது விளக்கம் கலையின் ஒரு பகுதியை நன்கு விளக்குவதாக நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

கம்பர் இயற்றிய காவியம், பல்லாயிரம் ஆண்டுகளாக மக்கள் மனத்தை ஆட்சி கொண்ட வடநாட்டுப் பழங்கதை; வடவர் பண்பாட்டுடன் கலந்து வழங்கும் கதை. அத்தகைய கதையைத் தமிழர் பண்பாட்டிற்கியைய மாற்றிப் போற்றிய கலைத் தொண்டு கம்பருக்குச் சிறப்பளித்துள்ளது. ஒவ்வோர் இனத்திற்கும் தனிச்சிறப்புடைய பண்பாடுகள் உள்ளன. அவ்வப்பண்பாட்டின் போக்கிற்கு இயையவே, அவ்வினத்தாரின் வாழ்க்கை நலமும் அமையும். அவ்வாறமையும் வாழ்க்கையின் மறுவடிவமே கலைக்காட்சி. இவ்வுண்மைகள் மறுக்க முடியாதவை. அவ்வாறாயின், வடநாட்டு இராம கதையினைத் தமிழர் நோக்கிற்கும் அவர்தம் போக்கிற்கும் இயையப் புத்தொளியூட்டி, இராமனையும் சீதையையும் தமிழர் பின்பற்றும் இலக்கிய மக்களாகப் புனைந்து காட்டும் கம்பர் கலைத்தொண்டு நிகரற்றதன்றோ? எனவே, 'அம்முறையில் இராமனையும் சீதையையும் முதலிலிருந்து முடிவு வரை எப்படி உருவமைத்து நமக்குக் கம்பர் காட்டியிருக்கின்றார்? அம்முயற்சியில் அக்கலைஞர் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கின்றார்?' என்று காண்பது அவரது கலைவளக் காட்சியில் ஒருபடியாகுமல்லவா?

ஆகவே, அதனைக் காண்போம் :

கம்பர் அளித்த இராமனையும் சீதையையும் காண முற்படுமுன் நாம்காணத்தகுவது ஒன்றுண்டு : பழந்தமிழர் ஆண்மை பற்றியும் பெண்மை பற்றியும் எத்தகைய சிறந்த கருத்துக்களையுடையராய் வாழ்வு நடத்தினர் என்பதை முதற்கண் அறிந்துகோடல் வேண்டும். தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூல் மிகப்பழமை வாய்ந்த நூலாகும். அதில் ஆண்பெண் வேற்றுமை பற்றிய கருத்து அறிவளவிலே சொல்லப்படவில்லை. மக்கள் வாழ்விறுதியாகிய நோக்கம், யாவரும் இசைபட வாழ்ந்து சிறத்தலே யாகும். அச்சிறந்த வாழ்க்கை நிலையை ஆணும் பெண்ணும் வேறுபாடின்றிப் பெற்றுணரலாகும். கல்வி, தறுகண், இசைமை, கொடை என்பன ஆண் மகனும் பெண்மகளும் பெருமிதம் பெற்றுய்தற்குரிய வழிகள். சுருங்கச் சொன்னல், ஆண்களுக்குரிய தலையாய பண்பு வீரம் ; பெண்களுக்குரிய தலையாய பண்பு கற்பு. வீரத்தால் ஆண் மகனும், கற்பினல் பெண்மகளும் சிறந்து தோன்ற இயலும். இந்தப் படிகளிலே ஏறும்வரை வேண்டுமாயின், ஆணுக்கும் பெண்ணுக்கும் உயரும் வழிதுறைகளில் வேற்றுமை தெரியுமே தவிரப் புகழ்க்குன்றேறி நின்ற நிலையிலே எந்த வேறுபாடும் அவர்களிடையே கருத இடந் தருவதில்லை.

தமிழர் கண்ட ஆண் பெண் இயல்களிலே குறிப்பிடத்தக்க பிறிதொரு நயமும் உண்டு ; ஆணுக்கு வீரமும் பெண்ணுக்குக் கற்பும் சிறந்த பண்புகளாயினும், அவ்விரண்டும் தனித்தனியே அவரவர்க்கேயுரிய தனிப்பண்புகளாய் நின்றுவிட வில்லை. வீரமும் கற்பும் ஆடவர் பெண்டிர் இருபா

லாரிடமும் அமைந்து சிறத்தல் வேண்டும் என முன்னையோர் கண்டனர். ஆடவர் கற்புப் பெரும்பாலும் 'நிறை' என்றே சொல்லப்படும். ஆடவர்க்குரிய வீரத்துடன் நிறையும் இயைந்து சிறந்த போதே அவ்வீரம் பிறன்மனை நோக்காத பேராண்மையாகி, அவர்களைக் கடவுள் நிலைக்கு ஏற்றும். அவ்வாறே கற்புடைமையோடு வீரப்பண்பும் வாய்ந்து நின்ற பெண்டிரேபத்தினித்தெய்வங்களாக ஏத்திப் போற்றப்படுவர். ஆணும்பெண்ணும் ஒன்றுபட்டே முழு உலகமாகி நிற்கும் இயற்கை நிலையிலே தோய்ந்த பழந்தமிழர், ஆண்மையில் பெண்மையும் பெண்மையில் ஆண்மையும் கலந்து சிறத்தலே முழு ஆண்மை பெண்மைகளின் தலையிலக்கு என்பதைக் கண்டு கொண்டதில் வியப்பேதும் இல்லை. கற்புமிக்க கண்ணகியிடம் வீரமும் சிறந்துநின்ற தன்மை கருதியே இளங்கோவடிகள் கண்ணகியை வீரபத்தினிக் கடவுளாக்கிக் காட்டியுள்ளார். கம்பரும் அவ்வாறே இராமனை மிகச் சிறந்த வீரனாகமட்டும் காட்டி நின்று விடவில்லை; அவனிடம் நிறையும் பொருந்திய தன்மை சுட்டியே அவனைக் கடவுள் நிலைக்கு ஏற்றிவைக்கின்றார். 'மறமன்னர்க்குப்புறம்கொடாத வீரம் மட்டுமன்றி, மறுமங்கையர்க்கு மார்பு கொடாத சீலமும் உடையவன் இராமன்'' என்றே அவனைக் கம்பர் போற்றுகின்றார். இவ்வாறே சீதையைக் கற்புடன் வீரமுமுடையளாகக் காட்டிய திறம் இனி நோக்கத்தக்கது. சீதையை வீரபத்தினியாக்கிக் காட்டி, அவளை முழுப்பெண்மையின் தலையிலக்காகக் கொள்ளுமாறு செய்கிறார் கம்பர். பெருவீரனான அனுமான் முன்னிலையில் சீதை பேசுமிடத்துக் கற்புடன் கூடிய வீரப்பண்பு பெருக்

கெடுத்தோடுகின்றது:

‘அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ ?
எல்லை நீத்த வுலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேன்;அது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்.’

என்று கூறும் சீதையின் கூற்றிலே பிறரைப் பணியச்செய்யும் பெருவீரம் தோற்றுதல் காண்க. இனி மற்றொரு செய்தி:

மக்களிடத்து வெளி வடிவிலே தோற்றும் உடலழகும் உட்புறத்தேயிருக்கும் குணவழகும் ஆகிய இரண்டும் பாராட்டத்தக்கன. ‘உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிதே,’ என்றார் ஒருகவிஞர். குணவழகும் வடிவழகும் ஒன்றையொன்று தழுவியே பெருமை பெறும். எனினும், நாளடைவில் தேய்ந்து கழியும் உறுப்பழகினும், என்றும் வளர்ந்து அழியா இளநலங்காட்டி நிற்கும் குண வழகேமிகச்சிறந்தது. இதில் யாரும் வேறு கருத்துக்கொள்வதற்கில்லை. தூய வாழ்வில் வீறுபெற்று ஓங்கி நிற்கும் பெரியோர்களைக் ‘குணம் என்னும் குன்றேறி நின்றார்,’ என்றே திருவள்ளுவரும் கூறியுள்ளார். அவ்விருவகையழகையும் கம்பர் விளக்கும் வகையைக் காண்போம்:

சீதை இராமனது குணவழகில் ஈடுபட்ட தன்மையைக் கம்பர் விரித்துரைக்கும் திறம் வியப்பிறந்து செல்கின்றது:

‘இந்திர நீலமொத் திருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளு மேயல
முந்தியம் முறுவல்என் உயிரை உண்டதே!’

எனச்சீதை இராமனது வடிவழகில் ஈடுபட்ட தன்

மையை நன்கு விளக்கிவிட்டு, அதனினும் அவன் குண வழகில் மயங்கிய நிலையை 'அம்முறுவல் என் உயிரை யுண்டதே!' எனக் காதல் கனிய கூறுவது வாயிலாகக் கம்பர் பேசுகின்றார். இராமனது புன்முறுவலில் அவனது உள்ளப் பண்பெல்லாம் சீதைக்குத் தெளிவாகின்றது. இராமன் வில்லை முரித்தான் என்று தோழி வந்து கூறும் பொழுதும்

'கோமுனி யுடன்வரு கொண்டல் என்றபின்
தாமரைக் கண்ணினன் என்ற தன்மையால்
ஆம்அவ னேகொல்என் றையம் நீங்கினள்'

சீதை. அருளும் வீரமும் வழியும் இராமன் கண்களில் அவ்வகப்பண்புகளையன்றி வேறு எதைக் காண வியலும்?

சீதை அசோகவனத்திலே கணவனைப் பிரிந்து தனித்திருந்து புலம்புகின்றாள். அந்நிலையிலும் இராமனது குணவழகே சீதையின் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது:

'மெய்த்தி ருப்பதம் மேவென்ற போதினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போதினும்
சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கு முகத்தினை யுன்னுவாள்.'

மய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளமுடைமையே அழியாத மெய் வீரமாகும். இம்மெய் வீரமே இராமனைக் கடவுளாக்கியது; விசுவாமித்திரர் முதலான முனிவர்களும் இராவணன் போன்ற வீரர்களும் போற்றிப் புகழ்ந்தது. இதனை நினைக்கின்றாள் சீதை. மேலும், மற்றொரு சீரிய பண்பும் அவளை எண்ணி மயங்கச் செய்கிறது: சக்கரவர்த்தித் திருமகனாகிய இராமன், ஏழை வேடன் குகனைத் தம்பியெனப் பாராட்டிய தோழ

மையை எண்ணுகின்றாள் :

> 'ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய
> ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பிநீ
> தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
> வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்.'

இனி, இப்பேரழகை நுகர்தற்குத் தனியுரிமை பூண்ட சீதையைத் தவிர வேறு சிலர் அறிந்த வகையைச் சிறிது விளக்குவாம்: சூர்ப்பணகை காட்டில் இராமனைக் காண்கின்றாள்; அவன் வடிவழகில் ஈடுபடுகின்றாள்; அவனது புதுமை விளைக்கும் கண்களால் குணவழகையும் உணர்ந்து, தன்னை மறந்துவிடுகின்றாள். தவப்பயனையே வழிவழிப் பெற்ற பெருஞ்செல்வமாகக் கொண்டு வாழும் அரக்கர்களுடன் நெருங்கிய தொடர்புடையவள் சூர்ப்பணகை; தவத்தின் பெருமையை நன்குணர்ந்தவள்; தவப் பயனாலே தேவரும் வணங்க வாழும் விழுமிய நிலை பெற்று விளங்குகின்றான் தன் தமையனாகிய இராவணன் என்று பெருமிதம் கொள்பவள். அவ்வாறு அருந்தவ நிலையின் பெருமையை நன்கறிந்தவளாயிருந்தும், இராமன் தவக்கோலம் பூண்டு விளங்குவது அவன் வடிவழகை மாசுபடுத்துவதாகக் கருதிவிடுகின்றாள். அவ்வாறு அவள் கருதுமாறு இராமனது அழியாப் பேரழகு மயக்குகின்றது. 'ஐயோ! இவன் ஏன் தவம் செய்ய வேண்டும்! வீணாக மேனி வாடத் தவம் செய்கின்றானே! இப்பேரழகன் தவம் செய்யத் தவம் என்ன தவம் செய்ததோ!' என உண்மையில் தவப்பயனாக உள்ளவன் அவன் என்பதை உணர்ந்தவள் போலப் பேசுகின்றாள் :

"எவன்செய இனியஇவ் வழகை எய்தினன்!
அவம்செயத் திருவுடம் பலச நோற்கின்றன்!
நவம்செயத் தகையவிந் நளின நாட்டத்தான்
தவம்செயத் தவம்செய்த தவமென்!" என்கின்றுள்.

நகரமாந்தர் வீதி வழியே வந்த இராமலக்கு வரைக் காண்கின்றனர். பலர் இராமனழகில் மயங்கித் தம் உணர்வழிந்து செயலிழந்து நின்றனர். நிறையழியாது நின்ற ஒரு சிலர், இராமன் அழகை அள்ளிப்பருகும் பேறுபெற்ற சீதைக்கு அவ்வழகை முற்றும் பருக ஆயிரம் கண்கள் வேண்டும் எனப் பாராட்டினர். அந்நிலையினும் சீதையின் வடிவழகையோ குணவழகையோ குறைவாக மதிக்க மனமிலராய், சீதையின் அழகைக் காண்பதற்கும் அவ்வாறே இராமனுக்கு ஆயிரம் கண்கள் வேண்டும் எனப் பாராட்டினர். இத்தகைய இராமனை விட்டு நீங்கா நிழல்போலச் செல்லும் சிறப்பும் உடன்பிறப்புரிமையும் வாய்ந்த இலக்குவனுக்கும் பாராட்டுக் கிடைக்கின்றது. 'இவ்வழகு வடிவங்களை நாம் காணும்படி செய்த விசுவாமித்திரனை வணங்குவோம்!' என நன்றி மறவாது முடிவில் முனிவனையும் வாழ்த்துகின்றனர். அப்பாடலைக் காண்போம்:

"நம்பியைக் காண நங்கைக் காயிரம் நயனம் வேண்டும்;
கொம்பினைக் காணுந் தோறும் குரிசிற்கு மன்ன தேயாம்;
தம்பியைக் காண்மி னென்பார்; தவமுடைத் துலக மென்பார்;
இம்பரிந் நகரில் தந்த முனிவனை இறைஞ்சு மென்பார்."

இவ்வாறு பலரும் இராமனது பேரழகில் ஈடுபட்ட வகையை விளக்கிய கம்பர், தாம் உணர்ந்து கூறும் வகையை இனிக் காண்போம்: இராமன் தாய்வரங் கொளத் தந்தை ஏவலால் தம்பியொடும் தேவியொடும் கானகம் செல்கின்றன். அப்பொழுது

கம்பர் தமது அகக்கண்ணுல் இராமனது வடிவழகையும் குணவழகையும் கண்டு, 'மையோ! மரகதமோ! மறிகடலோ! மழை முகிலோ!' என நான்கு உவமைகளால் புகழ்கின்ருர். இவ்வுவமைகளால் முறையே இராமனது மேனிப் பொலிவையும், புகழொளியும் உறுதியுமாகிய இயல்புகளையும், உலகினைப் படைத்துக் காத்துத் தன்னுள்ளடக்கிக் கொள்ளும் தெய்வ நிலையையும், முற்கூறிய இயல்புகளுடன் விளங்கும் எல்லையற்ற அருள் திறத்தையும் உணர்ந்து வியக்கின்ருர். அவ்வாறு வியந்தும் வியப்பிறந்து செல்லும் அவன் பேரழகைக் கூறும் வன்மை பெறவில்லையே என்னும் ஆற்ருமை தோன்ற, 'ஐயோ! இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்!' எனக்கூறி முடிக்கின்ருர் கம்பர். கம்பர் உணர்ச்சி பின் வரும் பாடலாய் வெளி வருகிறது:

"வெய்யோனெளி தன்மேனியின் விரிசோதியி னடையப்
பொய்யோவெனும் இடையாளொடும் இளையானெடும் போனன்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோஇவன் வடிவென்பதோ ரழியாவழ குடையான்."

இனிச் சீதையின் குணவழகைக் கம்பர் கூறும் வகையைக் காண்போம்: மாற்ற முடியாத இயல்புகளையுடைய இயற்கைப் பொருள்களும் முற்றிய காதலின் எழுச்சியால் தம் இயற்கை நிலை மாறிவிடுகின்றன என்பதை அறிகின்ருேம். அன்பின் முதிர்ந்த கணவனைப் பிரிந்த பின் சுடுதீயையும் குளிர்பொய்கையையும் ஒரு நிகரனவாக உணர்ந்து பேசித் தீப்புக்க பூதப்பாண்டியன் தேவியினது செயல் நினைவுக்கு வருகிறது:

'பெருந்தோள் கணவன் மாய்ந்தநன் பின்றை
நள்ளிரும் பொய்கையும் தீயும்ஓ ரற்றே.'

என்று தீப்புகுவதினின்று தன்னைத் தடுத்த சான்றோரிடம் அவள் பேசினாள். இவ்வியல்பின் ஏற்றமுணர்ந்து போற்றிய தமிழ்ப் பண்பின் வழி வந்த கம்பர், சீதையிடம் அதற்கேற்ப ஓர் அரிய பண்பை அமைத்துவிடுகின்றார். இராமன் கானம் புகுமுன் சீதையிடம், 'நீ காட்டிற்கு வரவேண்டா. கல் அரக்கும் கொடுமையது அது; நின் பஞ்சின் மெல்லிய சேவடியைக் குத்தி வருத்தும். இங்கு இன்பம் துய்த்திரு. நான் மட்டும் செல்வேன்,' எனக் கூறினான். அப்பொழுது சீதையின் மனம் என்ன எண்ணியது? 'கணவனைப் பிரிந்து அரண்மனையில் இன்பம் துய்ப்பது தகாது. அது துன்பமே தரும். அவனுடன் சேர்ந்து துய்க்கும் துன்பம் இன்பமாக மாறி மகிழ்வுறுத்தும். ஆகவே, பிரிந்து இன்பச் சூழலிடையிருந்து துன்புறுவதினும், சேர்ந்து துன்பங்களை இன்பமாகக் கொள்வதே மேல்,' என்று அவள் காதல் உள்ளம் கூறுகிறது. அந்நிலையிலே சீதை இராமனைப் பார்த்து, 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு?' எனக் கேட்கின்றாள்.

இதனை இவ்வாறு சொல்லும் கம்பர் தமிழர் மணவாழ்க்கையின் இயல்பினை நன்கு நினைத்திருக்கின்றார். கற்புடைய மகளிர்க்குக் கணவனோடு வாழ்வில் வாழ்தலும் சாவிற்சாதலும் ஆகிய இரண்டுமே கழிபேரின்பந்தருவன. அவனைப் பிரிந்து வீட்டிடையிருந்து இன்புறுதலினும், காட்டிடைச் சேர்ந்து நின்று துன்புறுவதே மேல் என்ற கருத்து மகளிர்க்குப் புதுவதன்று. அது தமிழ் நாட்டுப் பெண்டிர்க்கு வழிவழியுரிமையாய் வளர்ந்து

வரும் பண்பாடுபற்றியதாகும். தலைவன், தலைவிக்கு உடன்போக்கு இடர்பல தருவது என்ற கருத்தால், அவளை விட்டு நீங்கக் கருதினன்; தோழியிடம் தன் உள்ளக் கருத்தையும் சொன்னான். தோழி அதனை ஏற்கவில்லை. 'நும் பிரிவினும் சுடுமோ தமியேற்கு மனையே?' என்று அவனிடம் கேட்கிறாள். இந் நிகழ்ச்சி குறுந்தொகை என்னும் சங்க நூலிலே காட்டப்பட்டிருக்கிறது.

சனகன் மகளாய் மிதிலையில் வந்து பிறந்தாள் சீதை. அவளது வடிவழகைத் தொடக்கத்திலே மிகவுயர்த்திக் காட்டுகின்றார் கம்பர். 'பொன்னின் சோதி, போதினில் நாற்றம், தேனின் தீஞ்சுவை, செஞ்சொற்கவி இன்பம் என்ற இவை யாவும் திரண்டு உருவெடுத்து வந்தன என்று சொல்லுமாறு உள்ளாள் அவள்,' எனக் கூறுகின்றார் கம்பர். இங்ஙனம் சீதையது வடிவழகை அறிமுகப்படுத்திய கம்பர், பின்னர், 'மற்றைய பெண்களையெல்லாம் அழகிலே வென்று விளங்கினாள் சீதை,' என்று வடிவழகின் முடிவெல்லையிலே கொண்டுவந்து நிறுத்திக் காட்டுகின்றார். அவ்விடத்தும் குணவழகைத் தமக்கேயுரிய தனிப்பட்ட முறையில் பாராட்டிய பிறகே வடிவழகை வியக்கின்றார்.

> "குணங்களையென் கூறுவது? கொம்பினைச்சேர்ந் தவையுய்யப்
> பிணங்குவன; அழகிவளைத் தவம்செய்து பெற்றதுகாண்!
> கணங்குழையாள் எழுந்ததற்பின் கதிர்வானில் கங்கையெனும்
> அணங்கிழியப் பொலிவிழந்த ஆறுெத்தார் வேறுற்றார்."

'கங்கையம்பேரியாறு மண்ணிடைப் பகீரதன் என்பவனால் கொண்டுவரப்பட்ட பின், மற்றைய ஆறுகள் யாவும் பெருமை இழந்தன. அஃதே போல, சீதை தோன்றிய பின்னர் மற்றைய சிறந்த மகளிர் யாவ

ருமே சிறப்பிழந்தனர். எனவே, மற்றைப் பெண்கள் எவ்வளவு அழகுடையவர்களாயினும், அவர்களையும் விஞ்சி விளங்கும் பேரழகினள் சீதை,' என்பது இக்கவியின் கருத்தாகும்.

இவ்வாறு, சீதையைக் குணவழகிலும் வடிவழகிலும் மணி முடியாய்க் கொண்டு நிறுத்திய கம்பர் அவளது குணவழகின் பெருஞ்சிறப்பை மேலும் விளக்குவாராயினர். பெண்டிர்க்கமையும் பெருங் குணங்களிலே உயிரே போல்வது கற்பென்னும் அருங்குணம். 'கற்பெனப்படுவது பிறர் நெஞ்சு புகாமை,' என்பது தமிழர் அறம். சீதையை இராவணன் காமத்தால் பேணி எடுத்துச்செல்கிருன் என்பது கதை. எனினும், ஒல்லும்வகையால் கம்பர் சீதையைப் பிறர் நெஞ்சு புகாத செல்வியாகவே காட்டுகிருர். அதற்கென அவர் மேற்கொள்ளும் கதைமாற்றமும் கருத்தின் செம்மையும் மிகவும் நலம் பாடுடையவாகும். பிற்பட்டு முறுகி வளரும் கற்புக்கான மனநிலை, நெஞ்சு நிறை: அதாவது, உள்ளத் துணிவு. மணம்புரியத்தக்க கன்னிப்பருவத்திலேயே அவளிடம் அத்துணிவு இருந்தமையை நன்கு சிந்திக்கிருர் கம்பர். கம்பர் கண்ட சீதை, இராமன் வில் முரித்தமைக்காக அவனை மணம்புரிய இசைந்துவிடவில்லை. முனிவருடன் தெருவூடே அவன் சென்றபோது கண்வழி நுழைந்த கள்வனே அவன் என்ற காதலாலேயே அவனை மணக்க ஒருப்படுகிருள். இதற்குமாருக நாம் கம்பரிடம் கேட்டறிவது இல்லை. 'இராமன் வில்லை முரித்த நிலையில் சீதை இத்தகுதியையே பெரிதும் கருதினள்,' என்று கம்பர் கூறுகிருர். சீதையிடம் கண்ட இவ்வுள்ளத் துணிவுதான் பின் கற்புத்தெய்வமாக அவளை நாம்

காண வித்திட்டுச் செல்கிறது.

'உன்னோடு சேர்ந்து துன்புறுவதே எனக்கு இன்பம்,' என்றல்லவா சீதை சொன்னாள்? அப்படியே நாயகன் நாடிழந்தான் என்ற வருத்தம் அவளுக்கில்லை; வனம் மேவலுற்றான் என்றும் துயருற்றாள் அல்லள். காட்டிலும் கணவனைப் பிரியாது உடனுறையும் இன்பவாழ்வு அவைகளை மறக்கச் செய்தது. இதை மிகச் சிறிய நிலையில் சித்திரிக்கின்றார் கம்பர். காடு செல்லும் போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைத் தீட்டுகின்றார். காதல் முறுகி வளர்ந்த நிலையிலே காதலிக்குக் காணும் இயற்கைக் காட்சிகள் யாவும் காதலன் நினைப்பையூட்டி இன்புறுத்தும். காதலனுக்கும் அப்படியே. அவைகள் காதலியின் நினைப்பையூட்டித் திகழும். தண்டகாரணியத்தில் நாடு நகரங்களையும், உற்றார் உறவினர்களையும், அரச செல்வத்தையும், நினைப்பின் படியொழுகவல்ல பணி மக்களையும், பிற இன்பவாழ்விற்கான எவ்வகைப் பொருள்களையும் பெறுதற்கு இயலாதுகொடுவிலங்கும் சுடுவெயிலும்நிலவும்கானக வாழ்வில் ஓர் இன்பக் காட்சியைச் சமைக்கின்றார் கம்பர்.

அன்னம் ஒன்று சீதையைக் கண்டு விலகி ஒதுங்கிற்று. இராமன் அக்காட்சியைக் கண்டான். சீதையது நடையைக் கண்டு வெட்கித்தான் அது மறைந்தொதுங்குகின்றது என்று கருதினான் அவன். உடனே சீதையது நடையை ஒப்பு நோக்கிச் சிறிய முறுவல் பூத்தான். இப்படி இயற்கைக் காட்சியும் இராமனுக்குச் சீதையின் நினைவூட்டியதை நமக்குக் காட்டுகின்றார் கம்பர். அது போலவே, சீதை ஓர் ஆண் யானை நடந்து போவ

தைக் கண்டாள். அது இராமன் நடையோடு போட்டியிடும் அளவிற்கு 'வந்து, பிறகு தோற்று விலகுகிறதாக அவள் காணவில்லை. இராமன் நடை கண்டு அதுபோன்று நடக்க நினைந்து அப்படியே நடக்க முயலுவதாகத்தான் அவளுக்குத் தோன் றிற்று. உடனே அவள் ஒரு புதிய முறுவல் செய் தாள். இப்படி அவர்கள் வாழ்க்கையிலேயே இன்ப நிலைக்களமான ஓரிடம் இது என்று சொல்லிவிடும் படி இதனை அமைத்தார் கம்பர்:

'ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்;
மாதவள் தானும் அங்கு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்.'

இராவணன் சீதையை வஞ்சனையால் கவர்ந்து செல்கின்றான். மயிர் பிடித்திழுத்துச்சென்றதாகச் சொல்லும் முன்னைய இராமாயணம். அப்போக்கில் சிறிய மாறுதல் செய்தார் கம்பர்; தமிழ் மரபிற்குத் தகப் பெண்மைக்கு மேன்மை ஏற்றினர்: இலக் குவன் தொடுத்த பன்னசாலையோடு பெயர்த் தெடுத்துச் சென்றதாகக் காட்டினர்; இப்படி இராவ ணன் தீண்டாது எடுத்துச் சென்றதாக மாற்றம் காட்டியதைச் சடாயு அனுமன் என்ற இருவர் வாயிலாக இராமன் உணருமாறு அமைக்கின்றார். இவை யாவும் நம்மால் பெரிதும் போற்றத்தக்கனவாகும்.

இவ்வளவு சீரிய கற்பின் செல்வி அசோக வனத்தில் தனித்திருந்து துயருறுகையில் அவள் வடிவழகின் நலம் மாசடைந்து தோன்றுகின்றது. அநங்கவேள் செய்த ஓவியம் புகையுண்டதொப்ப அழகிழந்திருக்கிறாள்; வெயிலிடைத் தந்த விளக் கினைப் போல ஒளியிழந்து காண்கிறாள்; கண்ணீர்

கரிய காண்டலும் கணவனை நினைந்து கண்ணீர் கடல் புகப் பெருக்குகிறாள். பழைய நினைவுகள் ஒன்றையொன்று அடுத்து வந்து அவளைத் துன் புறுத்துகின்றன. இப்படியெல்லாம் தனித்திருந்து வருந்தும் போது அவள் வடிவழகு குறைகின்றது. எனினும், அவள் குணவழகு எல்லை மீறி ஒளி வீசி அவளைத் தெய்வ நிலைக்கு ஏற்றிவிடுகிறது. இவ் வுண்மைகளைக் கம்பர் கலைத்திறம் விளங்க மிக அழகாக எடுத்து விளக்குகின்றார்.

அந்நிலையிலும் சீதையது கருத்திலே, 'இரா மனைப் பிரிந்து நாம் வருந்துகிறோமே!' என்ற தன் னல எண்ணமில்லையாம். 'நாம் பிரிந்து அவன் வருந்த நேரிட்டதே!' என்றுதான் அவள் கலங் கினாள்; 'இராமன் அருந்தும் மெல்லடகு யாரிட அருந்தும்?' என்று வருந்தினாள்; 'விருந்து கண்ட போது என் செய்வானோ!' என விம்மினாள். உண் மைக் காதலின் இயல்பு இங்ஙனமே இருக்கும்.

இங்ஙனம் குணவழகின் குன்றா விளக்கமாகச் சீதையை நிறுத்திய கம்பர், பின்பு அவளிடம் கடவுட்காட்சியையும் ஏறிட்டுக் காட்டுகின்றார். அது பேரழகு பயப்பதாயிருக்கிறது. குணங்களாலும் சிறந்து கற்பு நிலையிலும் உயர்ந்து விளங்கும் பெண், கடவுள் தன்மை பெற்றுப் பிறகடவுளரும் வணங் கும் பெருமையும் பெறுவள். இது தமிழர் கண்ட கற்பு நலம். கண்ணகியின் கற்பின் முன்னே கடவுளும் அஞ்சியொதுங்கி நின்று ஏவல் கேட்ட செய்தியைச் சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியம் தருகிறது. அம்முறையிலே கம்பர் கண்ட அனுமன், சீதையது மனக்கற்பையே தவம் என்று துணிகிறான்; 'இத்தவத்தின் முன் புலன்களை

வீக்கியும் வெந்துயர் நோற்றும் செய்யப்படும் தவம் நிற்கலாற்றுமா?' என வியந்து போற்றுகின்ருன். பெருவீரனை அனுமனைக் கற்பின் செல்வியாகிய சீதையின் திருமுன்பே தலை பணிய வைக்கின்ருர் கம்பர். அனுமன் இலங்கையில் கண்ட சீதையை, 'என் பெருந்தெய்வமையா!' என்று இராமனிடம் கூறும் முறையில் வாயார வாழ்த்துகின்ருர். கணவனை நினைந்து தவம் புரியும் ஒரு பெண்ணைக் கண்டதாகவே அவன் கருதவில்லை; குணவழகும் தெய்வக் கற்பும் களிநடம் புரியும் காட்சியைக் கண்டதாகக் கூறுகின்ருன்; அவளைத் தவம் செய்த தவமாக எண்ணுகின்ருன். இராமன் தவம் செயத் தவம் செய்த தவம் என்ன என்று சூர்ப்பணகை இராமனைப்பற்றிக் கருதிய கருத்திற்கு மிகப் பொருத்தமாய் இஃது அமைந்திருக்கிறதல்லவா? இனி அப்பாடல்களைப் பார்ப்போம்:

'விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்:
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்!

'உன்பெருந் துணைவி யென்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரு மருகி யென்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன்பெருந் தனையை என்னும் தகைமைக்கும் தலைமைசான்ருள்
என்பெருந் தெய்வ மையா! இன்னமும் கேட்டி,' என்ருன்.

'வேலையும் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார் விண்தோய்
காலையும் மாலை தானும் இல்லதோர் கனகக் கற்பச்
சோலையங் கதனில் உம்பி புல்லினுல் தொடுத்த தூய
சாலையுள் இருந்தாள் ஐய! தவம்செய்த தவமாம் தையல்.'

இங்கே கம்பர் அமைத்த கலைக் கோயிலைக் காணுங்கள்! இலங்கை நகரில் ஒரு கோயிலைக் கட்டு

கிருர். கோயில் கனகக் கற்பகச் சோலையாய் அமை கிறது. அக்கோயிலின் கருவறையாக இலக்குவன் புல்லினுல் தொடுத்த சாலையையே அமைக்கின்ருர். அக்கருவறையில் கடவுட்கோலங்கொண்டு விளங்கு கின்ருள் தவம் செய்த தவமாம் தையல். அக் கடவுளைத் தன் பெருந்தெய்வம் எனப் போற்றி வணங்கி அழியா நிலை பெறுகின்ருன் அனுமான். கடலின் மறு கரையில் வீடணன் இராமனது குண வழகைப் பருகி மகிழ்ந்து பணிந்து, இராமனுல்,

‘ஏழிரு டேழாய் நின்ற உலகும்என் பெயரும் எந்நாள்
வாழும்நாள்? அன்று காறும் வாளெயிற் றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே; தந்தேன்!’

என்று வாழ்த்தப்பெறும் நிகழ்ச்சி நடைபெறுவ தற்கு முன்பே தீவினுள் கற்புக் கடவுளை வணங்கிய அனுமன் அத்தகைய பேரருளைப் பெறுகின்ருன்;

‘ஊழியோர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் ஏழும்
ஏழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருந்தி!’

எனச் சீதை வாயால் வாழ்த்தப் பெறுகின்ருன். இவ்வாறு கோயிலை அமைத்து வரம் பெறும் வகை யையும் காட்டுகின்ருர் கம்பர்.

இப்படித் தொடக்கம் முதல் இறுதிவரை கம்பர் தமிழர் பண்பாட்டிற்கு இயையும் முறையிலே பெண்மை நலம் கண்டு பாராட்டுவதுடன் அவற்றைப் படிப்படியாக அழகுறுத்தும் முறையில் விடாது கூறி வற்புறுத்தியுள்ளார். இதனுலேயே, ‘கம்பர் கலையே கலை!’ எனப் பிற்காலத்தார் பாராட்டுவர். ஒவ்வொரு கதைப் பாத்திரத்தையும் அவர் உருவகப்படுத்தும் அழகினை நாம் காண முயல வேண்டும். அவ்வாறு முயன்று கண்டால்,

கம்பரது பெரும்புலமை ஆற்றலும், சீரிய கலை வளமும், கருத்தமைதியும் ஆகிய இன்னோரன்ன யாவும் இணையற்று மிளிர்வது காணலாம்.

இனிக் கம்பர் உவமைகளைக் கையாளுந்திறத்தில் ஒரு சிறிது கூறி, அவர் கலைச் சிறப்பை விளக்கு வோம்: கம்பர் உவமை கூறும் வகை அவருக்கே உரிய இணையற்ற கலைத்திறமாகும். கருத்தாழ முடைய உவமைகள் பல. அவ்வுவமைகளையும் இடத்திற்கேற்ப அவர் மாற்றியமைக்கும் திறம், மிகவும் போற்றுதற்குரியது. மிகச் சிறந்த உவமை என்று கண்டால், அதனைப் பல இடத்தும் எடுத் தாள அவர் தவறுவதில்லை. ஓரிடத்தில் ஒருவமை கூறிப் பிறிதோரிடத்தில் அதைச் செப்பம் செய் தமைக்கும் திறத்தை எண்ணினால், சிற்பத்தின் அழகிலேயே வைத்தகண் வாங்காது மனமொன்றி நிற்கும் சிற்பியாய் அவர் நிற்பதை நாம் உணர முடியும்.

விசுவாமித்திரர், தசரதனிடம் அரக்கர் கொடுமையை ஒழித்துத் தாம் புரியும் வேள்வியைக் காப்பதற்கு இராமனைத் தருமாறு வேண்டுகிறார். தசரதன் இராமனைப் பிரிய மனமில்லாது மயங்கு கிறான்; 'இராமன் சிறியவன்; படை வலி பெறா தவன்; அரக்கரையொழிக்க நான் வருகிறேன்,' எனக் கூறுகிறான். விசுவாமித்திரர்க்குச் சினம் பொங்குகிறது. இந்நிலையில் வசிட்டர் இராமனை விசுவாமித்திரருடன் அனுப்புவதால் அவனுக்கே நன்மை என வெளிப்படையாகவும், உலகிற்கே பெருநன்மை எனக் குறிப்பாகவும் விளங்கக்கூறித் தசரதனைத் தேற்றுகிறார். வசிட்டர் அவ்வாறு கூறு மிடத்து,

'பெய்யு மாரியால் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய! நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே.'

'விசுவாமித்திரரால் இராமன் அளவற்ற விஞ்சைகளை அடையும் காலம் நெருங்கியது. ஆகவே, நன்மை வருவதைத் தடை செய்யாதே,' எனத் தசரதற்குக் கூறுவார், 'மாரியாற் பெருகிய வெள்ளம் வேலைவாய் முடுகுமாறு போல்' என அழகும் பொருளாழமும் மிக்க உவமையொன்றைக் கூறுகிறார். 'இராமனைச் சிறியவன் என்று எண்ணி மயங்குவது தவறு; அவன் எல்லாம் வல்ல இறைவன்' என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார். மாரி அவ் வெள்ளத்தை எங்கிருந்து பெற்றது? கடலிலிருந்தே அன்றோ? கடலிலிருந்து எழுந்த வெள்ளம் மாரியின் வாயிலாய் உலகிற்கு நன்மை செய்து மீண்டும் அக்கடலையே அடைக்கலம் புகுவதுபோல, எல்லாக் கலைகளும் எவனிடமிருந்து தோன்றினவோ, அவனையே அடைதல் இயல்பு என்பதைக் குறிக்கும் வகையால் இராமனது இறைமையைக் குறிப்பாக உணர்த்துகின்றார் வசிட்டர்.

விசுவாமித்திரர் தசரதனிடம் இராமனைக் கேட்டபொழுது இராமன்மேல் வைத்த எல்லையற்ற அன்பால் அச்சொல் தசரதனுக்குக் கொடுந்துயர் விளைப்பதாய் இருக்கின்றது. அதனை,

'எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பியசொல்
மருமத்தின் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையில் கனல்நுழைந்தா
லெனச்செவியிற் புகுத லோடும்'

என்று உவமை கூறுகின்றார் கம்பர். 'எறிவேல்

பாய்ந்த புண்' என்ற உவமை முன்னமே தசரதன் பெற்றிருந்த சாப நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. இதே உவமையைப் பிறிதோரிடத்தில் மாற்றியமைக்கின்றார். கைகேயி மந்தரையின் சூழ்வினையால் மனம் மாறித் தசரதனிடம் இராமன் பதினான்கு ஆண்டுகள் காடேகவும் பரதன் நாடாளவும் வரம் வேண்டும் பொழுது, இந்த நெடுஞ்சொல் அவ் வேலை கூறுமுன்னே 'வெந்த கடும்புண்ணில் வேல் நுழைந்த தொப்ப'த் தசரதன் கலங்கினான் என உவமையை மாற்றி அமைக்கின்றார் கம்பர். இச்சிறிய மாற்றத்தில் விளையும் பொருள் நயம் வியப்பின் எல்லை கடந்ததாயிருக்கிறது! வேல் பாய்ந்த புண்ணில் கனல் நுழைவது கொடுந்துன்பம் விளக்குமாயினும் அதுவே புண்ணைப் போக்கும் மருந்தாகவும் அமைவதுண்டு. நஞ்சினைத் தீர்ப்பதற்குச் சுடுவதும் ஒரு மருத்துவ முறையாகும். வாளால் அறுத்தலும் சுடுதலும் பழந்தமிழர் அறிந்த மருத்துவ முறைகள். விசுவாமித்திரர் சொல்லால் விளைந்தது தசரதனுக்குத் துன்பமாகத் தோன்றினாலும், முடிவில் மணவினை நிகழ்ச்சியுடன் இன்ப நிறைவை எய்துவிக்கின்றது. ஆனால்,கைகேயியின்சொல்லோ, தசரதனை மீளாத் துயரத்திற்கு ஆளாக்கிவிடுகிறது. அதனை மாற்றி அமைத்த உவமை நன்றாகக் காட்டுகிறது. வெந்த புண்ணில் வேல்நுழைந்தால், அதுவும் நஞ்சு தீட்டிய வேல் நுழைந்தால், உய்வேது? இவ்வாறு உவமையை மாற்றியமைத்து இருவர் சொல்லிற்குமுள்ள வேறுபாட்டை மிக அழகாக விளக்குகின்றார் கம்பர்.

மந்தரையின் சூழ்வினையால் அருள் வற்றிய கைகேயியின் உள்ளத்திற்குக் கம்பர் 'மரம்போல்

நெஞ்சினள்' என மரத்தை உவமை கூறு கின்றார். மரம் கல்லினும் இரும்பினும்வலியதென்று கருதியா அவ்வாறு கூறினார்? இல்லை. அவ்வுவமை யால் மிகச் சிறந்த கருத்தை விளக்குகின்றார். மரம் ஒருகால் பசுமையோடிருந்து மற்றொருகால் பிறி தொரு காரணத்தால் பட்டுப் போய்விட்டது. எனவே, முதலில் இராமன்பால் அன்பு கொண் டிருந்து பிறகு மந்தரையின் தூண்டுதலால் வன்பு கொண்ட கைகேயியின் நெஞ்சத்திற்கு அதுவே பொருத்தமான உவமையெனக் கண்டார் கம்பர். தசரதன் எவ்வளவு கெஞ்சியும் உணர்ச்சி கொள் ளாத உள்ளத்திற்குத் தட்பவெப்பங்களைப் புறத்தே காட்டாத மரந்தானே மிகப்பொருந்துவதாகும்?

இராமன் பதினான்கு ஆண்டுகள் நாடு துறந்து காடேக வேண்டுமென்ற ஆணையைக் கைகேயியால் பெறுகிறான். அப்பொழுது அவன் சிறிதும் வருந்தினானல்லன்; 'பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?' எனவே கூறி மகிழ் கின்றான். அம்மகிழ்ச்சியைவிளக்குதற்கு, 'இராமன் திருமுகம் அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றது,' எனக் கூறினார் கம்பர். இவ்வாறு கூறிய கம்பருக்குப் பிறகு தானாகவே ஐயம் தோன்றியதோ, வேறு யாரேனும் அவ்வையத்தை உண்டாக்கினார்களோ, 'அப்பொழுதலர்ந்த செந்தா மரை எப்பொழுதாயினும் வாடிவிடுமே! அதுபோல இராமனும் காட்டில் துன்புற்ற பொழுது அவ் வாணைக்கு இணங்கியதற்கு வருந்தினான் என்ற பொருள் ஏற்பட்டுவிடுமோ!' என எண்ணினார். இதற்குள் கதை சென்றுகொண்டேயிருந்தது. பாலகாண்டத்தில்அவ்வுவமையைக் கூறியவர்சுந்தர

காண்டத்தில் சீதையின் நினைவில் அதனை அழகாகச் செம்மை செய்து மனக்கவலை தீர்கின்றார் :

'மெய்த்தி ருப்பதம் மேவென்ற போழ்தினும்
இத்தி ருத்துறந் தேகென்ற போழ்தினும்
சித்தி ரத்தின லர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருக்கும் முகம்.'

இவ்வாறு அலர்ந்த செந்தாமரையைச் சித்திரத் தாமரையாக அமைத்து, இராமனது மாறா உள்ளத்தை விளக்குகின்றார். கம்பர் இவ்வாறு உவமைகளால் விளைத்த விந்தைகள் பலப்பல.

தாம் பிறந்த நாட்டாலும் ஊராலும் பெயர் பெற்ற புலவர் பலர் தமிழ் நாட்டிலே உளர். கம்பரோ, தாம் பிறந்த தகவால், 'கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்று நாட்டிற்கு நற்புகழ் தந்து சென்றவர். தமிழ் மொழியைப் பயின்று அதனால் புலமை படைத்துப் பெருமை பெற்ற பிற புலவர்களைப் போல்பவர் அல்லர் கம்பர்; 'கம்பன் தமிழ்' என்று நாம் பாராட்டுமாறு தமிழுக்கே சிறப்பளித்த தமிழ் வள்ளல். இங்ஙனம் செயற்கரிய செய்து சென்ற கம்பரைத் தமிழுலகம் 'பெரியோர்' என்று மட்டும் கூறுகிறது; உலகம் 'பெருங்கவிஞர்' என்றே புகழ்கின்றது. அவர் இயற்றிய இராமாயணம் அவரது புகழ்ச் சின்னம்; அறிவுக் களஞ்சியம்; அன்பின் திறவுகோல். இதனைப் போற்றி மகிழ்வது நமக்கேயுரியது. உரிமையிழப்பது அறிவுடைமை ஆகாது. ஆகவே, கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்!

இரண்டாயிரம் ஆண்டுகட்டு முன் புலமை வானில் பேரொளியாய்த் திகழ்ந்தவர் வள்ளுவர். அவர் பொதுமக்கட்கு மட்டுமன்றிப் புலவர்கட்கும் வழி காட்டியாய் விளங்கினர். முழுவுரிமையும் பெற்றுக் கலைப்பண்பும் சிறந்து வாழ்விற்குரிய வளமெலாம் துய்த்து வாழ்ந்த தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, அந்நாளில் அத்தகைய பேறு பெருதிருந்த உலகின் பல நாட்டு மக்களுக்கும் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிகாட்டும் பேராசிரியராய்ப் பெரும் புகழ் கொண்டு விளங்கினர்.

காலம் சுழன்றது. உலகம் வாழ வழி காட்டிய நம் நாடு தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றது. மக்கள் கலைகளை மறந்து நிலைதடுமாறி நின்றார்கள். மொழிப் பற்றும் குறைந்தது. இந்நிலையில் உலகத்திற்கே பேராசிரியரை நல்கிப் புகழ் கொண்ட தமிழகம், தனக்கே ஒரு நல்லாசிரியரை வேண்டித் தவித்தது. வள்ளுவர் தோன்றிய இரண்டாயிரம் ஆண்டுகட்குப் பின் காலத்துக்கேற்ற ஒரு புதுமைச் சிற்பியைத் தமிழகம் பெற்றது. அப்புதுமைச் சிற்பியே புரட்சிக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். நாட்டில் விடுதலை உணர்ச்சி வீறு பெறவும் செந்தமிழ்ச்சோலை செழுமைபெற்றேங்கவும் செய்யும் பேராற்றலுடன் தோன்றினர் அவர். வள்ளுவர் அந்நாளில் எவ்வாறு புலமைக்கும் கவிதைக்கும் வழி காட்டியாய் நின்றாரோ, அவ்வாறே பாரதியார் இந்நாளில் கவி மரபிற்குப் புது வழி காட்டியாய் நின்றார்.

பாரதியாரும் வள்ளுவருமாகிய இருவரிடமும் அமைந்துள்ள இலக்கியச் சிறப்புக்களுள் ஒன்றான சொற்சுருக்கம் பற்றி ஓரளவு அறிவிக்க வேண்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். திருவள்ளுவர்க்குரிய சிறப்புக்கள் பல திறத்தன. வள்ளுவனார் சாதி சமய வேறுபாடு கடந்து, எல்லாரும் போற்றும் தெய்வக்குறள் நூலை இயற்றினார். அஃது அவரது காலங்கடந்த எதிர்கால நோக்குத் திறனை நமக்கு நன்கு எடுத்துக் காட்டும். அனுபவ முதிர்ச்சியால் தாம் கண்டுணர்ந்த அறநெறிகளைத் தெரிவிக்கும் நீதி நூலை இயற்றியது, மன்பதைமீது அவர் கொண்ட கருணைக்கும் அவரது உயரிய மன நிலைக்குமே நல்லதொரு சான்றாய் நிற்கும். அவர் எச்சமயத்தாரும் போற்றுமாறு 'ஆதி பகவன்' என்னும் பொதுமைப் பெயரால் இறைவனைச் சுட்டி வாழ்த்தி, நமக்கு வாழ வகை காட்டியதும், சமய நெறியில் அவருக்குள்ள பொது நோக்கின் தகைநலத்தினையே நமக்குக் காட்டும்.

இன்னும் பெருமை பல சொல்லலாம். இவற்றை எல்லாம் விடுத்து வள்ளுவரை ஒரு சீரிய தமிழ்ப் புலவர் என்னும் முறையிலே வைத்து அவரது குறள் நூலை இலக்கிய நெறியிலே முற்றும் உற்று நோக்கினால், நாம் காணக் கிடப்பது என்ன? நாம் மட்டும் அன்றி, நம் முன்னோர்களாகிய பேரறிவாளர்கள் கண்டுணர்ந்து கூறியுள்ளவை யாவை? இவற்றை ஆராய்ந்தால், ஓர் உண்மை நமக்கு நன்கு தெரியும். அதுதான் குறள் நூலுக்கு இலக்கிய அளவிலே யாரும் மனம் ஒன்றி உரைக்கும் பாராட்டுரையாகும். சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் ஒருங்கு அமையப் பெற்றுத் திட்பநுட்பங்களுடன் செறிந்து

விளங்கும் செய்யுள் நடை பயின்றிருப்பது அவ்வாறுள்ள இலக்கியச் சிறப்புக்களுள் ஒன்று; மற்றொன்று, குறிப்பு வெளிப்படை முதலியவற்றால் பொருளுணர்த்தி, அவரவர் ஆற்றலுக்குத் தக்கவாறு எளிமையும் பெருமையும் புலப்பட நிற்கும் கவி நிலை பற்றியது.

ஒரு பெரியார், வள்ளுவனாரைத் திருமாலுடன் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார். இவ்வாறு, அவரிடம் கடவுளியல் காட்டிப் பேசும் அவர், வாமனாவதார வைபவத்தை நினைவூட்டுகிறார். 'திருமால் குறள் உருவாய் வந்து வையத்தை அன்று அளந்தார். வள்ளுவனாரும் இரண்டடியுள்ள குறள் நூலால் மக்கள் மனக்கருத்துக்களை அளந்து சென்றிருக்கிறார்,' என்னும் கருத்தால், அப்பெரியார்,

'மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்;—வாலறிவின்
வள்ளுவர் ஒண்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து.'

என்று கூறுகிறார். எனினும், மாலினும் வள்ளுவர்க்கு ஏற்றம் மிகக்காட்டும் குறிப்பு இதில் உண்டு. 'தேவிற் சிறந்த திருமாலே,' என்று பெரியார்கள் பணித்ததோடு ஒப்ப, தேவருட்சிறந்தவர் திருமால்; மக்களுட்சிறந்தவர் வள்ளுவர். அளக்குங்கால் திருமால் திரிவிக்கிரமராய் வளர்ந்து தான் அளந்தார். குறளோ, குறளாகவே இருந்தது. அவர் அளந்தது தம் மாணடி இரண்டால்; வள்ளுவரோ, இரண்டடிக்குரிய எட்டுச் சீரும் இன்றி, ஒன்றே முக்காலடி என்று சொல்லும் தன்மை வாய்ந்த மிகச்சிறிய அடிகளையுடைய செய்யுட்களால் அளந்தார். மேலும், திருமால் அளந்தது

வரம்பிற்கு உட்பட்ட உருவப்பொருளாம் உலகினை ; வள்ளுவனார் ஒரு வரம்பினுக்கும் உட்படாதன வாகிய அருவப் பொருளாம் மக்கள் உள்ளக் கருத்துக்களை அளந்தறிந்து கூறுகிறார். இவ்வகையால், மாலினும் ஏற்றம் உடையராக வள்ளுவனாரைக் கூறும் அவர், சுருங்கிய சொற்களால் பல பொருள்களும் அடங்கப் பேசும் பெற்றிமையே காரணம் எனக்கொண்டு காட்டியது ஈண்டுச் சிந்திக்கத் தகும். இச்சொற்சுருக்க முறை அவரது கடவுள் தன்மையை விளக்கி நின்றது என்பதற்கு இதனினும் சிறந்த சான்று வேறு வேண்டுவதின்று.

குறள் நூலில் அவர் கையாண்ட சொற்சுருக்க முறைகளைப் பற்றி இங்கு நான் பலபடப் பேசுவது மிகை ஆகும். அது யாவரும் அறிந்ததே. சொல்ல வேண்டும் அளவு விளக்கமாக இனிய எளிய சொல்லாற் கூறலும் ; அவரிட்ட சொல்லை எடுத்து வேறு சொல்லை இட்டு அப்பொருள் காண முடியாதபடி இருத்தலும் ; தொனி குறிப்பு அணி முதலியவற்றால் தாம் கருதிய பல பொருளையும் அமைக்கும் ஆற்றலும் ; 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' போலக் கற்கக் கற்கப் பொருள் பல காணும்படி ஆழமுடையதாயிருத்தலும் ; எடுத்த பொருளுக்கு ஏற்றம் கூறும் முறையில் பிறிதொன்றிற்கு இல்லாத அளவு சிறப்புரைத்தலும் ; இன்னோரன்ன பிறவும் தெய்வத் திருமறையின் தனிப்பெருஞ்சிறப்புக்கள். இத்தகைய இலக்கியச் சிறப்பு நோக்கியே அவர் தெய்வப் புலவர் எனச் சிறப்பிக்கப்பட்டார்.

இனி இத்தகைய சிறப்புக்களுட்பெரும்பாலன அமையும்படி மற்றொரு நூல் இருக்குமானால், அந்நூலை நாம் எக்காரணங்கொண்டும் தாழ்ந்ததெனக்

கருதலாகாது. அதனை இயற்றிய ஆசிரியரையும் மதிப்பறியாது இகழ்ந்தொதுக்குவதில் பொருளும் பயனும் இல்லை. இப்படிப்பட்ட பொருட்சிறப்புக்கள் பலவுமே, பிறநூல்களில் அமையாத வகையில் எளிய நடை வாயிலாகப் பாரதியார் நூல்களில் அமைந்திருக்கக் கண்டால், அவரைப் பெற்ற தமிழ் நாடு பெருமைப்படவே வேண்டும்.

பாரதியார் வள்ளுவர் பெருமையினை உள்ளது உள்ளபடி உணர்ந்து பாராட்டியிருக்கின்றார். வள்ளுவர்போல் புலவர் யாங்கணுமே பிறந்ததில்லை என்று கூறுகின்றார். 'வள்ளுவர் நூலில் காணும் இலக்கிய நயங்களை எல்லாம் அவர் வேண்டும் என்றே அமைத்துப் பாடினரோ!' என்று கருதும்படி சொற்பொருள் நயங்கள் எல்லாம் பாரதியார் வாக்கில் அமைந்திருக்கின்றன. அதனை ஒரு சிறிது கவனிப்போம் :

'வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்பது அச்செய்யுள் அடி. இப்பகுதியே நமக்குப் போதுமானது.

தமிழ் நாட்டின் புகழ்ப்பெருமை சொல்லுவது இதன் கருத்து. 'வள்ளுவரை உலகிற்கு அளித்துப் பெரும்புகழ் கொண்டது தமிழ் நாடு,' என்று தமது கருத்திற்கேற்ற பொருளை இதில் அமைத்திருக்கிறார். இவ்வடிக்கு எல்லாரும் இந்த அளவிலேதான் பொருள் கண்டு மகிழ்கின்றனர்; இதற்குமேல் ஆராய்ந்து நுட்பங்காணற்குரிய பொருட்சிறப்பும் உண்டு.

ஒரு பொருள் சிறந்ததாய் இருந்தால், அதைப் பலரும் பெருமைப்படுத்திப் போற்றிப் புகழ்ந்து

பேசுவர். பிறரால் புகழப்படுதலே பெருமையின் அறிகுறி. 'தோன்றினுல் புகழொடு தோன்றுதல் வேண்டும்; புகழ்பட வாழ்தல் இல்லார் தோன்றலின் தோன்ருமை நன்று,' என்பர் வள்ளுவர்.

இவற்றை எல்லாம் நன்கறிந்த பாரதியார், தமிழ் நாட்டின் பெருமை கூறினுல், அது புகழுடையது என்று முதலிலே நாட்ட வேண்டாவா? துணிந்து அதைத்தான் முதலிலே சொல்லியாக வேண்டும் அவர். அப்படியே அவரும்,

'புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று தெரிவித்திருக்கிருர்.

புகழிலே பல வகையுண்டு. சிறிய புகழும் பெரிய புகழுமில்லையா? சிறு புகழினைத் தமிழ் நாடு கொண்டிருந்தால், அஃது எப்படிப் பெருஞ்சிறப்புடைய பெருநாடாகும்? பெரும்புகழ் கொண்டு சிறந்திருந்தாலன்ரே தமிழ் நாடு பெரும்பேரியல்பு பெற்றுப் புகழ் சிறக்கும்? இவ்வளவையும் நாம் கருத்தில் வைத்துக்கொண்டு, பாரதியாரை நோக்கி, "தமிழ் நாடு கொண்ட புகழ் பெரியதுதாஞ?" என்று கேட்டால், "ஆம்! அது கொண்டது உங்கள் கருத்துப்படி பெரிய புகழே ஆகும்!" என்று நமக்கு உடனே விடை அளிக்கிருர். இதனையே,

'வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்னும் செய்யுளடி நமக்குத் தெரிவிக்கிறது. 'வான்புகழ்' என்பது பெரிய புகழ்.

எது பெரிய புகழ்? ஒவ்வொருவரையும் கேட்டால் ஒவ்வொன்றையும் பெரிய புகழ் என்று வேறு வேறு சொல்லி நிற்பர். அதனை இன்னதுதான் என்று யார் நிச்சயிப்பது? பல பெரியார்களாலும் மாறுபாடின்றி ஒப்புக்கொள்ளப்பட்ட 'வான்புகழ்'

தமிழ் நாட்டிற்கு உண்டு என்று அவர் கூறிஞல் அன்றே தமிழ் நாட்டின் சிறப்பு அவர் சொல்லுகிற படி ஏற்றமுற்றதாகப் பொருந்தும்? 'அதை அறிந்து முறை பிசகாது சொல்லியிருக்கிருரா அவர்?' என்பது அடுத்தபடி நாம் பார்க்க வேண்டுவது.

'எது சிறந்த புகழ்?' என்று வள்ளுவரையே கேட்போம்:

'உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.'

என்று வள்ளுவஞர் எல்லாப் புகழினும் கொடைப் புகழே சிறந்தது என அறுதியிட்டிருக்கின்ருர்.

'கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்;
இடித்து முழக்கியதுஓர் யோசனையோர் கேட்பர்;
அடுக்கிய மூவுலகும் கேட்குமே 'சான்ருேர்
கொடுத்தார்,' எனப்படும் சொல்.'

என்பது நாலடியார். 'குறுந்தடி கொண்டு அடித்து ஒலி எழுப்பப்படும் முரசவாத்தியத்தின் ஒலியைக் காத தூரத்தில் உள்ளவர் கேட்பர். இடித்து முழங் கும் இடியோசையை அதனினும் அதிகமாக ஒரு யோசனைத் தூரத்திலுள்ளவர் கேட்பர். ஆஞல், தகுதியுடைய பெரியார் ஒருவருக்குக் கொடுத்தால், 'கொடுத்தார்' என்னும் அப்புகழோசையானது மூவுலகும் சென்று கேட்கும் வல்லமையுடைய தாகும்,' என்பது இச்செய்யுளின் கருத்து.

இப்படி எல்லாம் தெரிந்துகொண்டு, வான்புக ழாவது கொடைப் புகழே என நிச்சயித்து, 'இதனை நீர் கூறும் தமிழ்நாடு கொண்டிருக்கிறதா?' என்று பாரதியாரை நாம் கேட்டால், அதற்கும் அவர் தயங் காமல் விடை அமைத்து வைத்திருப்பவரைப்போல,

'தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று அந்த வான்புகழ் ஆகிய கொடைப் புகழையே குறிக்கும்படி 'தந்து புகழ் கொண்டது' என்றே அமைத்திருக்கிருர்.

கொடைக்குச் சிறந்த புகழ் உண்டு என்ருல், அதுமட்டும் போதுமா? கொடையிலும் சிறப்புடைய கொடையும் சிறப்பில்லாக் கொடையும் என இரு வகை உண்டு. தமிழ் நாடு சிறந்த கொடையளித் திருந்தாலன்ரே சிறந்த புகழ் பெறுவதற்குத் தகுதியுடையதென்று பேச முடியும்? அப்படி யாஞல், 'சிறந்த கொடை எத்தகையது?' என வள்ளுவரையே கேட்டறிந்து, அதனைப் பாரதியார் தமிழ் நாட்டின் சிறப்புரிமையாக அமைத்திருக் கிருரா என்று ஆராய்வது நமது கடமை.

வள்ளுவர் கொடைக்குரிய இலக்கணங்கள் பலவற்றையும் பின் வரும் ஒரே குறளில் அமைத் திருக்கிருர்:

'இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.'

கொடைக்குரிய சிறப்பிலக்கணமாக நான்கு கருத் துக்கள் இந்த ஒரே குறளில் வற்புறுத்தப் பெற்றி ருக்கின்றன.

'யாசகம் செய்து ஒருவனிடம் பொருள் பெற்ற இரவலன், மறித்தும் பிறரிடம் சென்று இரவாத வகையிலே மிகுதியாகக் கொடுத்தல் வேண்டும்,' என்பது ஒரு பொருள். இது 'பொருளை மிகுதியாகக் கொடுத்தல்வேண்டும்,' என்பதை வற்புறுத்துகிறது.

'தான் கையில் பொருள் வைத்துக்கொண்டே இல்லை என்று சொல்லிப் போக்குக் காட்டாமல் விரைந்து உவந்தீதல் வேண்டும்,' என்பது மற்ருெரு

பொருள். இது, 'கரவாது ஈதல் வேண்டும்,' என்பதை வற்புறுத்துகிறது.

"யாசகன், 'இல்லை' என்று தன் சிறுமை சொல்லி இரவாத முன்பே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் வேண்டும்," என்பது வேறு ஒரு பொருள். இது 'குறிப்பறிந்துஈதல் வேண்டும்,' என்பதை வற்புறுத்துகிறது.

'இன்று ஒருவனுக்குக் கொடுத்து, நாளை அவனிடம் சென்று, 'எனக்குச் சிறிது கொடு,' என்று கேட்கும் வகையில் இல்லாதபடி எதிர் உதவி கருதாமல் கொடுக்க வேண்டும்,' என்பது பிறிதொரு பொருள். இது, 'பயன் கருதாது ஈதல் வேண்டும்,' என்பதை வற்புறுத்துகிறது.

'இப்படிச் சிறந்த கொடைக்குரிய இலக்கணங்களை எல்லாம் இவ்வொரு குறளே கூறுவதாகக் கொண்டு இதற்கு உரை வகுத்தனர் **பரிமேலழகர்.** சிறந்த பொருளை வேண்டியவர் வேண்டாதவர் என்று பாராதபடி யாவர்க்கும் கொடுத்தலும் சீரிய கொடையின் சிறப்பியல்புகளுள் ஒன்று என்பதனையும் நாம் இங்கு நினைத்துக்கொள்ளுவோம்.

ஆயின், இவ்வளவு சிறப்பான கொடை இயல்புகளும் தமிழ் நாடு கொடுத்ததாகச் சொல்லும் கொடையிலே அமைந்துள்ளதாகப் பாரதியார் கூறியிருக்கிறாரா என்று அறிய நமக்கு ஆர்வம் தோன்றும். அதையும் கூறியிருக்கிறார்.

'..................உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்றது அவர் பாடிய செய்யுளடி. 'வள்ளுவரைத் தமிழ் நாடு தனக்கு மட்டுமே வேண்டும் என்ற

குறுகிய நோக்கம் கொண்டு தரவில்லை: உலகம் முழுமைக்குமே வளம் தரும் நோக்குடன் வள்ளுவரைத் தந்துள்ளது,' என்று அவர் சொல்லும் போது, தமிழ் நாட்டின் தன்னலம் கருதாத கொடை, பிறர்க்குதவும் உளப்பாங்கு ஆகிய இரண்டும் நன்கு வெளியாகும்படி செய்திருக்கிறார்.

பின்பு கொடையாகக் கொடுத்த பொருளின் பெருமையையும் அடுத்தபடியாக அவர்,

'வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று கூறி முடிக்கும் போது நம் உள்ளம் மிகக் களிக்கிறது!

'உலகில் மற்றவர்கள் கொடுக்கும் கொடைப் பொருளைப் போலத் தான் உபகாரப்படுதல் என்னும் நிலையில் மட்டும் அன்றித் திருக்குறள் நூலாகிய மற்றொரு சீரிய கொடையை அளிக்கக் காரணமாகிய வள்ளன்மையை உடைய வள்ளுவனைத் தமிழ் நாடு கொடுத்தது,' என்று கொடைப் பொருளின் பெருமையை 'வள்ளுவன்' என்ற சொல்லாட்சியால் நமக்கு அவர் நினைப்பூட்டுகிறார்.

இவ்வளவுடன் நிற்கவில்லை செய்யுள் நயம்! அடுத்து, 'தந்து கொண்ட தமிழ் நாடு' என்றதில் அவர் அமைத்துள்ள தொனிப் பொருளையும் சிறிது நோக்குதல் தகும். தொனியாற் பொருளுணருமாறு அமைத்தல் உத்தம கவிகள் இயல்பென்பது யாவரும் அறிந்ததொன்று.

'கொண்டு தருதல்' என்றும் 'தந்துகொள்ளுதல்' என்றும் இரு வழக்குகள் உலகியலிலே உள்ளன. 'கொண்டு தருதல்' என்றால், பிரதிப்

பிரயோசனத்தை எதிர்பார்த்துப் பலனை உறுதிப் படுத்திக்கொண்டு அதன் பின்னே கொடை தருதல் என்பதில் அதற்கு நோக்கு. அது நான்கு அணு வாங்கி ஒரு பலம் பாக்குத் தரும் வாணிப முறையை ஒத்தது; கொடையே அன்று. 'தந்து கொள்ளு தல்' என்றால், அதன் பொருள் அப்படி அன்று; தருதலிலேயேதான் அதற்கு முக்கிய நோக்கம்; வரும் பயன் தன்னடைவே வருவதாகக் கருத்தே ஒழிய, நோக்கம் பலன் பற்றிய கருத்து இன்மை அதிற்புலப்படும். 'புகழ் கொண்டு தமிழ் நாடு வள்ளு வனைத் தந்தது,' என்று அவர் கூறின், அது தமிழ் நாடு பயன் கருதிக் கொடுத்தது என்று பொருள் பட்டு, அதற்குக் குறையாகவே முடியும். ஆகவே, அதை விலக்கும் நோக்குடைய பாரதியார், தருதலை முன்னும், கொள்ளுதலைப் பின்னும் வைத்து, தமிழ் நாட்டின் கொடை, பலன் கருதாத கொடை என்பதை நினைவுறுத்துமாறு, 'தந்து புகழ் கொண் டது,' என்று காட்டியுள்ளதன் நயம் அளத்தற்கரி தாய் அமைந்துள்ளது. 'வள்ளுவரைத் தருதலி லேயேதான் தமிழ் நாட்டிற்கு நோக்கமே ஒழிய, புகழ் பெறுதலிலே இல்லை: புகழ் தன்னடைவே தமிழ் நாட்டிற்குப் பயன் கருதாக் கொடை செய்த தனால் வந்தது,' என்னும் கருத்தை இதைக் காட்டி லும் நன்றாக வேறு எவரால் எப்படிக் கூறமுடியும்?

மேலும், 'வள்ளுவனைத் தந்து புகழ் கொண் டது,' என்னாமல், 'வள்ளுவன் தன்னைத் தந்து புகழ் கொண்டது,' என்று அவர் கூறியதிலும், கருத்துப் பொருத்தம் மிகச்சிறப்புடையது. 'வள்ளு வனைத் தந்து புகழ் கொண்டது தமிழ் நாடு,' என்றாலே அவர்க்குக் கருதியது பயக்கும். பணம்

கேட்ட ஒருவனுக்கு, மற்றொருவன் 'பணப் பெட்டி தன்னையே தந்தான்' என்றால், நாம் கொள்ளுவது என்ன? 'கேட்டதற்கு மேலாக, தேவைக்கதிகம் தந்தான்,' என்போம். அது மட்டுமன்று; பிறகு ஒரு வேளை தேவையிருக்கும் பணத்திற்குங்கூடத் தன்னைத்தேடி அலைய வேண்டாதபடியும், அதைப் பெறப் பிறரிடம் சென்று வருந்திக் கால் நோவாத படியும் செய்து, தான் கொடுத்த அப்பணப் பெட்டியைக் கொண்டே யாவும் பெறும்படி அளித்த ஒரு பெருங்கொடையாளி என்று நாம் கருதும்படி, அவ்வாக்கியம் அவனது கொடையைச் சிறப்பிக்கின்றது. அம்முறையிலே, 'வள்ளுவன் தன்னையே தந்து' என்ற தொடரையும் நோக்கினால், உலக முழுதுமே வேறு எவ்வெப்பொருளை எவ்வெக்காலங்களில் விரும்பினாலும், அவற்றை அளித்த வள்ளுவரையே கொண்டடைவது தவிர, அது பிறரொருவரிடம் சென்று மீண்டும் இரக்க வேண்டாத வகையில் உள்ளதொரு கொடை கொடுத்த சீரிய நிலையினை உடையது தமிழ்நாடு என்று, அதிற்சிறப்பு அதிகம் உள்ளதைத் தெரிவிக்கிறது.

இவ்வளவு ஆழ்ந்த அரும்பொருள் அமைதிகளை மிக எளிய நடை பயின்ற சிந்துப் பாட்டிலே அமைத்துப் பாமரர்கட்குத் தெளிவும், பண்டிதர்கட்கு நுட்பமும் காணுமாறு நூலியற்றிய சமீப காலப் பெரும்புலவர் பாரதியார். இப்படியே, இன்னும் நடுவுநிலைமை மேற்கொண்டு பார்ப்போமானால், அவர் நூல்கள் நமக்கு வற்றாத நீரூற்றுக்கள் எனப் பொருள் சுரந்து நம்மை இன்புறுத்தும். கவி இன்பம் மற்றை இன்பங்களில் எல்லாம் தலை சிறந்தது. அதனை நுகர்தல் ஒவ்வொருவரது கடமையுமாகும்

ஆனால், இன்றைக்குத் தமிழிலே உள்ள வேறு நூல்களில் இன்பம் மிக்கிருந்தாலும், அவை நாம் நேரிலே கண்டு நுகரும்படி அவ்வளவு எளிமையுடையன அல்ல. அருமையோடு எளிமையும் பயின்று யாவரையும் மகிழ்விக்கும் திறத்திலே தலைமை சான்ற பாரதியார் நூல்களைப் படிக்க நமக்கு மற்றவர் தயவு வேண்டுவதில்லை. எத்தகைய பாவியாயினும் கடவுள் முன்னிலையிலே தனியொருவனாய்த் துதித்து மனமுருகி நிற்பவன் பேரானந்தம் அடைவது போல, தமிழ் மொழிப் பயிற்சியிலே எவ்வளவு தாழ்ந்தவனாயினும், அன்புடனும் ஆதரவுடனும் தனித்துத் திறந்து படிக்கத் தொடங்கிய அளவிலே அவனுக்கு இலக்கிய இன்பத்தினை ஊட்டிச் சுவை தருவன பாரதியார் நூல்கள். படித்துப் பயனடைய வேண்டுவது தமிழர் கடன். "தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார், இங்கு அமரர் சிறப்புக் கண்டார்," என்றார் பாரதியார். நாம் எல்லாம் தமிழமுதின் சுவை நுகர்ந்து அமர வாழ்வின் இன்பத்தை அடைவோமாக.

தமிழிசையின் இயல்பும் பண்களின் மரபும் மறைந்தொழிந்து பல நூற்றாண்டுகளாயின. இந் நிலையிலே அவற்றைப் பற்றிய நுண்ணிய செய்தி களையோ, அன்றிப் பெருமுடிபுகளையோ இன்று யாரிடமிருந்தும் எதிர் பார்க்க முடியாது. எனினும், 'தமிழிசை இயக்கம்' நல்ல வளர்ச்சியும் மலர்ச்சியும் அடையவேண்டுமானால், அதற்குப் பொது மக்களின் அன்பும் ஆதரவும் இன்றியமையாதன. ஓர் இயக் கத்தின் உண்மை இயல்பினைப் பலரும் நன்கு தெளிய, அவர்க்கு அது பற்றிய வரலாற்றுணர்ச்சி மிகவும் வேண்டற்பாலது. ஆகவே, தமிழிசை பற்றி வரலாற்று முறையில் அடங்கிய சில குறிப்புக்களை எடுத்துக்காட்டுவதன் மூலம் அவ்வியக்கத்தின் உண்மையுணர்ச்சியை ஓரளவு எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் மக்கள் படைப்புக் காலந்தொட்டே மிக்க நாகரிகம் வாய்ந்த பழம்பெருங்குடிகள். அவர்கள் பேசி வந்த தமிழ் மொழியும் அவர்களோ டொத்த பழம்பெருமை வாய்ந்துள்ளது. நம் முன் னோர் 'இயல், இசை, நாடகம்' என முத்திறப்படுத்தித் தமிழை வளர்த்து வந்தனர். இம்முத்திறப் பகுப்பு முறையின் நுணுக்கம் நம்மால் மிகவும் போற்றி மகிழ்தற்கு உரியது.

ஒருவன் மனத்துதித்த கருத்து, மற்றொருவன் மனத்துச் சென்று சேர்தற்கு உரிய கருவியே 'மொழி' என்பது. இவ்வியல்பினை நன்கு உணர்ந்து ஓசை காரணமாய் இயன்ற பகுதியை 'இயல்' என்

றும்; இசை காரணமாய் இயன்ற பகுதியை 'இசை' என்றும்; ஓசை, இசை, அசைவு என்னும் மூன்றன் காரணமாய் இயன்ற பகுதியாகிய கூத்தினை நாடகம்' என்றும் பாகுபாடு செய்துள்ளனர் நம் முன்னையோர்.

பழங்காலத்தில் இம்முத்திறத்தினும் தேர்ச்சி பெறுவதையே மொழிப் புலமையின் அறிகுறியாகக் கருதி வந்தனர். 'முத்தமிழ்த் துறையின் முறை போகியவரே உத்தமக் கவிகள்,' என்று பாராட்டப் பெற்றனர். தமிழ்க் கல்வியில் புலமை வேண்டி நின்ற ஔவையாரும், விநாயகக் கடவுளை நோக்கி, சங்கத் தமிழ் மூன்றும் தா,' என்று வேண்டிய வேண்டுகோளும் இக்கருத்தினையே நமக்கு வலி யுறுத்துகிறது.

மிக்க பழமை வாய்ந்த 'அகத்தியம்' என்னும் நூல் முத்தமிழுக்கும் இலக்கணம் கூறுவதென்பதை அறிகிறோம். தலைச்சங்கப் புலவர்கள் இயற்றிய 'பெருநாரை, பெருங்குருகு' என்னும் நூல்களும், நாரதர் இயற்றிய 'பஞ்சபாரதீயம்', சிகண்டியார் என்னும் அகத்தியரின் மாணவர் இயற்றிய 'இசை நுணுக்கம்' முதலாயினவும் பழைய இசைத் தமிழ் நூல்களாம். பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தில் இசையைப் பற்றிய குறிப்புக்கள் மட்டுமன்றி, இசை பாடுதலையே தமது தொழிலாகக் கொண்ட பாணர் முதலானவர்களைப் பற்றிய செய்திகள் பலவும் காணப்படுகின்றன. அந்நூலிலே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்கட்கும் தனித்தனி யாழும் பண்ணும் உண்டு என்பதும் குறிப்பிடப்பெற்றுளது. இவற்றிலிருந்து பண்டைக் காலத்திலேயே தமிழகம் முழுவதும் இசைக் கலை பரவி

யிருந்ததென்பதும், பலர் இசைக் கலை உணர்ச்சி உடையவராயிருந்தனர் என்பதும் பெறப்படும்.

மற்றும், சங்க இலக்கியங்களில் இசை பற்றிப் குறிப்புக்கள் பலதிறப்பட்டுக் காண்கின்றன. சிலப் பதிகார நூலில் இசைக் கருவிகளின் பெயர்களும், இலக்கணங்களும், கருவிகளிலும் மிடற்றிலும் இசை பிறக்கும் முறைமையும், பிறவும் மிக விரிவான முறையிலே கூறப்பட்டுள்ளன. அக்காலத்திலே பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் என நால்வகை யாழ்கள் இருந்தன. பேரிகை, இடக்கை, உடுக்கை, மத்தளம், திமிலை, குடமுழா, தண்ணுமை, தடாரி முதலிய முப்பத்தொரு வகைத் தோற்கருவிகள் பயன் படுத்தப்பட்டு வந்தன. ஆயிரம் நரம்புடைய யாழ் 'ஆதி யாழ்' என்ற பெயருடன் பண்டு வழங்கி வந்த தென்பதனையும், ஆதியிசை பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்று என்று கண்டு வைத்தனர் என்பதனையும் இன்று கூறினால், நம்மிற் பெரும்பாலார் வியப்படைதல் கூடும். ஆனால், பழந்தமிழ் நூல்களின் மூலம் அவற்றின் உண்மையை உணர்கிறோம்.

'ஷட்ஜம்' முதலிய ஏழிசைகட்கும், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் தமிழ்ப் பெயர்கள் வழங்கின. த, ந, ம என்ற மூன்று மெய் களோடு, குற்றெழுத்து ஐந்தும் நெட்டெழுத்து ஏழும் கூடித் 'தென்னா, தெனா' என்னும் அசைகளும் ஆளத்தி செய்தற்கு உரியனவாயிருந்தன. இசைப் பாட்டுக்கள் எல்லாம், 'செந்துறை, வெண்டுறை, வரி, உரு' முதலிய பெயர்களால் வழங்கின. உரு, வரி முதலிய வற்றிலும் எத்தனையோ வகைகள் உண்டு. பல வகையான கூத்துக்களோடும் வரிப்பாடல்கள்

பாடப்பட்டு வந்தன. கொற்றி, சித்து, சிந்து, பிச்சி, ஆண்டி, அம்மனை, பந்து, கழங்கு, உந்தி, தோள், வீச்சு, சாழல் முதலிய எண்ணிறந்த கூத்து வகைகளும், அவற்றிற்கு உரிய பாடல்களும் பயிலப்பட்டு வந்தன. அம்மனை, பந்து, ஊசல், வள்ளை என்னும் வரிப்பாடல்களைச் சிலப்பதிகாரத்தில் காணலாகும்.

தமிழில் பிறிதொரு பகுதியாகிய இயற்றமிழை நோக்கினும், அதுவும் இசையுடன் விரவியே நடைபெறுதல் நன்கு புலனாகும். சொற்றொடர்களின் ஓசையமைதியைத் தொல்காப்பியர் 'வண்ணம்' என்னும் பெயரால் வழங்கி, அதனை இருபது வகையுள் அடக்கிக் காட்டியுள்ளார். வல்லெழுத்துப் பயின்று வருவது, வல்லிசை வண்ணம்; மெல்லெழுத்துப் பயின்று வருவது, மெல்லிசை வண்ணம்; நெட்டெழுத்துப் பயின்று வருவது, நெடுஞ்சீர் வண்ணம்; குற்றெழுத்துப் பயின்று வருவது, குறுஞ்சீர் வண்ணம். இவ்வாறு பயின்ற எழுத்துக்களின் இயல் நோக்கி, வண்ணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதனாலும், செய்யுட்கள் எல்லாம் எதுகை, மோனை முதலிய தொடை விகற்பங்களோடு பாடப்படுதலாலும், இயற்றமிழ்ப் பாக்களும் இசை அமைதி பெற்றிருப்பது நன்கு தெளியப்படும். வெண்பா முதலிய பாக்கள் யாவும் இசையுடனேயே பண்டு தொட்டு ஓதப்பட்டு வந்துள்ளன. 'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று,' என்ற தொடரின் பொருள் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. கலிப்பா, பரிபாடல் என்பவற்றை, 'இசைப்பாக்கள்' என்றே பேருரையாளர் கூறிச் சென்றனர். எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பரிபாடலுள், செய்யுள் ஒவ்வொன்றிற்கும் பண் வகுத்திருப்பது நோக்குதற்கு உரியது. பாலையாழ், நோதிறம், காந்தாரம் முதலாய பண்கள் அதில்

குறிக்கப்பட்டுள்ளன. இசை வகுத்தோர் பதின்மர் பெயர்கள் அந்நூலுள் காணப்படுகின்றன. இவ்வாறெல்லாம் காட்டப்பட்ட தமிழ்ப் பெருநூல்களின் ஆதரவால், தமிழர் தொன்றுதொட்டே இசையை எவ்வண்ணம் சிறப்புறப் போற்றி வந்தனர் என்பதை நாம் அறிந்து மகிழலாம்.

'காதலும் வீரமுமாகிய இரு வகை உணர்ச்சிகளும் ஒருவனது உள்ளத்து உறுத்துங்காலத்து இசை பிறக்கின்றது,' என்பது ஒரு வகை முடிபு. இவ்விரண்டையுமே வாழ்க்கையின் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு இயற்கையோடு இயைந்த இன்ப வாழ்வு நடத்தி வந்தவர் தமிழர். எனவே, தமிழ் மக்களிடையே மிகப் பழங்காலமுதலே இசை இடம் பெற்றிருந்தது என்பதை இதன் மூலம் மற்றொரு வழியாகவும் உய்த்துணரலாம்.

மிகப் பழங்கால முதலே முல்லை நில மக்களாகிய ஆயர்கள் குழலூதுதலை வழக்கமாய்க்கொண்டிருந்தார்கள். மற்ற இசைக் கருவிகளின் பெயரான யாழ், முழவு, தண்ணுமை என்பன, தனித்தமிழ்ப் பெயராலேயே அமைந்து, கலப்பற்ற தமிழிசைக்குத் தக்க சான்று பகர்வனவாயுள்ளன. 'பா, பண், பாணி' என மூன்று வகையாகப் பகுக்கப் பெற்று இசைக் கலை வளம் பெற்று வளர்ந்து வந்ததென்பதை அறிகிறோம். சிலப்பதிகாரம் என்னும் நூல் 'இயலிசை நாடகப் பொருட்டொடர்நிலைச் செய்யுள்' என்னும் மறு பெயருடன் முத்தமிழிலக்கியமாகவே திகழக் காண்கின்றோம். இராகம் 'பண்' என்றும், சுருதி 'பாலை' என்றும், சுரம் 'கோவை' என்றும் தமிழிசை முறையில் வழங்கப்பெற்று வந்துள்ளன. இளிக்கிரமம், வலிவியக்கு, ஆளத்தி முறை, அலகு நிலை முதலியன இசை பற்றிய

குறியீட்டுச் சொற்கள்.

சுருதி சுரம் முதலியவற்றின் அலகு நிலைகளைக் கண்டறியக் கூடிய சில விதிகளையும், அவற்றின் சேர்க்கையால் ஏற்படும் பண்களை உண்டாக்கிக் கொள்ள உதவும் சில குறிப்புக்களையும், 'இணை, கிளை, பகை, நட்பு' என்னும் நரம்பு நிலைகளைக் கண்டு கையாள வல்ல விதிகளையும், 'கீர்த்தனம், வண்ணம், கீதம்' முதலியவற்றைச் செய்துகொள்ளும் சில வழி துறைகளையும், இசையுணர்ந்து புலமை பெற்ற நம் முன்னையோர் இயற்றிய சங்க நூல்களில் காணப் படும் சிற்சில குறிப்புக்களால் கண்டுணரலாம்.

இக்காலத்தில் பல இசைக் கருவியாளர்களை ஒன்று கூட்டி இசை நிகழ்த்தும் 'பல்லியக் குழு' நமக்குப் புதுவதன்று. பாணன், பறையன், கடம்பன், துடியன் முதலிய குடி மக்களும்; இடையன், கடையன், நுழையன், குறவன் முதலிய நிலமக்களும் கூடிச் சங்க காலத்தி லேயே தமிழிசையை வளர்த்து வந்தார்களென் பதை நம் நாட்டு இலக்கிய வரலாறு தெரிவிக்கிறது. 'கரை, நாடு, அகம்' என்ற சொற்களே 'கருநாடகம்' என்று திரிந்திருக்க வேண்டும் என்றும், அச்சொல் தென்னாட்டையே குறிக்கும் என்றும், தென்னாட்டு இன்னிசை முறையே கருநாடகச் சங்கீதம் என்று வழங்கப்பெற்று வந்ததென்று கொள்ளுவதுதான் நேரிது என்றும் கருதி, அவ்வகை முடிபினையே முடிந்த முடிபாகப் புகழ் பெற்ற ஆராய்ச்சியாளர் பலரும் தெரிவிக்கின்றனர். தென்னாட்டின் ஒரு பகுதியாகிய மலையாள நாட்டில் வழங்கும் சோபான சங் கீதத்தில் 'புறநீர்மை, இன்னிசை' என்னும் இரண்டு தமிழ்ப் பண்களும் சற்றேறக் குறைய அப்பெயர் களுடனே இன்றும் வழங்கிவருகின்றன. இதை நாம்

நினைக்கும்போது இதுவும் அக்கருத்தினை வலியுறுத்துகிறது. இவை எல்லாம் கொண்டு கூர்ந்து நோக்கினால், தமிழிசையின் தொன்மை, இவ்விசைக் கலையின் பண்பட்ட வளர்ச்சி முறை ஆகியவற்றைக் காலங்கடந்த பழமையுடையன எனக்கொண்டு மகிழ இடமுண்டு.

ADURA TAMIL

இப்படிப் பல வகையாலும் தொன்மையும் சீர்மையும் பெற்று வளர்ந்த இசைக்கலை, பிற மொழி இசையால் நலிவும் மெலிவும் உறாத வகையில் போற்றி வளர்க்கப் பெற்று வந்தது; அது மட்டும் அன்றி, பிற மொழி இசைகளை வென்று ஒடுக்கும் வகையிலும் வீறு பெற்று நின்றது என்பதையும் நாம் அறியலாம்.

பழங்காலத்தில் ஐந்து சுரங்களைக் கொண்டிருந்த இருக்கு வேதத்தின் ஒரு பகுதியாயிருந்த சாமத்தினையே மேலும் இரு சுரங்களைக் கூட்டி ஏழு சுரங்களோடு சேர்த்துப் பாடிக் கைலையினின்றும் விடுதலை பெற்றவனான இராவணன் காலம் தொடங்கியே வடமொழியாளர்க்கு ஏழு சுரங்களோடு கூடிய சங்கீத முறை ஏற்பட்டதென்றும், அம்முறையே இன்று வரை கையாளப்பட்டு வருகிறதென்றும் இசைப் புலமையிற்சிறந்த ஒரு சாரார் கூறக் கேள்வியுறுகிறோம்.

அங்ஙனம் சாமகானத்தில் புலமைசான்ற இராவணன், ஒரு சமயத்தில் பாண்டி நாட்டின்மேல் படை எடுத்து வந்து, பாண்டியன் அவைக்கண் இருந்த அகத்தியருடன் இசைப்போர் நிகழ்த்தித் தோல்வியுற்றுத் திரும்பினான். இச்செய்தியை **நச்சினார்க்கினியர்** தமது தொல்காப்பியச் சிறப்புப் பாயிரவுரையின் கண்ணே தெரிவிக்கிறார். இவ்விருவர் கூற்றினை

யும் ஒரு சேர வைத்து ஒப்பு நோக்கும்போது, நாம் அறிவது என்ன? தமிழ் இசை முறை தனித்தியங்கும் தன்மை வாய்ந்ததாய் இருந்தது என்பதோடு எந்தப் பிற மொழி இசைக்கும் அசைவு பெறாத வன்மை பெற்றதாயும் இருந்தது என்பதையும் நன்கு தெளியலாம்.

இவ்வாறு சங்க காலம் முடியப் பல்லாற்றானும் சீரும் சிறப்பும் உற்றிருந்த இசைக் கலை, அதனை அடுத்த மூன்று நூற்றாண்டுகளிலே ஆதரவு அற்றுக் குன்றத் தொடங்கிற்று. நம் நாட்டில் சமணம் கையோங்கிய காலம் அது. அக்காலத்தில், 'இல்லறத்திலும் துறவறமே வீடடைதற்கு உரிய சிறந்த நெறி,' என்ற கடைப்பிடியுடையவர்களான தமிழ் நாட்டிலிருந்த புலமை மிக்க சமணப் பெரியார்கள், 'இசையும் நாடகமும் காமத்தை விளைப்பன,' என்ற கொள்கை உடையவர்களாய் இருந்ததே தமிழில் இசை நாடக வளர்ச்சிக்குத் தடையாய் இருந்ததென்று கொள்ளல் பொருத்தம் உடையதாகும்.

பின்பு சமணர் ஆதிக்கம் என்றும் ஒரு படியாகவே நம் நாட்டில் இருந்துவிடவில்லை. பிற்காலத்தில் சைவ வைணவப் புத்துணர்ச்சி மக்களிடையே பரவிற்று. சமணத்தைச் சார்ந்த மன்னர்களும் மக்களும் மீண்டும் சைவம் புகுந்தார்கள். திருநீலகண்டயாழ்ப்பாணரும் திருப்பாணழ்வாரும் தோன்றி, நாளும் நல்லிசையால் சைவ வைணவங்களை மக்களிடையே பரப்பி வந்தனர். வாய்ப்பாட்டிற்குத் துணையாக, யாழ் முழவு தாளம் முதலிய இசைக் கருவிகளையும் அவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். இக்காலத்திலேதான் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம், திருவிசைப்பா முதலியன தோன்றின. திருப்பாணழ்

வார் பரந்தாமனைப் பாட்டினாலேயே கண்டு வாழ்ந்தார். பத்திமான்கள், 'பாவின் இன்னிசை பாடித் திரிவனே,' என்றவாறு, இசை பாடுதலையே பெரும் பொழுது போக்காகக் கொண்டார்கள். பல சைவ வைணவக் கோயில்களில் திருப்பதிகம் விண்ணப்பிக்கவும், திருநெடுந்தாண்டகம் ஓதி வரவும் அக்கால மன்னர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குக் கல்வெட்டுக்கள் மூலம் சாசனங்களும் எழுந்தன.

இக்காலத்திலே திருமாலை அவரடியார் 'செந்திறத்த தமிழோசை' என்று இசைமயமாகவே வழிபட்டு வந்தனர். இதற்கொப்பவே சைவப்பெருமக்கள் சிவபிரானை 'ஏழிசையாய் இசைப் பயனாய்க்' கண்டு மகிழ்ந்து பாடிய காலமும் இதுவே. இப்படி அறுநூறு ஆண்டுகள் இசையுணர்ச்சி நல்ல முறையில் மீண்டும் கிளர்ச்சி பெற்று ஓங்கிற்று. 'குருகையர் கோன் யாழினிசை வேதத்தியல்,' என்றபடி, நம்மாழ்வார் பாடிய இசைப் பதிகங்கள் யாவும் சாமகானத்தோடு கூடிய வடமொழி வேதத்தின் இயல்புடையன என்றே வைணவர்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். தமிழையும் தமிழிசையையும் பெருமைப்படுத்தும் பெருநோக்குடனே வைணவ முன்னோர், திருமால் உலா வரும்போதும் தமிழிசை மயமான திவ்வியப் பிரபந்தம் சேவிப்பாரை முன்னே செலுத்தி, அவர் பின் கடவுளை இட்டு, அதற்குப் பின்பே வடமொழி வேதமுடையாரை ஓதி வரச் செய்ய பழமறைகள் முறையிடவும் பைந்தமிழின் பின் செல்பவராகத் திருமாலை ஆக்கிவைத்தனர்.

இவ்வளவு சிறந்த முறையில் முந்நூறு ஆண்டுகளின் பின் தமிழிசை மறுமலர்ச்சி அடைய நாம் கண்டோம். எனினும், இக்காலத்தில் எவரும் இசை

யைத் தனிக்கலை எனக்கையாண்டு சங்ககாலங்களிற் போலப் பயிற்சி பெறவோ, நூல்கள் இயற்றவோ, அன்றி இலக்கணம் வகுக்கவோ முற்பட்டதாக நாம் கேட்டறிவதில்லை. இதற்குத் தக்க காரணம் உண்டு. இசையில் மக்களுக்குள்ள கவர்ச்சிப் பண்பை அறிந்த சமயகுரவர், நாளும் தமிழிசையால் மதத்தை வளர்த்து வந்தவரே அன்றி, இசையைக் கலையாகத் தனிப்பட வளர்க்க முற்பட்டவர் அல்லர். ஞானசம்பந்தரும், நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்தவரே அன்றி, இன்தமிழால் இசை வளர்த்த வர் அல்லர். எனவே, இசைக் கவர்ச்சியில் ஈடுபட்டு மக்கள் விழிப்படைந்த இக்காலத்திலும் இசை ஒரு தனிக் கலையாக வளர்ச்சி பெறவில்லை. இதனை இங்கு மறவாது நினைவிலிறுத்த வேண்டும்.

இதன் பின்னர்த் தமிழ் நாட்டில் விஜய நகர அரசர்கள் அரசு செலுத்தினர்கள். அவர்களின் ஆணை வழி நிற்பவர்களாய்ப் பல தெலுங்க நாயக்க அரசர்கள் இங்குப் பற்பல இடங்களில் குறுநில மன்னர்களாய் ஆட்சி புரிய நேர்ந்தது. அதனல், அவர்களோடு தெலுங்க மொழியும் கருநாடகச் சங்கீதமும் நம் நாட்டில் சிறப்பு மிக்Oோங்க வாய்ப்பு ஏற்படலாயிற்று. தெலுங்கு மொழியாளர் ஆளுகைக்கு வரவே, அவரது அன்புக்கும் ஆதர விற்கும் உரிய தெலுங்குப் பாடல்களையே நம்மவருட் பலரும் போற்றி ஆதரிக்க முற்பட்டனர். இவ்வாறு கருநாடகச் சங்கீதம் நம் நாட்டில் காலூன்றி நின்றது. இக்காலங்களில் தமிழிசையிலுள்ள சில சிறந்த முறை நுணுக்கங்களும் பண் இயல்களும் அதன்கண் சென்று கலந்திருத்தல் கூடும்.

'அரசர் எவ்வழி அவ்வழிக் குடிகள்,' என்பது

உலகியலுண்மை. எனவே, சென்ற நூற்றாண்டு களிலே இசைப் பற்றுக்கொண்டிருந்த தமிழ் மக்கள், தெலுங்கர்கள் ஆட்சியிலே, அவர்களது ஆதரவிற்குட்பட்டு வளர்ந்து வந்த தெலுங்கிசை யையே ஆதரித்து, அதில் போதிய பயிற்சியும் புலமையும் பெற்று விளங்கினார்கள் என்பதில் வியப் பில்லை. தெலுங்க மன்னர்களின் பின் வந்த மகாராஷ்டிர மன்னர்களும், வடமொழி தெலுங்கு விரவிய இசை முறைகளையே வழங்கியும் ஆதரித்தும் பரப்பி வந்தார்கள். இயற்றமிழும் வடசொற்கள் மிகுதியாக வழங்கத் தொடங்கிய காலம் இதுவே என்னலாம்.

இப்படிப் பல நூற்றாண்டுகளாக இசைத் தமிழுக்குத் தாழ்வு ஏற்பட்டுப் பல துறையிலும் முன்னேற்றம் வேண்டி நிற்கும் இந்நிலையிலே, நம் நாட்டில் ஆங்கிலேய ஆட்சியும் ஏற்படலாயிற்று. ஆங்கிலேய ஆட்சியால் நாட்டு மொழிகட்கு ஏற்பட்ட தாழ்வு நிலையினைச் சொல்ல வேண்டுவது இல்லை. தமிழனே தமிழில் பேசுவதும் எழுதுவதும் இழிவெனக் கருதிய காலம் அது. தமிழ் மொழி சரியான நிலையில் போற்றிப் பேணப்படவில்லை. நாட்டு மக்களது உரிமை இன்மை, புதுமையில் விருப்பம், அயல் மொழிப் பயிற்சி இவை எல்லாம் சேர்ந்து தமிழன்னையைத் தலை குப்புற வீழ்த்தின. பேணுவாரற்ற குறையினாலே தமிழ் படித்த மக்க ளும், 'ஏன் தமிழைக் கற்றோம்!' என்றேங்கி வருந் தும் நிலை ஏற்பட்டு நின்றது. தலையாய தாய்மொழி யின் கதியே இதுவாகுமானால், இசைக்கலையைப் பற்றி ஆங்கில ஆட்சியிற்கேட்பானேன்? அதுவும் அப்படியே சீர் குலைந்து நின்றது. இக்காலத்தில்

உள்ள புலவரும் உண்மைப் புலமையின் குறிக்கோளுணராது, தத்தம் கவி வன்மையை வெளிப்படுத்தற்கு ஏதுவான கலம்பகம், உலா, அந்தாதி, பிள்ளைத் தமிழ் முதலியவற்றைப் பாடி முடித்துத் தம் புலமை நிறுவ நினைத்தனரே அன்றி, நாட்டு மக்களின் உள்ளத்தைக் கனிவித்து உணர்ச்சியூட்டும் அறிவு நூல்களை இயற்ற முற்பட்டாரில்லை. பண்டிதர் செய்யுள் நடை வேறு, பாமரர் பேச்சு நடை வேறு என்று இரு திறப்பட்டுத் 'தமிழே மெல்ல இனிச் சாகும்,' என்னும் நிலை எய்திற்று. தமிழ் மக்கள் உண்மை அறிவையும் ஆண்மையையும் இழந்தார்கள். இவை எல்லாம் ஆங்கிலவாட்சியிலே தமிழர்க்கும் அவர்தம் மொழிக்கும் மட்டும் ஏற்பட்டவையல்ல: இந்திய நாட்டிலேயுள்ள எம்மொழிக்கும் அதன் வளர்ச்சித் துறையிலே இதே நிலைதான் ஏற்பட்டிருந்தது. சரித்திரக் கண் கொண்டு நோக்குவார் யாரும் இதை மறுக்க இயலாது.

இந்நிலைமையில், கடந்த ஐம்பது ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் தேசீய இயக்கம், நம் நாட்டு மக்களுக்கு ஓரளவு உணர்ச்சியூட்டி, நம்மிடையே தாய் மொழிப் பற்றை என்றுமில்லாத அளவிற்கு வளர்த்துவிட்டது. வங்காளத்தில் கவிஞர் இரவீந்திரர் தோன்றி வங்க மொழியின் மறுமலர்ச்சியைக் கண்டார். மலையாள மொழிக்கு வல்லத்தோல் என்பாரும், உருது மொழிக்குக் கவிஞர் இக்பாலும் தோன்றி, அவ்வாறே அவ்வம்மொழிகட்கு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தார்கள். இஃதொப்பவே, நம் நாட்டிலும் காலஞ்சென்ற கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் தோன்றித் தமிழிலக்கிய நங்கையைச் சீர்திருத்திச் செப்பனிட்டு ஒப்பனை செய்து போந்தார்; பழைய

சங்க நூற்கருத்துக்களைச் சுவை குன்றாது, எளிய இனிய தமிழ் நடையில் ஓரிரண்டாண்டு தமிழ்ப் பழக்கம் உள்ளாரும் கண்டு மெச்சும் வகை கற்கண்டினுமினிய கவிகள் பாடிப் பண்டிதர் கொண்ட தமிழைப் பாமரர் பேசும் தமிழினின்றும் வேறாகாத வாறு காத்து நின்றார். இன்று நம்முள் பலரும் தமிழன்பர் என்று கூறும்படி என்றுமில்லாத தமிழ்ப் பற்றை நமக்கு அவரே ஊட்டியுள்ளார். நிகழ்காலத் தமிழிலக்கிய சரித்திர வளர்ச்சியிலே, பாரதியாரையும் அவரது தமிழ்த் தொண்டையும் மறந்து நம்மால் முன்னேறிச் செல்ல முடியாது.

இம்முறையிலே, சென்ற சில ஆண்டுகளாக இயற்றமிழ் தனக்கியன்ற முறையில் மறுமலர்ச்சி பெற்றுப் படிப்படியாய்ப் பொதுமக்கள் உள்ளத்திற்கும் பழம்பெரும்புலவர்களின் சிந்தனைக்கும் ஒரு தொடர்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. இம்மறுமலர்ச்சியின் பயனாக இன்று இளைஞர்களிடம் அளவு கடந்த தமிழ்ப் பற்றைக் காண்கிறோம். தமிழ்க் கழகங்களையும் இலக்கிய மன்றங்களையும் பல இடங்களில் பொதுமக்கள் போற்றி ஆதரித்து வருகிறார்கள்; கம்பருக்கும் வள்ளுவருக்கும் ஆண்டு தோறும் விழாக் கொண்டாடி, கடவுளரோடு ஒப்பக் கவிஞர்களையும் போற்றி வருகின்றார்கள். பல சொல்வானேன்? தமிழ்த் தொடர்புடைய ஒரு கூட்டம் என்றால், இரண்டொரு தமிழ்ப் புலவர் கூடிப் பேசிப் போவது போக, இன்று பல்லாயிரக் கணக்கில் பொதுமக்கள் பங்கு எடுத்துக்கொள்ளும் அளவிற்குப் பெரிய மாநாடுகளாய் விளங்குவதைப் பற்றிக் கேட்கிறோம், பார்க்கிறோம். இவற்றிற்கெல்லாம் காரணம், தமிழின் புத்திலக்கிய மறு

மலர்ச்சியே என்று கூறலாம். நமக்கு மிகவும் அண்மைக் காலத்தில் நிகழும் தமிழ் வரலாறு நம் மனத்தில் நன்கு பதிய வேண்டும். அதனை நன்கு அறிந்தாலன்றி, இன்று பொதுமக்களிடையே தோன்றி ஊன்றி வரும் தமிழிசை இயக்கத்தின் உண்மை இயல்பினை நாம் நன்கு உணர முடியாது. அது கருதியே இத்துணையும் இதனை விரித்துரைக்க நேர்ந்தது.

இனி மேற்கூறிய இயற்றமிழின் வளர்ச்சியோடு இன்று நம் நாட்டில் உள்ள இசைக் கலையின் நிலை பற்றிச் சிறிது சிந்திக்கவேண்டும். பழைய தமிழிசை முறை வழக்கில் இல்லை. தமிழ் மக்கள் பிற மொழிக்குரிய இசைக் கலையினைக் கற்றுத் தேர்ச்சி பெற்று, அதனை வளர்த்து வருகின்றார்கள். பல நூற்றாண்டுகளாக இசைக்கலைத் துறை அழிவுற்று, 'தமிழிசை என்றால் இன்னதென்றே புரிந்துகொள்ளக் கூடாத நிலையிலே தமிழர் நிற்கின்றனர். அவர்கள் இசைக் கவர்ச்சி ஒன்றுக்குமே ஈடுபட்டுப் பிற மொழிப் பாடல்களையும் அவற்றைப் பாடுபவர்களையும் ஆதரிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இம் மட்டுமா? 'தமிழிலே இசை இல்லை,' என்று கூடத் தமிழனே நினைக்கிறான்; பேசவும் பேசுகிறான்; நான்கு பேர் அறிய நடுவில் வந்து வாதாடவும் பின் வாங்குவது இல்லை. தமிழ் ஒழிந்த பிற மொழியாளர்களான தெலுங்கரும், கன்னடியரும், மலையாளிகளும் மொழிப்பற்று மிகுதியும் கொண்டு, அதனைப் பல துறையிலும் வளர்ப்பதற்கென்றே தனித்தனி பல்கலைக் கழகங்களை நிறுவி, உறங்கிக் கிடக்கும் தமிழனைத் தட்டி எழுப்பி விழிக்கச் செய்கிறார்கள்.

இந்நிலையினை உணர்ந்த பிறகாவது, மற்றவர் சென்ற அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழன் தமிழை வளர்க்க வேண்டுவது உலகத்தோடு ஒத்த செயல் அல்லவா? அதற்கான ஆக்கங்களைப் பல வழியினும் தேடுவது எவ்வகையினும் பிழையாகாது. இன்றைய தமிழன், வெளியுலகை உறக்கம் நீங்கிக் கண் திறந்து நோக்குகின்றான்; தாய் மொழியின் ஆக்கத்தையே வாழ்க்கையின் முதல் நோக்கமாகக் கொண்டு தமிழை வளர்க்க விரைந்து எழுகின்றான். இச்சூழ்நிலைக்குட்பட்டுத் தமிழ் வளர்ச்சியே தம் வளர்ச்சி எனக் கருதும் மனப்பாங்குடைய சிலர், இசைத் தமிழ் நிலையைச் சீர்திருத்த முனைந்து நிற்கின்றனர். இது நல்ல அறிகுறியேயாகும்.

இன்று இசைக் கலையில் மனம் செலுத்தினால், நாம் அதில் ஒரு பெரிய பிளவையே காண நேரிடுகிறது. நோக்கமும் பயனும் வேறுபட்டிருத்தல் முடியாது. 'இசையின் பயன் இன்பப் பேறே,' என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வின்பம் ஊனினை உருக்குவதாயும், உள்ளொளி பெருக்குவதாயும், உலப்பிலா ஆனந்தமாய ஆன்மவுணர்வில் இணைப்பதாயும் அமைதல் வேண்டும். அவ்வாறமைய வேண்டுமானால், இன்று இசைக் கலை கேட்பார் யாவரையும் இன்புறுத்தும் என்று சொல்லும் நிலையில் இருக்கிறதா? சிறிது உன்னிப் பாருங்கள்! ஒற்றுமையால் காணும் இன்பப் பேற்றை வேற்றுமையும் பிளவும் எங்ஙனம் தரும்?

பிறமொழியில் அமைந்த பாடல்களை ஒரு பாடகர் பாடினால், பாடும் புலவரது ஆற்றல் கண்டு மெச்சும் திறத்தால் ஆகும் ஒரு வகை மகிழ்ச்சியே அதனால் உண்டாகும். கோடிக் கணக்காயுள்ள அம்

மொழி அறியாத மற்ற மக்களுக்கு, அப்பாடலும் இசையும் என்ன பயனை அளிக்கும்? ஒரு பயனை யும் அளியா. பொருளுணர்ச்சியோடு கலவாத வெற்று இசையுணர்ச்சி உண்மை இன்பத்தினைப் பயக்குமென்பது தவறேயாம். மேலும், மிடறும் பிற இன்னிசைக் கருவிகளைப்போலத் துணைக்கருவி யாகத் தோன்றுமேயொழிய, வேறு என்ன உணர்வு ஏற்பட முடியும்? மிடற்றொலி பிற ஒலிகட்குத் தலைமையாதல் எங்ஙனம்? பிறவொலிகட்கில்லாத பொருளுணர்ச்சியைத் தருவதாலல்லவா அது தலைமை எய்துகின்றது? எனவே, பிறமொழியில் பாடுவது மிடற்றுக்குரிய தலைமையைப் போக்கி விடுவதுடன் அதனால் விளையும் பெரும்பயனையும் கெடுத்துவிடுகிறது.

இங்ஙனம் கேட்கும் மக்களுக்கும் பாடும் புலவ ருக்கும் இடையே, வேற்று மொழிப் பாடல் ஒரு பிளவையே உண்டு பண்ணி நிற்கக் காண்கிறோம். சங்கீதத்தில் உணர்ச்சி வசத்தால் பொருளுணர்ந்து ஈடுபடும் இரசிகத் தன்மையைத்தான் பெரும்பாலும் பொது மக்களிடம் நாம் எதிர்பார்க்க முடியும். பொருளுணர்ந்து ஈடுபடாது, பாடகரது ஆற்றல் மட்டும் கண்டு பாராட்டி மெச்சும் இசைப் புலமை யாவருக்கும் இருக்க முடியாது. கலை வளர்ச்சியுற விரும்பி நிற்பார் யாவரும், பொது மக்களது உணர்ச்சிக்கு ஏற்றவாறுதான் அதை ஆக்கி வளம் பறச் செய்தல் வேண்டும். பாடும் புலவரது பாட லின் கருத்தறிந்து பொது மக்கள் மகிழ முடியா திருக்கும் இன்றைய நிலையிலே, சங்கீதம் ஒரு கலையாகவே இல்லை.

தமிழிலே பாடமுயன்று பாடினால், இசைக்குரிய

கவர்ச்சியால் புலவரோடு பொது மக்களும் கருத்தொருமித்துப் பொருளுணர்ந்து இன்பம் நுகர வழியேற்படும். இத்தகைய இன்ப நுகர்ச்சியை வேண்டி நிற்கும் தமிழ் மக்கட்குத் தமிழிலே பாடப்படும் பாடல்களைத் தவிர வேறு எம்மொழிப் பாடலும் கருதிய பயனைத் தர இயலாது போகும். இதனாலேயே தமிழ்ப் பற்று மிக்கு அதற்காகவே வாழ விரும்பும் தமிழ்ப் பெருமக்களுட்சிலர், தமிழ்ப் பாட்டுக்களையும், அவற்றைப் பாடும் பாடகர்களையும், அவற்றைக் கேட்டற்குரிய தமிழிசை மன்றங்களையும் விழைகின்றார்கள். இதுதான் தமிழிசை இயக்கத்தின் உண்மை நிலை; அடிப்படைக் கொள்கை.

எனவே, இவ்வியக்கம், நாட்டில் ஏற்பட்ட புதிய எழுச்சிகளால் உணர்ச்சியுற்ற தமிழ்ப்பொது மக்கள் இடையே தோன்றி வளர்ச்சி பெற்று வரும் பெரும்பேரியக்கம் என்பதை வரலாற்று முறையில் நாம் காண முயலுதல் வேண்டும். பாரதியாரைத் தோற்றுவித்துத் தன் இயற்றமிழ்த் துறையிலே முன்னேற்றம் கண்டுகொண்ட தமிழன்னையே, தன் தவப்பெரும்புதல்வரும், தமிழ் நலம் ஒன்றே தம் நலம் எனக்கொண்டு பிறர்க்கறம் முயன்ற பெரியாருமாகிய **செட்டி நாட்டரசர் அண்ணாமலை வள்ளல்** மூலம், மற்றொரு பகுதியாகிய இசைக் கலை முன்னேற்றத்தைக் காண விழைந்திருக்கிறாள் என்றே இதனை உணரலாம்.

ஆகவே, தமிழர் யாவரும் தமிழன்னை காட்டிய தனிப் பேரியக்கமாகவே இதனைக் கண்டு, தமிழிசை இயக்கத்தை ஆதரிப்பது தம் கடமைகளுள் ஒன்று எனக்கொண்டு, தமிழிசையைப் போற்றி வளர்ப்பாராக!

தாய்—ஈன்று எடுத்து வளர்த்த தாய்—அவளை நினைத்தாலே உள்ளம் உருகும், குழையும். அவள் சீராட்டிப் பாலூட்டி, நோவாமல் சாவாமல் நம்மை வளர்த்தவள். ஆகையால், அவளை நினைக்க உள்ளம் உருகாமல் இருக்குமா? குழையாமல் இருக்குமா?

அப்படிப்பட்ட தாய்க்கும் பிள்ளைக்கும் இடையிலே உள்ள ஒட்டும் உறவும் உலகத்திலே தலை சிறந்தன. கண் காணாத கடவுளையும், 'மூவேழுலகுக்கும் தாயே,' என்றும், 'அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே,' என்றும் பெரியார்கள் தாய் முறை சுட்டியே விளித்துள்ளார்கள். பத்தன் மெய்ம்மறந்து இறைவனைத் துதிக்கின்றான். அவனுக்கு என்னென்னவோ சொல்லித் துதிக்கத் தோன்றுகிறது! 'அம்மையே, அப்பா, ஒப்பிலா மணியே,' என்று தன்னை மறந்து துதிக்கும் போதும், அவனுக்குத் தாயே முன் வந்து நிற்கின்றாள். 'பொல்லாத சேய் எனில் தாய் தள்ளல் நீதமோ?' என்றார் ஒருவர். கெட்ட குழந்தையிடத்தும் தாய்க்கு அன்பு கெடாதாம்!

பிள்ளைக்கும் அப்படியே தாயிடத்துள்ள அன்பு கெடாது. பெற்ற தாய் பிள்ளையை அடித் தொதுக்குகிறாள். குழந்தை அழுகிறது; காண்கிறோம்! ஆனால், அவ்வாறு அழும் குழந்தையின் கருத்தென்ன என்பதைச் சொல்ல முடியுமா? பெற்ற தாயை விடுத்து மற்றொரு தாயைப் பெற வேண்டி அழுகிறது என்னலாமா? ஈன்ற தாய் சினத்தால் அகற்றிடினும், மற்றும் அவள்தன்

அருள் நினைந்தே அழும் குழந்தை; பெற்று வளர்த்த தாயே வந்து அணைத்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் அக்குழந்தை அழுகிறது. அடித்தொதுக்கிய தாயே வந்து தன்னை மீண்டும் அணைத்தெடுத்துக்கொள்ளாத நிலையிலே, வேறு எத்தனை பேர் வந்து என்னென்ன ஆறுதல்களைச் செய்த போதிலும் அழுங்குழந்தை அழுகையை நிறுத்தாது.

"நீ என்னைப் பெற்றவள் அல்லள். நான் உன் குழந்தையுமாகேன். என்னை விட்டு விலகிப் போய் விடு," எனத் தாயைப் பார்த்து உறவறுத்துப் பேசுகிறதாம் ஒரு குழந்தை. அப்போது தாய் என்ன செய்கிறாள்? "சரி! நீ என் குழந்தையாகாய்; நானும் உனக்குத் தாயாகேன். உன் விருப்பப் படியே வைத்துக்கொள். இருந்தாலும், இந்த உணவை மட்டும் அருந்திவிட்டு வெளியே செல்," என்று சொல்லி, அக்குழந்தையையும் இடுப்பிலே எடுத்து வைத்துச் சோறூட்டி அனுப்புகிறாள் அத் தாய். இத்தகைய அன்பை வேறு யாரிடத்திலேனும் காண முடியுமா? இந்த அழகிய கருத்தைச் சொல்லி, இது போலவேதான் பூமியாகிய தாயும், தன்னைப் பொய் என்று சொல்லித் திரிவோர்க்கும் உணவுப் பொருள்களை எல்லாம் கொடுத்து உயிர் வாழச் செய்து இரக்கத்திற்சிறந்து விளங்குகிறாள் என்று பாஷா கவி சேகரர் சேது சம்ஸ்தான வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள், தமது புவி எழுபது என்னும் நூலிலே சொல்லியிருக்கின்றார். அதில்,

"என்னைப் பெற்றிலை எனும்மக வினுக்கும்உள் இரங்கி,
உன்னைப் பெற்றிலன்; உண்என ஊட்டுதாய்"

என்றுள்ள பகுதி தாயன்பை நன்கு தெரிவிப்பதாகும்.

பெற்ற பிள்ளைதான்! அவனுக்குத் தாய் மீது அளவு கடந்த கோபம். அவன் அவளைத் தூணிலே கட்டி அடித்துத் துன்புறுத்துகிறான். அவன் பிள்ளை அல்லன். அவன் கொலைபாதகன். அவனுக்கு ஈவு இரக்கம் இல்லை. பெற்ற தாயே என்று அன்புகூட இல்லை. பெற்று வளர்த்தவளே என்று செய்ந்நன்றியறிவும் இல்லை. அப்படிக் கல்நெஞ்சனாய்க் கொலைபாதகச் செயலைச் செய்துகொண்டிருக்கும் அவனுக்கும், கையோய்ந்து போகிறது, களைப்பு மிகுதியாலே! உடனே பெருமூச்சு விட்டுக் களைப்புத் தீர, மனத்திற்கு ஆறுதல் ஏற்பட, ஒரு வார்த்தை அவன் வாய் விட்டுச் சொல்லுகிறான். தன்னை மறந்த நிலையிலே வருகிறது அவ்வார்த்தை: நினைவிருந்தால், அதை உச்சரிக்கவே விரும்பமாட்டான். அது என்ன வார்த்தை? அது 'அம்மா' என்று அழைக்கும் ஆர்வச் சொல். தாயை வெறுத்து ஒதுக்கி அடிக்க முற்பட்ட அவன், அவளது பெயரைச் சொல்லுவானேன்? அதுதான் விந்தையினும் விந்தை! இதனால், தாயன்பு கொடிய பிள்ளையாலுங்கூட எந்நிலையினும் மறக்கப்படாதது என்பதை அறிகிறோம். திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்களுள் ஒருவர், இவ்வழகிய கருத்தை "மாதுரு காதகனுக்கும் கையோய்ந்தவாறே அம்மா என்றே இருக்கும் அவள்தன் அருளுடைமை?" என்று ஒரு வரியிலே விளக்கிச் சென்றிருக்கிறார்.

மாணிக்கவாசகர் சிறந்த அனுபவ ஞானியார். சைவ சமயத்துப் பெரியார் 'அறிவாற்சிவனே' என்று அப்பெரியாரைக் கருதி வணங்குவர். அவர்

ஒரு சமயம் சிவபிரான் தம்மை ஆட்கொண்ட திறத்தை நினைத்துப் பார்க்கின்றார். அதற்காக இறைவனைப் பாராட்டநினைக்கும்போதே அவர்க்குத் தாயன்புதான் முதலில் வந்து தோன்றுகிறது.

குழந்தையது பசி நேரம் அறிந்து, தானே வலிய முன் சென்று பாலூட்டி உடலை வளர்க்கிறாள் தாய்: ஆண்டவனோ, அடியவனது பக்குவ நிலையை அறிந்து, தானே குருவாய்த் தோன்றி, அவனது இருப்பிடத்தை அடைந்து, மிக்க பரிவோடு அவன் உள் புகுந்து, அவனைத் தீ வழிச்செல்லாது தடுத்தாட்கொண்டு, உயிரினை அறிவூட்டி வளர்க்கின்றான். தாய் நினைவு தோன்றிய அவருக்குத் தாயினும் சதமடங்கு மேற்பட்டதாக இறைவன் அருள் தோன்றிற்று. அந்த அன்பு கனிந்த நிலையிலே பெரிதும் ஈடுபட்டுப் பரவசராகி,

"பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ"

என்று பாராட்டினார்.

தனு, கரணம், புவனம், போகம் என்பன கடவுளது படைப்பு. அவற்றைச் சரியான வழியிலே உபயோகித்துப் பயனடையப் பகுத்தறிவையும் அவனே வழங்கியிருக்கிறான்; வழங்கிய தானும், எல்லாமுமாய் யாவுமாய் எங்கணும் நிறைந்து நின்று, தன்னைப் பற்றிய நினைப்பூட்டி, அடியவனை ஆட்கொள்ளவும் விரும்பிய வண்ணமாய் நிற்கின்றான். இப்படித் தாயையொத்து எல்லா உதவியும் செய்து நிற்கின்ற இறைவனை மறக்கக் காரணம் என்ன? மெய்யறிவின்மை! அந்த அறிவின்மை, வினையின் விளைவு. இப்படி அறிவிழந்து, பல உதவிகளையும் செய்து நின்ற ஆண்டவனை மறந்து தம்மை, 'பாவியேன்' என்று ஒளி மறைவில்லாமல்

மாணிக்கவாசகனார் கூறுகிறார். வெறுப்பும் வருத்தமும் தோன்றுகிறது அந்தத் தொனியிலே!

வினையால் மெய்யறிவு விளங்கித் தோன்றுவதில்லை. அறிவு தோன்றாத நிலையில் செய்யுங் காரியங்கள் எப்படி நல்லனவாக இருக்கும்? மெய்யறிவுள்ளவர், எல்லாம் சிவனதுடைமை எனத்தேறி, அவற்றைக் காப்பதும் அவன் கடமை என்ற கருத்துடன், தம் செயல் என்ற எண்ணமற்று, எப்பொழுதும் பத்தி பூண்டு அடிமையாய் இருப்பர். இவர் அப்படி இல்லை. 'ஓம்பினேன் கூட்டை வாளா' என்றபடி எந்நேரமும் உடலுக்கே கரைந்து நைந்து, வாணாள் முழுவதும் வீணாக்கி, உடலோம்பும் எண்ணம்; அதற்கான பொருள்களைத் தேடும் 'தொழில்'; அவ்வுடல் வளர்ச்சி கண்டு மகிழும் 'இன்பம்'; என்று இப்படி உடலோம்பும் தொழிலிலேயே முனைந்திருந்தாராம். 'உடலினுக்கும் மேலான உயிரிருப்பை உணர்ந்து அதற்கு உறுதி தரும்படியான எந்த நல்ல காரியத்தையும் செய்யவில்லையே!' என்று வருந்துகிறார். இப்படி இவர் அவனை மறந்து திரிந்த நிலையிலும் இவரை அச்சிவபிரான் மட்டும் மறக்கவில்லையாம்; இவரைக் காப்பது தன் பொறுப்பு என்று கருதினான். மணிவாசகனாரது மனத்திலே புகுந்து ஊன் பற்றி—அதாவது பொய்யாய உடல் பற்றி—எழுந்த ஆசையை வேர் அறக் கெடுத்து, சிந்தையுள் அறிவு விளக்கேற்றி, மறக்கொடும்பாவ இருளை நீக்கிப் பணி கொண்டானும் சிவபெருமான். இந்த மிகப் பெரிய நன்றியை மறவாத மணிவாசகனார்,

"பால்நினைந்(து) ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி"

என ஆண்டவன் தம்மை ஆட்கொண்ட செயலிலே ஈடுபட்டு, மனங்கசிந்து உருகிப் பேசுகிறார். கடவுளை மறந்து, அறிவிழந்து, உடலே பேணி, ஒளி சுருங்கி உழன்ற அடியவனை ஆட்கொள்ளும் ஆண்டவன் செயல் முறையை நோக்கினால், நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி விளைகிறதன்றோ! அடியவன் மூலகாரணத்தைக் கண்டுபிடிக்கிறான்; உடலைப் பேணும் அறியாமையைத் தொலைக்கிறான்; அறிவைப் பெருக்குகிறான்; அறிவு பெருகினால் பாசம் தானே நீங்கி, சிவதரிசனத்தைக் கண்டு மகிழும் பேறு தானே வாய்க்கும்; சிவானந்தத் தேன் பிலிற்றும். அதை அடியவன் அனுபவித்து இன்பவடிவினன் ஆவதில் பின் என்ன தடை? ஒன்றுமில்லை. இப்படி இறைவன் மாயைத் தளைகளினின்று அடியவரைக் காக்க அவை நீங்கின அளவிலே தானே வந்து முன் தோன்றும் பேரின்ப நிலையை அவன் தந்ததாகவேதான் அடியவர்கள் பேசுவார்கள். அப்படியேதான் மாணிக்கவாசகரும் தெரிவிக்கிறார்.

இவ்வுலக இன்பம் நொடிப் பொழுதில் தோன்றி அழியும் நிலையற்ற சின்னீர இன்பம்; முன் நன்மை போலத் தோன்றிப் பின்பு கெடுதலையும் விளைவிக்கும். சிவானந்தப் பேரின்பமோ, சிந்திக்கத் தித்திக்கும் திறத்ததாய்ப் புந்திக்குள்ளே நின்று குடநீர் சொரிந்தாற்போலக் கழி பேரின்பம் தந்து நிற்கும், 'உலப்பிலா ஆனந்தம்' என்று பாராட்டப் பெறுவது. தேன் ஒத்த இவ்வின்பத்தினை நுகர்ந்து சிறந்த மாணிக்கவாசகர்,

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய

ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்புஇலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து"

என்று, தாம் பெற்ற பேற்றின் மாற்றத்தை வெகு அழகாகக் காட்டியுள்ளார். இதனை நோக்க நோக்க, நமக்கும் கடவுளருள் உண்டு என்னும் உறுதி பிறக்கிறதன்றோ? ஆம்! கடவுளருள் எவர்க்கும் பொதுவே. உடல் பற்றிய ஆசை முதலியவற்றைத் தமக்கில்லாமல் செய்ததை, 'ஊனினை உருக்கி' என்ற சொல்லால் வெளியிடுகிறார். ஒருவேளை, 'அறிவுப் பெருக்கத்திற்கும் ஆசைச் சுருக்கத்திற்கும் ஏதாவது தொடர்புண்டா?' என்று கூட நமக்கு இதை நினைக்கும் போது தோன்றுகிறது. ஆசை பெருத்தவருக்கு அறிவு மட்டம் என்று சொல்ல நம்மால் ஆகுமா? ஆனால், எமர்ஸன் என்ற ஆங்கிலப் பேராசிரியர், "ஆன்ம சக்தி வளர வளர மனச் சிறப்பு மின்ன மின்ன, உடல் வளம் குன்றி வருகிறது; விலங்கியல் மறைந்து வருகிறது. மறு தலைமுறையில் இந்த வியத்தகு ஆற்றல் உடற்கூண்டில் உயிர் மீண்டும் வரும்போது உடல் வளம் குறைந்தே தோன்றுகிறது," என்று 'விதி அல்லது வாழும் வகை' என்ற கட்டுரையில் துணிந்தே முடிவு கட்டிச் சொல்லியிருக்கிறார். உள்ளொளி பெருகுதற்பொருட்டு, 'ஊனினைச் சுருக்கிய' சிவபெருமான் கருத்தும் இதுவே போலும்!

இப்படி, மாணிக்கவாசகர் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டதை நினைக்குந்தோறும், நமக்கு, 'ஆண்டவனது அருட்செயலை வியப்பதா, அல்லது மாணிக்கவாசகரது புண்ணியப் பேற்றினைப் போற்றுவதா!' என்று திகைப்பேற்பட்டு

நிற்கின்றது. 'இப்படிப்பட்ட புண்ணிய சீலர், தம்மைத் தொடக்கத்திலே 'பாவியேன்' என்று பழித்துக்கொண்டாரே! அது பொருந்துமா?' என்று கருதுகிறோம். 'பாவத்தின் பயனே இதுவாகுமானால், நாமும் பாவத்தை விட்டுப் புண்ணியம் ஏன் புரிய வேண்டும்?' என்று தீய மனம் நம்மை நோக்கிக் கேட்கிறது. ஆனால், நடந்தது என்ன? பாவம் ஒன்றும் புண்ணியமாக மாறிவிடவில்லை. இருள் நீங்கவே, ஒளி தானே தோன்றுவதைப் போல, அறியாமையைப் போக்கி அன்பால் இன்பம் நல்கி ஆட்கொள்ள முனையும் அவன் கருணைத் திறத்தின் திருவிளையாடல் இது.

அவன் செய்த திருவிளையாடல் இது ஒன்று தானா? சனகாதி யோகியர்கட்கும் தேடிக் காணக் கிடையாத அக்கருணை வள்ளல் மணிவாசகனார் பொருட்டுத் தானே அவரைத் தேடிக் குருந்தமரத்தடியில் குருவாய் வந்து அமர்ந்து, அருமறையின் உட்பொருளை உபதேசித்து மறைந்தான்; நரியைப் பரியாக்கியும் பரியை நரியாக்கியும் தந்து நின்றான்; கூலியாளாய் உருத்தாங்கி வந்து பாண்டியனிடம் பிரம்படியும் பட்டான். இப்படித் தயவுடன் தாம் போன புறம் எல்லாம் திரிந்து திரிந்து வருந்தித் தம்மை ஆட்கொள்ள முயன்ற இறைவனது அடங்காத் தடங்கருணையைநினைந்து நினைந்து, மணிவாசகனார் உருகி நின்றதை அவரது திருவாசகங்கள் யாவுமே ஒரு வாசகமாய் நின்று உணர்த்துகின்றன. உலகத்தில் எல்லாராலும் விரும்பப்படுகிற செல்வமானது, எல்லாரையும் வெறுத்துதான் ஒருவரை வருந்தித் தேடி வந்தடைந்தது என்று சொன்னால் அச்செல்வனது பெரும்பேற்றினை என்னவென்று

புகழ்வோம்! அவ்வளவு புகழ்ச்சியும் மகிழ்ச்சியும் தோன்ற, அவர்

> "உலப்பிலா ஆனந்த மாய
> தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே!"

என்று வாயாரக் கூறி வியக்கிறார். உலக வாழ்க்கைக்கு இன்றியமையாததாய், அருமையும் உடையதாய், எக்காலும் யாவராலும் விரும்பப்படுவதாயுள்ள 'செல்வம்' என்று மணிவாசகனார் சிவனைச் சுட்டுவதால், அவரது அருள் வாழ்க்கையின் நிலை நமக்கு நன்கு புலனாகிறது. செல்வப் பொருள் கொண்டு வாழும் புவி வாழ்க்கையிலே, நாம் சென்று தேடியே செல்வத்தை அடையவேண்டியிருக்கிறது. சில சமயம் அது நமக்குக் கிட்டாமலும் நம்மைத் துயர்ப்படுத்தும். மற்று, அவ்வருள் வாழ்க்கைச் செல்வமான சிவபிரான், அப்படி இல்லை. நம்மைத் தேடி அவனே வந்தடைகிறான்; நிச்சயம் நம்மைப் பெற்றுவிடவும் செய்கிறான். பொருட்செல்வமோ, தானே நம்மை மகிழ்விக்கச் செய்யும் சத்தி அற்றது. அதுகொண்டு மற்றவற்றை அடைய வேண்டும்; அப்போதே மகிழ்ச்சி. ஆனால், அருட் செல்வமான சிவபிரானை அடைதலே மகிழ்ச்சி: அவனோடு கூடுதலே பெரும்பேரின்பம் தரவல்லது. இப்படிச் செல்வமாய் விளங்கும் சிவபெருமான் அடியார்க்கு எளியனாய்ப் புறம் புறம் திரிந்து ஆட்கொள்ளும் பேரவாவினனாய் விளங்குகிறான். இப்படிப்பட்ட நுண்ணிய கருத்து விளக்கங்களை எல்லாம் ஒருங்கே அமையும்படி செய்திருக்கிறார், 'புறம் புறம் திரிந்த செல்வமே' என்ற சிறிய தொடரிலே!

இப்படி, தாம் மறந்தும், தம்மைச் சிவபிரான்

மறவாது ஆட்கொண்டு இன்பமூட்டி மகிழ்வித்து அறிவு தந்த செல்வமாய் நின்றபோது, அவ்வண்ணலை மறக்க அவரால் ஆகுமா? அல்லது அவனைக் கைவிடத்தான் முடியுமா? முடியவே முடியாது. இந் நிலையிலே அவர் பேசுகிறார்:

"புறம்புறம் திரிந்த செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்!
எங்குஎழுந்து அருளுவது இனியே?"

என்று, மறைகளும் தேடி அறிய முடியாது மயங்க நின்ற சிவனை, 'நான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்; நீ என்னை விட்டு எங்குப் போக முடியும்?' என்று கேட்கிறாரே! என்ன மாறுதல் கண்டீர்களா? "மாறுதல் ஒன்றுமில்லை: சிவபெருமானே இவரைத் தேடியடையும் நோக்குடன் புறம் புறம் திரிந்து வருந்தினான். அவனால் இது வரை இவரை அடைய முடியாதிருந்ததற்குக் காரணம், இவர் அவ் விறைவனை விரும்பிப் பற்றாது இருந்ததேயாகும்: இப்போதோ, தம்மைத் தேடி விரும்பும் அவனைத் தாமும் விரும்பித் தேட முற்பட்டுவிட்டார். திரிந்த அவன் இவரைப் பெற்றால் விடமாட்டான்: சிவனைத் தொடர்ந்து பிடித்து வரக் கருதிய இவரும், இறைவன் சிக்கினால் விடமாட்டார்; ஆகவேதான் மணிவாசகனார் அவ்வளவு தைரியமாகக் கேட்கிறார்," என்று நீங்கள் சொல்லலாம். இந்த நிலைமாறுதலுக்குத்தான் காரணம் என்ன? 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கிய பெருமையே எனத் தட்டில்லை. கடவுள் அருள் கைவரப் பெற்ற ஞானிகள், இப்படித்தான் கடவுளையும் கட்டுப்படுத்திப் பேசுவதைப் பல இடங்களிலும் நாம் பார்க்கிறோம். திருமாலைத் தம் மனத்து வைத்துத் துதித்த ஆழ்வார்

ஒருவர், 'யான் உனை இனிப் போகவொட்டேன்!' என்று கூறுகிறார். இவர்கள் பேசுவது இருக்கட்டும்; பெருமான் இப்படி அடியவர்கட்கு எளியவனாய் இருக்கிறான் என்பதுதான் குறிப்பிடத்தக்க செய்தி. இப்படி ஆண்டவன் அடியவனுக்கு அடங்கிப் படிந்து கிடப்பதை, 'ஆனைத் தொழில்' என்று உரையாசிரியர் ஒருவர் அங்குக் குறிப்பிடுகின்றார். யானை தன்மேல் ஏறுகிறவனுக்கு மனம் இருந்தால் படுத்துக் கிடந்து தன் தாளையே தூக்கி ஏற உதவி இடம் கொடுக்கும்; தன்னைக் கட்டத் தானே பாகனுக்குச் சங்கிலியும் எடுத்துக் கொடுக்கும்: அது போல, எம்பெருமானும் தானே வந்து அடியவனுள் புகுந்து, கட்டுண்ணப்பட்டுக் கிடப்பானாம்! அப்படியே சிவபிரான் மணிவாசகனாருக்கு உரியவனான ஒரு தகுதியினாலேதான், 'நீ எங்கெழுந்தருளுவது இனி?' என்று இறுமாந்து கேட்கிறார். இவரைத் தொடர்ந்து 'புறம் புறம் திரிந்து' இறைவன் வருந்தினான் முன்பெல்லாம்; இப்போது இறைவனைத் தொடர்ந்து சென்ற இடமெல்லாம் நின்று, 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன். நீ எங்கெழுந்தருளுவது இனி?' என்று சொல்லி, வேறெங்கும் அவனைப் போகவொட்டாமற் செய்துவிட்டார் இவர். மாணிக்கவாசகர் இவ்வாறு கேட்பதில் பிறிதொரு கருத்தும் உண்டு: ஆண்டவன் இருப்பிடமும் அடியவன் உள்ளந்தான். அவன் இருப்பை உணர்ந்து விரும்பாத பொய்யர்க்கு, அவன் பொய்யன். மெய்யர்க்கு மெய்யனாய் அடியார் மனம் பொருந்தி வீற்றிருத்தல் அவன் இயல்பு. 'மாசற்றார் மனத்துளான்' என்பது அவனுக்கு ஒரு விருது. ஆகவே, 'இனி நான் அறிவுகெட்டுச் சிவனை மறந்தி

ருக்க மாட்டேன். அவனும் என்னை விட்டு நீங்க மாட்டான்,' என்று தந்துணிவால் அவர் அப்படிக் கூறினர்.

இப்பொழுது முழுமையும் அச்செய்யுளை ஒரு முறை நோக்குங்கள். என்ன சொல் நயம்! என்ன பொருளாழம்! என்ன கருத்துச் செறிவு! என்ன உவமையின் பொருத்தம்!

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை சுருக்கி, உள்ஒளி பெருக்கி,
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து, புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்!
எங்குஎழுந் தருளுவது இனியே!"

இப்படி இறையருள் பற்றிய அழகான செய்திகளை எல்லாம் மனங்கசிந்து பாடி நாமும் உணர்ந்து உருகும்படி செய்து நிற்கும் மணிவாசகனரியல்பினை உள்ளதுள்ளபடி உணர்ந்தார், அவரை, 'அறிவாற் சிவனே' என்று கொண்டு சிறப்பித்துப் போற்றுவர். இம்மதுரத் திருவாசகத்தை மறவாது தினம் ஒரு முறை சிந்தை செய்யினும், நமக்கு உலேவில் இன்பம் சுரந்து இறையருள் கிட்டும். அப்பயன் கிட்டினல், நாம் வீணே போக்கும் அவப்பொழுதும் தவப்பொழுதாகும்.

கடவுட்படைப்பில் மனிதப் பிறவி உயர்ந்தது. காரணம், பிறவற்றிற்கு இல்லாத பகுத்தறிவு உடைமையே ஆகும். அறிவுள்ள மனிதன், கல் கட்டைகளைப்போல ஜடப்பொருளாய் இருப்பதில்லை. உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் அறிவுக் கண்ணால் பார்த்து, நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, நல்லதில் நகைப்பும் தீயதில் வெறுப்பும் கொண்டு, நல்லதைக்கொள்ளவும் தீயதைத் தள்ளவும் முயற்சி செய்கின்றான். பொதுவாகக் கூறுமிடத்து, உலகிலுள்ள மக்கள் முயற்சிகள் யாவும், வேண்டுவதைப் பெறவும் வேண்டாததை விலக்கவுமே செய்யப்படுவன ஆகும்.

அறிவுக் கண்ணாற் கூர்ந்து நோக்கும் ஒருவனுக்கு இவ்வுலகம் இருவேறு வகைப்பட்ட காட்சிகளை அளித்து நிற்கிறது. உலகத்திலே, சுகம் – துக்கம், நன்மை – தீமை, ஒளி – இருள், மேடு - பள்ளம் என்றிப்படிப் பொருள்கள் யாவுமே 'மாறுபட்ட இரட்டை இயற்கைகளாக இணைந்து' நிற்கின்றன. இப்படிப்பட்ட இரட்டைகளிலே மக்கட்கு விருப்பு வெறுப்பு ஏற்படுவது இயற்கை. மேலும், இந் நன்மை தீமைகளைச் சேர்த்துணரும் திறமுடையவர்கட்குத்தான் 'நன்மையும் தீமையும் உடையது இவ்வுலகம்,' என்று அறியும் தன்மையும் உண்டாகிறது. அன்றிப் பருப்பொருள் நோக்குடன் இன்பக்காட்சிகளையே காண்கிறவர்களுக்கு, உலகம் ஓர் இன்பக் களஞ்சியமாகக் காட்சி அளிக்கும். அவ்வாறன்றித் துன்பத்தையே துருவிப் பார்த்துக்கொண்

டிருப்பவர்களுக்கு, உலகமே துன்பக் கடலாகத் தோன்றும். உலகில் இறப்பவர்களையே கணக்கெடுத்துக் கவலை கொண்டிருப்பவர்களுக்கு 'நாளடைவில் உலகம் முழுதுமே ஒரு சுடுகாடாகி விடும்,' எனத் தோன்றுவதும், பிறக்கும் குழந்தைகளையே கணக்கெடுத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு 'நாளடைவில் மக்கள் வசிப்பதற்கே உலகில் இனி இடமிரா்து,' என்று தோன்றுவதும் இயல்பே.

இத்தகைய பல்வேறு காட்சிகளைக் காணுவது, நாம் எந்தக் கோணத்தினின்று எப்படிப் பார்க்கிறோமோ, அதைப் பொறுத்தே இருக்கிறது. உலகில், 'இறப்பு - பிறப்பு' ஆகிய இரு வித இயற்கைகளையும், ஒன்றை ஒன்று சரிக்கட்டும் நோக்கத்துடனேயே இறைவன் அமைத்திருக்கிறான் என்பது சில கூர்த்த மதியினர்கட்குப் புலப்படாமற் போகாது.

இனி, இவ்வாறு உலகிலே காட்சியளிக்கும் மாறுபட்ட இரட்டைகளாகிய இன்ப துன்பங்களில் மனித சமூகம், ஆதி முதல் இன்பத்தையே விரும்பி ஏற்று மகிழ்ந்தும்; துன்பத்தைக் கண்டு கவன்று ஒதுங்கியும் வந்திருக்கின்றது. துன்பத்தை எக்காலும் மன்பதை விரும்புவதே இல்லை.

இன்பத்தையே விரும்பி, அதை அடையப் பலவேறு முயற்சிகளையும் ஒருவன் செய்து பலனை எதிர்பார்த்து நிற்கும் போது, அவன் நினைத்தபடி இன்பப் பேறே கிட்டிவிடும் என்றும் சொல்லி விடுவதற்கில்லை. 'ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்.' அப்போது அவன் மனநிலை

என்ன பாடு படுகிறது! சில காலம் வரை, 'நாம் கருதியபடி நமக்கு நன்மை நேரவில்லையே!' என்று வருந்திக்கொண்டேயிருக்கிறான். பின்பு, என்றும் அப்படியே வருந்தி ஒழிய அவனது மனநிலை இடந் தருகிறதில்லை. ஓரளவு மகிழ்ச்சியையே நாடி விரும் பும் இயல்புடைய மனம், தன்னோடு ஒத்து வருத்த முறுகிறவர்களைப் பார்த்து, 'நமக்குத் துணை இவர் கள் இருக்கிறார்கள்,' என்று தேற்றியோ, தன்னினும் தாழ்ந்தவர்களைப் பார்த்து, 'இவர்களைக்காட்டிலும் நாம் மேல்,' என்று மகிழ்ந்தோ, அமைதி அடைய முயற்சி செய்து வெற்றியும் பெற்றுவிடுகி றது. இப்படிப்பட்ட இயற்கையான நம்பிக்கை நினைவை மன்பதை பெறாது போயிருக்குமானால், உலகில் வசிக்கும் மக்கள் யாவருமே எவ்வளவும் அமைதியுடன் வாழ முடியாது.

மேற்காட்டியவாறுள்ள 'கற்பனை வழி'யைக் கற்பித்துக்கொண்டு, குறை நீக்கிச் சுகமடைவது தான், சிறந்த நிலை ஆகும். இது தவிர, ஒவ்வொரு வரும் அவரவர் நினைத்தபடி பயன் கிடைக்கப் பெற்று அதன் பிறகு உண்டாகும் மனநிறைவாலே தான் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்று இருந் தால், ஒரு நாளும் அது நடைபெறாது. 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே,' என்று கூறிய மூதுரையின் உட்கருத்தும் இதுவே ஆகும். செல் வம் பெற முயற்சி செய்கிற எவனுக்கும் அது கிட்டி விடும் என்று சொல்ல முடியாது. அவன் நினைத்த படி கிடைக்கவில்லை என்றால், மனத்துன்பம் அன்றோ ஏற்படும்? அப்படி வருந்தினால், அவ்வருத் தத்திற்கு என்றைக்கும் விடிவும் முடிவும் இல்லை. தன்னினும் தாழ்ந்த செல்வமுடையவர்களைக்

கண்டு, 'நம்முடைமை பெரிது' எனக்கொண்டு, மன வமைதியுடன் கூடித்தான் அவன் வாழ வேண்டும். இதுவே, வாழ்க்கையில் நலம் பெறும் வழி என்பதைக் காட்ட வந்த குமரகுருபர அடிகள்,

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை,
'அம்மா பெரிது!'என்று அகம்மகிழ்க.''

என்று கூறியுள்ள நல்வழி இவ்விடத்து நன்கு நினைவில் வைக்கத் தக்கது.

'கல்விச் செல்வம் பற்றி இப்படி நம்மினும் தாழ்ந்தோரை நோக்கித் தருக்கி நிற்றல் தகாது,'' என்று அவர் கூறுகின்றார். அவர் கூறினாலும் நடப்பது என்ன? வருந்தி முயன்று படிக்கும் ஒருவன், போதுமான அளவு தேர்ச்சி பெற்றுச் சிறக்க முடியவில்லை என்றால், அவன் செய்ய வேண்டுவது யாது? 'நாம் எப்படிப் படித்தும் பயனில்லையே! அறிவிலியாய் அல்லவா போய்விட்டோம்!' என்று வருந்திக்கொண்டே இருந்தால், அவனுக்கு மனவமைதி ஏற்பட வழியே இராது. பின்பு, அவனும் ஓரளவிற்குத் 'தலை விதி' என்று தேறியோ, 'மற்றைய கீழ்த்தரமானவர்கட்கு நாம் மேல்' என்று கருதியோ திருப்தி அடைகிற போது தான், அக்கவலை ஒழியப்பெற்று, அவனால் பிற துறைகளிலாவது முயன்று வெற்றி பெற முடியும். இப்படி, பிறர் குறை காரணமாகத் தம் நிறைவு கண்டு மகிழும் மனநிலை இயற்கையைப் பொறுத்தது என்றாலும், 'படிப்பதில் போதும் என்ற மனத்துடன் அமைதல் ஆகாது; கற்றோரை நோக்கிக் கருத்தழிந்து மேலும் மேலும் கற்க வேண்டும்,'' என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

முற்காட்டியவை யாவும் தனி மனிதரைப்

பொறுத்த செய்திகள் என்பது மட்டுமல்லாமல், மன்பதை முழுமைக்குமே பொருந்தும். சமய குரவர்கள், அருட்கவிஞர்கள், தீர்க்கதரிசிகள் என்னும் யாவருமே சமுதாயத்தை நல்வழியிலேயே உருவாக்க முனையும் உத்தம சீலர்கள். அவர்கள், தங்கள் தனி வாழ்க்கை நலத்தைக்காட்டிலும் பொதுச் சமுதாய நலத்தையே பெரிதாகக்கொண்டு, அதை உயர்த்து தற்கென உடல் பொருள் • ஆவி மூன்றையும் பிறருக்கு என ஈடுபடுத்தும் நன்மனம் உடையவர்கள். அவர்கள் அந்நோக்கோடு உலக நிலையை நோக்கும் போது, உலகிலே முற்கூறியவாறுள்ள இன்ப துன்பக் கலப்பைத்தான் காண்கிறார்கள்; "மக்கட்குத் துன்பம் நேரக்கூடாது. எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும். துன்பம் தரும் தீய வழியினின்று அவர்களைக் காப்பாற்ற வேண்டும்," என்னும் தீராத மனப்புழுக்கத்தோடு வருந்தி, 'நேர்ந்துள்ள துன்பங்களினின்று எந்த வகையில் காப்பாற்றி, மனித சமூகத்தை மன மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்ய முடியும்?' என்று ஒரு முகமாகக் கருதிப் பார்க்கிறார்கள். 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே,' என்ற தாயுமானவர் எண்ணம் மேன் மக்களது மனப்போக்கிற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இவ்வுலகில் நிறைந்துள்ள துன்பத்தை நினைக்கவும், அதை ஓரளவாவது விரும்பவும், அவர்களால் முடிவதே இல்லை. மேலும், நாம் ஒன்றை நினைத்து வருந்தும் போதோ அன்றி வேறு ஒன்றை நினைத்து மகிழும் போதோ அதற்கு எதிர்த் தட்டான பிறிதொன்றை, அதாவது, இன்பத்தில்

மூழ்கும்போது துன்பத்தினையும், துன்பத்தில் உழலும்போது இன்பத்தினையும்—நம் மனம் நினைக்கச் செய்யும். நல்லின்ப வாழ்விலே களித்து மூழ்கி இருப்பவன், 'இந்நிலை மாறி வறுமை வந்தடைந்தால் என்ன செய்வது!' என்று அஞ்சிக்கலங்குவதும், வறுமை மிஞ்சித் தாழ் நிலையில் துயர் உற்று இருப்பவன், 'நாளையாவது நல்ல காலம் வரும்!' என்று இன்பத்தை நினைத்து எதிர்நோக்கித் துன்பத்தைத் துய்த்துக் கழிப்பதும் உலகியலிலே நாம் காணக்கூடாதவை அல்ல. ஆகவே, துன்பத்திலே சிக்கிச் சுழலும் போது இன்பத்தை எதிர்நோக்கிய மகிழ்ச்சியும், இன்பத்திலே மூழ்கித் திளைக்கும் போது துன்பத்தை நினைத்து வரும் அச்சமும் மக்களது மனநிலையிலே அடுத்தடுத்துத் தோன்றி வரும் ஒரு வித இயற்கை என்றே முடிவு கட்ட வேண்டி வருகிறது.

இந்த மனநிலைமைக்கு உட்பட்டே, மேலே குறித்த கவிஞர், தீர்க்கதரிசிகள், சமயகுரவர் யாவரும் உலகின் துன்பங்களைக் காணும் போது முற்றும் அவற்றினின்று மாறுபட்ட ஓர் இன்ப உலகைப் பற்றி நினைவு கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட துன்பக்கலப்பே இல்லாத இன்பவுலகைக் கனவு உலகிலே உண்டாக்கி, அதை ஒத்து இவ்வுலகும் ஆகவேண்டும் என்றுகருதிவிடுகிறார்கள். அவர்களால் காட்டப்படும் 'கனவு உலகின்' வருணனைகளைக் கேட்கும் போது, அதிலே இவ்வுலகத் துன்பத்தின் சாயையே படிந்திருப்பதில்லை. இன்பமயமாகவே அவ்வுலகம் இலங்குகிறது. பசி, பிணி, மூப்பு, துன்பம் இங்கு உண்டு என்றால், அங்கு அவை மக்களை வருத்துவதில்லை. இங்கு இறப்புத்

துன்பம் என்றால், அங்குச் சாவாத அமரநிலை. இங்கே, கிடைப்பது சின்றின்பம்; அங்கே பெறுவது பெரும்பேரின்பம். இங்கு இரவு பகல் உண்டு; அங்கு இரவு பகலில்லை. எனவே, மேற்காட்டிய மனநிலைக்கு உட்பட்டு, உலகில் துன்பங்களைக் காணச் சகியாதவர்களாய், குறை நீங்கிய இன்பவுலகைக்காணும் ஆசையோடு அவர்களால் படைக்கப்பட்ட ஓர் இன்பக்கற்பனையுலகந்தான், நூல்களாலும் சமயங்களாலும் சுட்டப்படும் வீட்டு உலகம்—அல்லது மோட்ச உலகம்—என்பதை எவரும் நன்குணர முடியும்.

வீட்டுலகத்தை இவ்வாறு கற்பனையுலகம் என்று பேசுவதில் பிழை ஒன்றும் இல்லை. வீட்டுலகத்தைப் பற்றி நம் பழந்தமிழ் மக்கள் கொண்டிருந்த கருத்து இதுவே ஆகும். 'மோட்சம் என்பது எங்கேயோ கண்ணுக்கு எட்டாத தொலையில் இருக்கும் ஒரு தனியுலகம்,' என்ற கருத்துக்கூடத் தமிழர்களிடையே இருந்ததாக நாம் கேட்டறிவதில்லை. வீட்டுலகைப் பற்றித் தமிழர் கொண்ட கொள்கை இன்னதென்று காட்டும் ஒரு செய்யுட் பகுதி, 'அறநெறிச்சாரம்' என்னும் நீதி நூலிலே உள்ளது.

> " பொய்தீர் புலவர் பொருள்புரிந்து ஆராய்ந்த
> மைதீர் உலகு "

"பொய்ம்மை அற்ற, அதாவது உலகின் நன்மையே குறிக்கொண்ட வாய்மை உள்ள புலவர் பெருமக்கள் உலகிலே நிறைந்துள்ள துன்பங்களைக் கண்டு வெறுத்து, 'இக்குற்றங்களற்ற ஓர் உலகைச் சமைக்க வேண்டும்,' என்பதைப் பொருளாகக் கொண்டு, அவ்வாறு கற்பனையால் குற்றம் நீக்கி

இன்பநிறைவேயுடையதாகக் காட்டிய வீட்டு உலகம் என்பது, அவ்வடிகளின் தெளிந்த பொருள்.

உலகின் துயர் நிழலே இல்லாத ஒரு கற்பனை உலகை 'வீட்டு உலகு' என்று படைத்தது போலவே, உலகில் காணப்படும் இன்பச் சாயையே இல்லாத ஒரு கொடியவுலகை 'நரகம்' என்ற பெயராலும் படைத்துவிட்டனர். எனவே, விண் மண் பாதலம் என்று கொள்ளுகிற மூவுலக வகைகளிலே, விண்ணும் பாதலமும் முறையே இன்ப துன்ப நிறைவுகளைக் கொண்ட 'கற்பனை உலகங்களே' ஆம் என்பது புலனாகின்றது.

இனி, "இவ்விரு வேறு உலகங்களும் தனித் தனி வெவ்வேறு இடங்களிலே இருக்கின்றன; அங்குச் சென்றுதான் நாம் இன்ப துன்பங்களைத் துய்க்க வேண்டும்," என்று கூடக் கூற வேண்டுவதில்லை. இவ்வுலகிலேயே, இன்பக் களியிலே மூழ்கி இருப்பவனைச் 'சுவர்க்கானுபவத்திலிருக்கிறான்,' என்று பேசுவதும், மிகப் பெரிய துன்பச் சுழலில் சிக்கித் தவிப்பவனை, 'நரக வேதனை அனுபவிக்கிறான்,' என்று சொல்வதும் நாம் நன்கு அறிந்தவை. "நரகமே சுவர்க்கமாகும் நாமங்கள் உடைய நம்பீ!" என்று திருமாலை நோக்கி ஆழ்வார் விளித்தார். இரண்டும் வெவ்வேறு உலகமானால், ஒன்று மற்றொன்றாவது எங்ஙனம் இயலுவதாகும்? எனவே, இவ்வுலக இன்ப அனுபவத்தையும் துன்ப அனுபவத்தையுமே 'மோட்ச நரகங்கள்' குறிப்பிடுகின்றன என்பது தெளியலாகும். "வீட்டு உலகில் நான் அடிமையாய் வாழ்வதைவிட நரகிலே சென்று சுதந்தரமாய் இருக்கவே விரும்புகிறேன்," என மேனாட்டுக் கவிஞரான மில்டன் தமது பனுவ

லில் கூறியுள்ளார். அதன் கருத்து என்ன? மோட்ச நரகங்கள் இடவேறுபாட்டைக் குறிப்பிடாமல் துய்த்தல் வேறுபாட்டையே குறிப்பிடுகின்றன என்பதே.

அதிவீரராம பாண்டியரும் தமது **திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி** என்னும் நூலிலே 'திருக்களா நீழலில் வீற்றிருக்கும் இறைவன், என் துன்பங்களைப் போக்கி இவ்வுலகிலேயே வீட்டுலக இன்பத்தை எனக்களித்தான்!' என்னும் கருத்தினை, "என் பிழை பொறுத்து அழியாத திருவை அம்புவிச் சிறப்பொடும் அளித்தவன் திருக்களாவுடையோனே," என்று பாடியிருப்பதும் இங்குக் கருதத் தக்கதாம். இங்ஙனம் மோட்ச நரகங்களைப் பற்றிக் கற்பனை செய்து அவற்றின் நுகர்ச்சிக்கான முறை பற்றிக் கூறும் உண்மை நம் நாட்டு இலக்கியத்திற்கு மாத்திரம் அன்றிப் பிற நாட்டு இலக்கியங்களுக்குமே ஒத்ததாகும் என்பதனை ஆராய்ந்து அறியலாகும்.

'இப்படி, 'மோட்சமும் நரகமும்' ஆக இரு வேறுலகங்களைக் கற்பனை செய்து, மக்களை நம்பி ஊகிக்கும்படி செய்வதால், சமூகத்திற்கு யாது நன்மை விளையும்? இப்படிப்பட்ட புனைந்துரையான கருத்துக்களை எல்லா நாட்டாருமே ஏன் தத்தம் இலக்கியங்களில் போற்றி ஏற்று ஒழுகுகின்றனர்? கற்பனை உலகினையே சிறந்ததாகக் கண்டு, அதிலேயே விருப்பம் ஏற்படும் நிலை ஏற்பட்டால், கண் கண்ட இவ்வுலக வாழ்விலே வெறுப்பே விளைந்து சமூக முழுமைக்குமே துறவுமனப்பான்மை ஏற்பட்டுவிட மாட்டாதா?' என்பன போன்ற சில ஐயங்கள் நமக்குத் தோன்றலாம்.

மோட்ச நரகங்களைப் பற்றிய சிந்தனைகள், என்றென்றைக்கும் மக்களிடையே இவ்வுலக வாழ்விலே வெறுப்படைந்துவிடும்படியான போக்கினைத் தூண்டியதும் இல்லை; இனித் தூண்டிவிடப் போவதும் இல்லை. அதற்கு மறுதலையாக, இவ்வுலக வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி மக்களை இன்ப நிலை கண்டு மகிழுமாறு செய்யவே அவை உதவியிருக்கின்றன; இனியும், அவ்வாறே உதவும். ஓர் உதாரணம் பார்ப்போம்:

படித்தவர் யாவருமே வாழ்க்கையில் எல்லா நலமும் பெற்று இன்பத்தில் மூழ்கி இருப்பார் என்று சொல்லிவிடுவதற்கு இல்லை. பலர் வறுமையிலே மூழ்கித் துன்பத்திலே உழன்றும் வருந்துகின்றனர். படித்த படிப்பும் அடைந்த வறுமையும், ஒன்றற்கொன்று காரணமன்று. என்ருலும், 'படித்தவர்களும் வறுமையிலே வாடுகிருர்கள்,' என்பது என்னவோ மறுக்க முடியாத உண்மைதான். எனினும், உண்மையின் ஒரு கூற்றை, அதாவது படித்த பெரும்பாலார் படும் துன்பநிலையைச் சித்திரித்துக் காட்டாமலே, "படித்தால் அறிவு வளரும்: அறிவு மிகுந்தால் நல்ல தேர்ச்சி பெறலாம்: நல்ல தேர்ச்சியால் பிறர் மெச்சப் பரிசு கிடைக்கும். பரிசு பெற்ற ஒருவர் மற்றவரினும் உயர்மதிப்புப் பெறுவர். மதிப்பு உயரவே நல்ல அலுவல் அவருக்குக் கிடைக்கும். நல்ல அலுவலினுல் உயர்ந்த ஊதியம் வரும். ஊதிய உயர்வு பெற்ருல், இவ்வுலகில் துன்பமின்றி இன்ப வாழ்வு வாழலாம்," என்பவை போன்று வருங்கால நன்மைகளையே ஒன்றன் மேல் ஒன்ருகக் கற்பித்து அடுக்கிக் காட்டினுல், அவற்றைக் கேள்விப்படும் மிகக் கீழ்த்தரமான மாணவருக்குக் கூடக்

'கற்க வேண்டும்' என்ற ஆசையும் துணிவும் ஏற்பட்டு, அவ்வழியிலே முயலத் தூண்டிவிடும். பின் 'வருங்கால நன்மைகளையே' குறிக்கோளாகக் கொண்டு, அதையே இலட்சியமாக வைத்து முயன்று படிக்க ஆரம்பித்து, அதே மாணவன் வெற்றியும் பெற்றுச் சிறந்துவிடுகிறான். இப்படித் துன்பத்தை மறைத்து ஒன்றிலுள்ள நன்மைகளையே பிரித்தெடுத்துப் பெருக்கிக் காட்டும் போது யாவருக்குமே அவைகளில் கவர்ச்சி ஏற்படுகிறது. பின்பு, 'அந்த இலட்சியத்தை நாம் இங்கு இப்போதே அடைய முயல வேண்டும்;' என்று கருதி, அதற்கு இயையத் தமது சீர் கெட்ட வாழ்க்கையைத் திருத்திக்கொள்ளவும் வழியேற்பட்டுவிடுகிறது. இவ்வண்ணம் இவ்வுலக வாழ்க்கையைத் திருத்திச் செப்பனிட்டு நல்வாழ்வு வாழ்வதற்கு ஒரு கருவியாய் இருக்கும் காரணத்தாலேதான் மறுமையைப் பற்றிய சிந்தனைகள், வீட்டுலகத்தைப் பற்றிய இன்பக் கனவுகள் இவைகளைக் கொள்ளுமாறு எல்லா நாட்டுக் கவிஞர்களும் சமய குரவர்களும் கூறியும் அறிவுறுத்தியும் வந்திருக்கிறார்கள். பிரௌனிங்கு என்ற மேனாட்டுக் கவிஞர் கூறியிருப்பதைப் பார்த்தால், இம்மை மறுமைகளைக் குறித்து அவர் எவ்விதக் கொள்கை கொண்டிருந்தார் என்பது நமக்கு நன்கு விளங்குவதுடன், நாம் முற்கூறிய கொள்கைகளுக்கு அவை எவ்வகையில் அரண் செய்து நிற்கின்றன என்பதையும் கண்டு மகிழலாம். "வாழ்க்கை என்பது ஒரு பகுதிதான் : ஒரு வட்டத்தின் சிறு வளைவுதான் அது. வட்டம் பூர்த்தியாவது மேல் வாழ்வில். மேல் உலக வாழ்வைப் பெறத்தான் வாழ்க்கையே ஏற்பட்டது. சத்திரம்

வீடாகுமா? இவ்வுலக வாழ்க்கை என்பது ஒரு தங்கும் இடந்தான்,'' என்பது அவரது கொள்கை.

நரகத்தைப் பற்றிய சிந்தனையும், இப்படியே தீங்கியற்றுவதால் — நமக்கு வரும் கேடுகளையும் துன்பங்களையுமே வருணித்துப் பெருக்கிக் காட்டி, வாழ்க்கையில் தீங்கை ஒதுக்கி வாழ வழி கோலுகிறது. நரக வேதனைகளைப் பற்றி நான் கேள்விப்படுகிறேன். உலகில் பொய் கூறியவர் நாவினைப் பழுக்கக் காய்ச்சிய இரும்புச் சலாகையால் சுட்டு வருத்துவார்களாம். இப்படியே பல வேறு பாவங்கட்கும் பல பல தண்டனைகள் ஏற்பட்டிருக்கும் அல்லவா? நான் செய்த பாவங்களைக் கணக்கிட்டால், "நானே நாநாவித நரகம் புகும் பாவம் செய்தேன்!" என்னுமாறு மிகுதிப்பட்டுக் கிடக்கும். இவை எல்லாம் கேட்டு, நான் செய்துள்ள பாவத்தையும் கூட்டி நினைக்கும் போது மிக மிக அஞ்சுகின்றேன்! இவ்வச்சத்தாலேதான், 'என் பாவங்களை மன்னி!' என்று சொல்லி உன்னைச் சரண் புகுகின்றேன்,'' என்ற கருத்துப்படத் திருமங்கை மன்னர் கூறியிருப்பது கொண்டு, நரக லோக வருணனையும் மக்கள் வாழ்வைச் சீர்படுத்தும் என்பதைத் தெரியலாம்.

எனவே, இவ்வுலக வாழ்க்கையைச் செம்மையுறுத்திச் சீருறுத்துவதற்கான நிலையிலே கொண்ட 'இலட்சியவுலகங்களே' மோட்ச நரகங்கள் என்பதைப் பலபடியாலும் நாம் கண்டோம்! இந்த நிலையிலேதான், சமீப காலத்திலும் இவ்வுலகத் தீமைகளைப்போக்கி நன்மை மிக்கதாக இவ்வுலகினை மாற்றப் பல இலட்சியக் கனவுகளைக் காண்கிற பல பெரியார்களையும் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்

றேம். காந்தியடிகள், அரசியலறிஞர் வெல்ஸ், ருஷியப் பெருஞானியார் டால்ஸ்டாய், இரவீந்திர நாத தாகூர், ஜியார்ஜ் பெர்னுடுஷா முதலிய சீரிய அறிஞருள் ஒவ்வொரு வரும், தத்தம் கருத்துப்படி ஒவ்வோர் இலட்சியங் கொண்டு அதற்கு இயைய இவ்வுலகைச் சமைக்கப் பார்க்கின்றனர். மேற்காட்டிய அனைவரும், ஒவ் வொரு குறையை இவ்வுலகிலே கண்டு, 'இக்குறை பெருகிக்கொண்டே போகுமானுல், நாளடைவில் உலகின் கதி என்னவாகும்?' என்பதைத் தீர்க்க தரிசனத்தால் நுனித்துணர்ந்து, 'அப்படி வருங் காலப் பேராபத்தினின்று தடுத்து உலகை உய்விக்க வேண்டுமானுல், இப்பொழுது முதற்கொண்டே உலகினை எவ்வுருவினதாகச் சமைக்க வேண்டும்?" என்ற கருத்துக்கொண்டு முனைந்த உத்தம சீலர் கள் ஆவார்கள்.

முற்கூறிய எல்லாரும் உலகச் சீர்திருத்தத் தையே விரும்பி நிற்கின்றவர் எனினும், உலகம் நன்னிலையுற்றுத் திருந்த அவரவர் சொல்லும் வழி துறைகள் வெவ்வேருனவைகளாய் இருக்கின்றன. சுருங்கச் சொன்னுல், அவர்கள் வெவ்வேறு இலட் சியங்களைக் கொண்டவர்கள் என்பது தெரிய வரும். பொது நோக்காகப் பார்க்கும்போது அவர்களது வழி துறைகளின் போக்கிலே ஓர் எளிய வேறுபாடு நமக்குத் தென்படுகிறது. இரவீந்திரரும் வெல்ஸுும் கலை மூலமும் கல்வி மூலமும் உலகத்தை ஒன்ருக்கி அவ்வொற்றுமையிலே விளையும் இன்ப உலகைப் படைக்கலாம் என்று கருதினுர்கள். ஷாவும் காந்தி யும், உலக நலத்தினை விரும்பி, மக்களது வாழ்க்கை முறை முழுவதுமே அடியிலிருந்து மாறித் தீரவேண் டும் என்று துணிகின்ருர்கள். எனினும், இந்த

அறிஞர்களுடைய முடிவு, அதாவது 'இலட்சியம்' ஒன்ருகவே இருக்கிறது.

"உலகத்தில், போர்கள் நிற்க வேண்டும்; அமைதி நிலவ வேண்டும். மக்கள் எல்லாரும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும். இன்ப வாழ்வே மனிதப் பிறவியின் இலட்சியம்: இவற்றிற்காக மக்கள் தந்நல அபிமான விருப்புக்களை ஓர் அளவிற்குள் நிறுத்தி, 'அகிலவுலக' எண்ணம் கொள்ள வேண்டும்," என்னும் இந்த எண்ணங்களை எல்லாம் எல்லாருடைய முடிவும் ஒரே மனமாக ஆதரிக்கிறது. இப்படிப் பார்த்தால், தீர்க்கதரிசிகளுள் சிலர், "தனி மனித வாழ்க்கையைச் சீர்படுத்தினல் போதும்; பின்பு மனித சமூகம் தானகவே சீரடைந்துவிடும்," என்று கருதுகின்றனர். "மனித இனமே முதலில் சீர்திருத்தம் அடைந்து ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வந்தால் மட்டுமே தனி மனித வாழ்வு உருப்படும்," என்று மற்றும் சிலர் முன்னதனேடு மாறுபட எண்ணுகின்றனர். இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தம் போக்கிற்கு இயைந்தபடி எவ்வகைச் சீர்திருத்தத் திட்டங்களை இட்டாலும் உலகம் முன்னேறி இன்ப வாழ்வை எய்துவதே இறுதிலட்சியமாகும். ஆனல், அதற்கு அடிப்படைச் சாதனம் ஒற்றுமையே ஆகும் என்பதை நாம் நன்கு தெரிந்துகொள்ளலாம். முற்கூறிய பெரியார்கள் தனித்தனியான போக்குடையராய்க் காணப்பட்டாலும், அவர்கள் காட்டும் தனி வழிகள் யாவும் நம்மை 'ஒற்றுமை' என்ற பெருவழிக்கே கொண்டு போய்ச் சேர்க்கின்றன.

உலகப் பெரியார்கள், அவர்கள் கொண்ட பெரிய இலட்சியங்கள், அந்த இலட்சியங்களை

அடைய அவரவர்கள் காட்டிய வழி துறைகள் என்ற இவைகளைப் பற்றி எல்லாம் நாம் தெரிந்துகொள்ளும் போது, நம் முன்னோர்களாகிய தமிழ் மக்கள் சென்ற நெறி பற்றியும் நினைக்க நமக்குத் தோன்றுகிறது. கல் தோன்றி மண் தோன்றாத காலந் தொடங்கி உலகில் முன் தோன்றி மூத்த குடிகளாய் உள்ளவர்கள் நம் தமிழ் மக்கள். "அவர்கள் இவ்வுலகைப் பற்றிக் கொண்ட கருத்து யாது? இவ்வுலகிலே குறைகளாக அவர்கள் கண்டவை எவை? அங்ஙனம் கண்டுகொண்ட குறைகளை எங்ஙனம் நீக்கி வாழ முயற்சி செய்தார்கள்? அவர்கள், இன்ப வாழ்க்கை வாழ மக்கட்குக் காட்டிய வழி துறைகள் யாவை? அவர்கள் முன்னை நாளிலே தமிழ் நாட்டை எத்தகைய இலட்சியவுலகமாகச் சமைத்திருந்தார்கள்?" என்பவை போன்ற சில வினாக்களுக்கு விடை காணும் முகத்தான், பழந் தமிழ் இலக்கியங்களிற் கண்டுள்ள சில குறிப்புக்களைக் காட்டி இக்கட்டுரையை முடிக்கலாம்.

'இயற்கையின் நுட்பமே ஒருமையில் நிலைத்த பன்மை! இடை விடாமல் மீண்டும் 'ஒருமை' ஆக முயலும் ஓயாத இயக்கத்திலே அமைந்திருக்கின்றது,' என்ற அரிய செய்தி, பழங்கால முதலே தமிழ்ப் பெருமக்கள் அறிந்திருந்தது. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்க்கை வழியை இரண்டிலிருந்து ஒன்றாகச் சுருக்கி, கூட்டுக் குடும்ப வாழ்க்கை அமைத்த பண்டைக் காலம் முதல் 'உலகம் அனைத்தும் ஒன்று என்ற ஒற்றுமை ஏற்பட்டு வளர வேண்டும்,' என்ற உணர்வு நிலை வளர்ந்து வரும் இற்றை நாள் வரை இதே இயற்கை விதிதான் வேலை செய்து வருகிறது என்கிற தத்துவ

நுணுக்கத்தையும் வெகு நன்ருக உணர்ந்தவர்கள் தமிழர்கள். 'மனித வாழ்க்கை பற்றிய அளவில், அதன் பல்வேறு துறைகளில், ஒவ்வொன்றும் தன் நலத்தின் ஒரு கூற்றை மறைத்தோ இழந்தோதான் முழு அமைப்பாக மாற வேண்டும்,' என்னும் உயர் பெருங்கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கை என்றைக்கும் தமிழர்களிடை உண்டு. இப்படிப்பட்ட பல இயற்கையோடு இயைந்த உண்மை நுணுக்கங்களை மிகப் பழங்கால முதலே கண்டறிந்திருந்த சிறப்புடைமையாலேதான், தமிழர்கள் தங்கள் வாழ்க்கைத் துறை ஒவ்வொன்றிலும் ஒற்றுமைப் பண்பை மேற்கொண்டு வளர்த்து வந்திருக்கின்ருர்கள் என்பதை நாம் உணர வல்லவர்களாய் இருக்கிறேம்.

'இயற்கையே பல துறையிலும் வேறுபாடு உடையதுதான் என்ருலும், அறிவால் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இன்ப நிலைக்குகந்தது,' என்னும் பெருங்கொள்கை தமிழர் வாழ்க்கைத் துறையில் ஊறி வளம் பெற்றிருந்ததுபோல, வேறு எந்தச்சமூகத்தாரிடமும் அந்த அளவிற்கு ஊறி வலி பெற்றிருந்ததாகக் காண முடிவதில்லை. அதனுலேதான், 'உலக மக்கள் யாருமே ஓரினம்,' என்ற ஒருமை உணர்ச்சி சங்க காலத்திலேயே தமிழ்ப் பெருமக்களிடம் வேரூன்றியிருந்தது. "யாதும் ஊரே; யாவரும் கேளிர்," என்று **கணியன் பூங்குன்றனர்** பாடியுள்ள புறநானூற்றடி, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னரே தமிழர்தம் 'ஒருலகக் கொள்கை' இன்னவாறிருந்தது என்பதை ஒருவாறு ஊகித்துணர நமக்கு உதவி நிற்கிறது. இந்த ஒற்றுமைப் பண்பு இன்றளவும் தமிழ

ரிடைப் போதிய அளவு வலுப் பெற்றுத்தான் நிற்கிறது. இவ்வொற்றுமைப் பண்பிலே ஊறிய ஊற்ற மிகுதியாலேதான் கம்பநாடர் இராமபிரானை 'அழுக்கு வேடுவன், குரக்கினம், அரக்கர் என்றிவரோடு இழுக்கிலாது' உடன் பிறப்பெனக் கலந்து இயைந்ததாகக்காட்டிப் போயினர் எனவும் எண்ண இடம் உண்டு. இந்தப் பண்பாட்டிலே வளர்ந்த பெருமைதான், 'எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்று நம் காலப் பெருங்கவிஞர் பாரதியாரைப் பறையறையும்படி செய்திருக்கிறது.

இங்ஙனம் சிறந்து நின்ற ஒற்றுமைப் பண்பைச் சங்க நாளிலே தமிழர்கள் மொழி மூலமே கைவரப் பெற்று மகிழ்ந்து வந்தார்கள் என்பதும் நினைவு கொள்ளத்தக்கது. அந்நாளிலே சைவரும், வைணவரும், பௌத்தரும், சமணரும், பின்னாளிலே இஸ்லாமியரும், கிறிஸ்தவரும், அரசரும், புலவரும் மொழியின் மூலம் சிறந்த ஒற்றுமையை அடைந்து, வேறுபாடு கருதாது மகிழ்ந்து குலவியிருந்ததைத் தமிழிலக்கிய வரலாறு உள்ளங்கை நெல்லிக் கனிபோல நன்கு விளக்கிக் காட்டும். எனவே, சங்க காலத்தில், மொழி ஒன்றுமே யாவரையும் ஒன்றுபடுத்தி, கலைப் பண்பாட்டை வளர்த்து, வேறுபாடின்றி யாவரும் இன்ப வாழ்க்கை வாழ அடிகோலி, தமிழகத்தை 'இலட்சியவுலகமாகவே' திகழ வைக்க ஒத்துதவி புரிந்து வந்ததென்பதை நாம் உணரலாம். இவ்வொற்றுமை நிலை, சங்க காலத் தமிழ் இலட்சியவுலகத்தை இன்னும் வெவ்வேறு துறைகளில் வேறு எப்படி எப்படி வைத்துச் சிறக்கச் செய்திருந்தது என்பதையும் காண்போம்:

தாய் மொழி அந்நாளில் நன்னிலை உற்றிருந்தது. தமிழ், இயல், இசை, நாடகம் என்னும் முத்துறைப் பகுப்புடையதாய்ப் புலவர்களால் சங்கமிருந்து ஆராய்ந்து வளர்க்கப்பட்டு வந்தது. மொழி வளர்ச்சிக்கு உரிய சங்கங்களை அரசியலில் ஓர் அங்கம் எனக்கொண்டு நடத்திய செய்தி பிற நாட்டு அரசியல் செய்திகளிற் காணப்படாத ஒரு புதுமை ஆகும். வேறுபாடு இன்றி யாவரும் தமிழறிவு பெற்றுப் பெரும்புலவராய் அமர்ந்திருந்தனர். இற்றை நாளில் இருப்பது போல வயிறு வளர்க்க விரும்பியவர் மட்டும் தமிழ் படித்ததோடன்றி, வெவ்வேறு தொழிற்றுறைகளில் உள்ளாரும் தமிழை விரும்பிக் கற்று நூல்களியற்றிப் பெயரடையும் அளவிற்குப் புலமை பெற்றுயர்ந்திருந்தார்கள். புவியரசரும் தமிழ் கற்ற பெரும்புலவர்களை உற்ற துணை எனப் பேணிப் பட்டமும் பதவியும் அளித்துப் போற்றி ஆதரித்து வந்தனர். புலவர் பெருமக்களும், பேரரசர்களது நல்லாதரவு பெற்று வறுமை நீங்கிச் செம்மையுடையராய் வாழ்ந்தது அன்றி, நாட்டு மக்கள் நலங்குறித்து நல்ல அறிவு நூல்களை இயற்றிப் பொதுநலத் தொண்டு புரிந்தும் நின்றனர். காவியம், செம்மை ஞானம், கலை நுட்பங்கள் ஆகிய இவை யாவும் மேலோங்கி நின்று விளக்கம் பெற, எல்லாவற்றிற்கும் மூலமாகச் 'சுதந்தரமும்' தமிழரசர்களின் கீழ் மக்கட்கு இருந்தது.

நாட்டு நிலையை விடுத்து, அரசியல் துறையில் பார்ப்போம்: அரசியல் நெறியை எடுத்துப் பார்த்தால், பழந்தமிழர் அரசியல் நெறிக்குச் சமமான பிறிதொன்றை எந்நாடுகளிலும் இன்றளவுங்கூடக் காண முடிவதில்லை. குடி மக்களிடம் ஆட்சியை

ஒப்படைக்கும் 'குடியரசு முறையால்' வரும் தீங்கையும்—முடியரசில் தனியாட்சியால் வரும் தீங்கையும் நீக்கி, இருமுறையும் இயைந்ததால் ஏற்படும் நன்மைகளைமட்டும் பெறும்படியான முறையிலே அமைந்த ஓர் அரசியல் திட்டத்தைப் பழந்தமிழ் மக்கள் கண்டு போற்றி, அதை நடைமுறையிலே மேற்கொண்டு வந்தார்கள். அரசனைத் தெய்வக்கூறு உடையவனாகக் கருதி, அவனிட்டது சட்டமாகப் பணிந்து ஒழுகி வந்த போதிலும், அவ்வரசனும், குலனருள் ஒழுக்கம் மிக்க மந்திரக் கிழவர்களைக் கண்ணாகக் கொண்டு அவர்கள் ஆலோசனையின் படியே நாடாட்சி புரிந்து வந்த முறைச் சிறப்பைப் பழைய அரசியல் ஏற்பாட்டிலே நாம் காண்கிறோம். புண்ணியப் பயனால் வந்த பிறப்பினனாகக் கருதப் பட்ட அரசனும், காட்சிக்கு எளியனாயும் கடுஞ்சொல்லன் அல்லனாயுமிருந்து முறை கோடாது நீதி செலுத்தின செய்தியைச் சங்க இலக்கியங்கள் பலவற்றுள் நாம் அறியலாம். கோவலனைக் கொன்றது தவறு எனத் தெரிந்தவுடன், 'பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானோ அரசன்! யானே கள்வன்!' என்று வருந்திக்கூறி, மன்னவன் நெடுஞ்செழியன் மயங்கி வீழ்ந்திறந்தான் என்பதைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. பழந்தமிழ் மன்னர், 'இறை கொடியன்' என்று மக்கள் கூறும் இன்னாச் சொல்லுக்கு அஞ்சி வாழ்ந்தனர். 'குடி தழீஇக் கோலோச்சும்' தனியரசு முறை தமிழகத்தின் சிறப்புரிமை என்றுகூடச் சொல்லலாம். 'மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன் தன் உயிர்,' என்று ஆளும் நீதியையே, உலகிற்கு மிகப் பழங்காலத்திலே வகுத்துக் காட்டியவர்கள் தமிழர்கள்.

பொருளாதாரத் துறையிலோ, சங்க காலம் தமிழகம் சீருற்ற பல கொள்கைகளைக் கொண்டு சிறந்து நின்றது. பழந்தமிழரின் பொருளாதாரக் கொள்கை, இன்றையவுலகும் புகழ்ந்து போற்றும் நிலையில் அமைந்திருந்தது என்றால், அதன் சீர்மையை என்னென்று புகழ்வது! 'செல்வத்துப் பயனே ஈதல்'; 'பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க'; 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புக,' என்று தமிழ் நூல்கள் கூறும் உண்மைகளைக் கவனித்தால், 'இயற்கை தரும் பொருளை யாவரும் ஒருமிக்கப் பகுத்துண்டு வாழ்தலே சீரிய நெறி,' என்னும் கருத்துடன் வாழ்ந்து, பிறர்க்கும் 'வாழ்வாங்கு வாழ' வழி காட்டியவர்கள் தமிழ் மக்கள் என்பதை அறிந்துகொள்ளலாம். "வளத்துடன் வாழும் தனி உடைமையாளர் இல்லாத நாட்டிலேதான், வறுமையால் வாடும் ஏழை மக்கள் இருக்க மாட்டார்கள்," என்னும் அடிப்படைத் தத்துவத்தைச் சங்க காலத் தமிழர்கள் வெகு தெளிவாகத் தெரிந்திருந்தார்கள். எவ்விதத் தீமைகளும் இன்றி, இன்ப நலமேமுற்றும் அனுபவிப்பதற்கு உரியதாய்ப் புண்ணியப் பயனால் சென்றடையத் தக்கதாய்த் தாங்கள் கருதியவாறு உலகத்தைக் 'கொள்வோரும் கொடுப்போரும் இல்லாத வானகம்' என்றே சுட்டுகின்றமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

அரசியல் நெறிகளிலே தமிழர்கள் தனித்திருந்தாலும், அன்பினால் உலக மக்களோடு பிணைந்தே வாழ்ந்தார்கள். அவர்கள் வேற்று நாட்டார்களையும் உடன் பிறந்தார்களென வரவேற்று, வேண்டுவன தந்து வளமுறுத்திய செய்தியை நாம் அறிகிறோம். தமிழகம் கடற்கரைப் பட்டினங்களில் சீனர், யவனர்,

உரோமர் முதலிய பிற நாட்டார் பலரும் குடியேறி வாணிபம் செய்து வளமுற வாழ்ந்ததைச் சங்க நூல்கள் தெரிவிக்கும். சமயத் துறையிலே சாதிக்கொரு நீதி கூறும் சழக்கர் தன்மை சங்க காலத் தமிழரிடம் இருந்ததில்லை. தமிழர் கடவுட்கொள்கையில் மிகச் சீரிய நிலையில் வாழ்ந்தனர் என்பதை 'யாதொரு பற்றுக்கோடும் அற்றவர் கடவுள்,' என்றறியுமாறு 'கந்தழி' என்ற பெயரால் தொல்காப்பியம் கடவுளைச் சுட்டுவதால் அறியலாம். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்,' என்றது, தமிழர் அற்றை நாளில் கண்ட சர்வசமய சமரசக் கொள்கையாகும். "மாட்சியிற் பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே," என்பது புறநானூறு. மனிதருள் ஒருவரைப் பெரியவராகக் கொண்டு அவரை அளவு கடந்து புகழ்வதும், மற்றொருவரைத் தாழ்ந்தவராகக் கொண்டு அவரை வரம்பிகந்து இகழ்வதும் பண்டைத் தமிழர் கேட்டுமறியாத புதுமை ஆகும்.

சங்க காலத்துப் பெண் மக்கள் நிலை நாம் எல்லாம் கண்டு வியக்கும் அளவில் அமைந்து சிறப்புற்று இருந்தது. பழந்தமிழ் நாட்டில் பெண் அடிமை இல்லை; வற்புறுத்தி மணஞ்செய்து கொடுக்கும் வழக்கமும் இல்லை. ஆண் மக்களை ஒப்பவே பெண் மக்களும் 'பொருந்து செல்வமும் கல்வியும் பூத்து' விளங்கினார்கள். ஔவைப் பிராட்டியாராகிய நல்லிசைப் புலமை மெல்லியலார், புவியரசரும் தலை வணங்கத்தக்க புலமை பெற்றிருந்தார். மற்றும், நச்செள்ளையார், காக்கை பாடினியார், பொன்முடியார் முதலிய பெண்டிர் சங்க காலத்திலே பெரும்புலமைச் செல்வியராய்த் திகழ்ந்து

வந்தனர். வீரத்துறையிலும் பெண்டிர் ஆடவர்க்கு இளைத்தவரல்லர். கல்வி, தறுகண், இசைமை, கொடை என்னும் இவற்றின் கூட்டுறவால் ஆடவர் வீரம் பெற்றுச் சிறந்து நின்றனர். அந்நாளைய தமிழ்ப் பெண்டிர், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நற்குணச் சிறப்பால் கற்பிலே மறம் சிறந்து வீரத்தாய்மாராய் விளங்கினர். தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை மெய்ப்பித்து மதுரையைத் தீக்கிரையாக்கிய கண்ணகி தேவியின் வீரத்திற்கு இணை யாதுளது? எனவே, அறிவுக்கு ஒப்ப ஆற்றலும், அதற்கிணையான வீரமும் சங்க காலத்தே பெண்கள் இயல்புகளாய் அமைந்திருந்தன என்பதை நாம் நன்கு அறியலாம்.

'சித்திரம் சிற்பம் முதலிய நுண்கலைத் துறைகளிலே தமிழருக்கு இணை தமிழரே,' என்று சொல்லிவிடலாம்! இசைக் கலை தமிழுக்கே உரிய பெருமை வாய்ந்ததொன்றாய்ச் சங்க நாளிலேயே இருந்து வந்தது. 'இசைத் தமிழ்' என இசையை முத்தமிழ்ப் பாகுபாட்டில் ஒன்றாக்கி வளர்த்து வந்ததும், இசைத் தமிழ் நூல்கள் பல பண்டு தொட்டே இருந்து வந்ததாகக் கேட்டறிவதும், ஏற்றப் பாட்டு, உழவுப் பாட்டு, நடவுப் பாட்டு என்பவற்றால் இசையும் தொழிலும் இணைந்து பெருகி வந்ததும் ஆகிய செய்திகள் தமிழிசையின் தனிச் சிறப்புக்கும் பழம் பெருமைக்கும் போதிய ஆதாரங்களாகும்.

தமிழ் நாட்டு வணிகப் பெருமக்கள் சங்க நாட்களிலே, வாய்மையையே குறிக்கோளாகக் கொண்டு பொருளீட்டி வாணிபம் புரிந்த செய்தியைப் பின் வரும் பழஞ்செய்யுட்பகுதி விளக்கிக் காட்டுகிறது:

'நடுவு நின்ற நன்னெஞ்சினோர்,
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடி,
கொள்வதூஉம் மிகைகொள்ளாது,
கொடுப்பதூஉம் குறைகொடாது,
பல்பண்டம் பகர்ந்து வீசும்'

வணிகர் வாழ்ந்தனர். எனவே, வணிகரது வாய்மை அறிவுள்ளம் முதலிய அரும்பெருங்குணங்களை நாம் நன்கு அறியலாம். கடல் வாணிபத்தில் சங்க காலத் தமிழகம் பேர் பெற்றது. தமிழரின் மரக்கலங்கள், நம் நாட்டுப் பொருள்களைப் பிறநாடுகளுக்கு ஏற்றிச் சென்றும்; அங்கிருந்து தேவையான பொருள்களை நம் நாட்டிற்கு இறக்குமதி செய்தும் வந்தன. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு,' என்பது தமிழர் பழமொழி.

'பழி எனின் உலகொடு வரினும் கொள்ளாது விலகி நின்று, 'புகழ் எனின் உயிரையும் கொடுக்கும்' பண்பாடு உடையவராய் அந்நாளைய தமிழர் வாழ்ந்து வந்தனர். அற்றை நாளிலே நம் தமிழ் மொழி அரியாசனத்தமர்ந்து, உலகையே ஆண்டு வந்தது. சரித்திரம் காணாத மிகப்பழங்கால முதலே ஆட்சியனுபவத்திலே ஊறித் திளைத்தவராய்ப் பழந்தமிழர் நிமிர்ந்து நின்றனர். 'உலகின் புறக் கண்டு தான் இன்புற்று நிற்பதே' அன்றைய தமிழன் குறிக்கோள்.

'தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.'

என்ற துணிவுடன் உலையாது உழைத்து, ஊழையும் உப்பக்கம் காணும் துணிவு பழந்தமிழரிடம் குடிகொண்டிருந்தது.

இவ்வாறெல்லாம், சங்க காலத் தமிழ் அகம் ஓர் இலட்சியமாய்த் திகழ்ந்தது. கல்வி, அரசியல், வாணிபம், பொருளாதாரம், தெய்வ வழிபாடு முதலிய பல வேறு துறைகளிலும், சங்க காலத் தமிழகம் மற்றைய நாடுகளுக்கு எடுத்துக்காட்டாய் நின்று நிலவியது. இப்படி எல்லாத் துறைகளிலும் சிறந்து நின்று முன்னேற்றம் அடையப் போதிய அடிப் படைக் காரணமாய் அந்நாளில் என்ன இருந்தது? அஃது ஒரே காரணம்: தனித் தமிழரசு முழு விடுதலையுடன் கூடியிருந்து ஆட்சி நடத்தியதே என்னலாம். 'அரசியல் சுதந்தரம்' என்பது மட்டு மன்றி, மக்கள் அறிவிலே விடுதலை வேட்கையும் இருந்தது. அவ்வறிவு விளக்கத்திற்குத் தாய் மொழிக் கல்வி நல்ல முறையிலே சிறந்து நின்று உதவி புரிந்தது. எனவே, இன்றைய தமிழர்கள் தமிழைப் புறக்கணியாது கற்றுச் சிறந்தால், ஒவ் வொருவரும் கடவுட் பேறுடையராய் வானுலக இன்பத்தை இவ்வுலகிலே நுகர்ந்து, வருங்காலத் தமிழகத்தை மறுபடியும் இலட்சியவுலகமாக மாற்றி அமைக்க முடியும்.

சாதாரணமாக நாம் நினைக்கிற நினைவுகளை 'எண்பது கோடி' என்று முடிவு கட்டினார் ஒரு புலவர். 'க்ஷண சித்தம்' என்ற வழக்கு வடமொழியிலும் உண்டு. இவை கணந்தோறும் மாறும் வெவ்வேறான பல நினைவுகளை உடையவர்கள் நாம் என்பதைக் காட்டி நிற்கும்.

ஆகவே, நாம் நினைக்கிற எல்லா நினைவுகளும் நன்மை தரக் கூடியவைகளாகவே இருக்கும்படி நினைக்கிறோம். தீமை பயக்கும் நினைவுகளை நாம் விரும்புவதில்லை. மனித இயல்பே அப்படிப்பட்டதுதான்.

நாம் நல்ல நினைவுகளாகவே நினைப்பது மட்டுமன்றி, அவை அப்படியே வெகு விரைவில் நடந்தேறிவிட வேண்டும் என்றும் எதிர் பார்க்கிறோம். எல்லாம் அப்படியே நடக்கின்றனவா? இல்லை. சில, நினைப்பவை வேறாயிருக்க, நடப்பவை வேறாய் முடிகின்றன; சில, எதிர் பார்த்து நினையா முன்பே நடந்துவிடுகின்றன; வேறு சில, நினைத்தபடியே முடிந்து விடுகின்றன. 'இப்படியெல்லாம், நினைத்தபடி அல்லாமல், செயல் மாறுபடுவானேன்?' என்றால், இதற்குக் காரணம், 'ஈசன் செயல்' என்றே ஒரு புலவர் தெரிவிக்கிறார். இஃது அவர் கூறிய பாட்டு:

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்;
அன்றி யதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல்!"

நாலடியாரின் ஆசிரியர் இதே கேள்வியைக் கேட்டு அதற்கு வேறு வகையாக விடை கூற

முயன்றிருக்கிறார். அவரும் 'கடவுட்கொள்கை'யை நம்புகிறவரே என்றாலும், இதற்கு 'ஈசன் செயலை' அவர் காரணமாகக்காட்ட விரும்பவில்லை: 'விளாம் பழத்தையும், களங்கனியையும் கவனியுங்கள்: ஒன்று, வடிவிலே உருண்டை வடிவுடையதாகவும், பின்னதைக் கருமை நிறமுடையதாகவும் செய்தவர் யார்? ஒருவருமிலர். வித்திலுள்ள ஆற்றலும், விளையும் பூமியிலுள்ள நலமும் ஒன்றுடன் ஒன்று கூடிச் சேர்ந்து வளம் பெறுங்காலையில், அவையவை அப்படி அப்படியமையும் வடிவத்தையும் நிறத்தையும் பெற்றுவிடுகின்றன; இப்படிப் பெறுவது அவ்வவற்றிற்குள்ள ஆற்றலைப் பொறுத்தது,' என்பதனை உவமானமாகக் காட்டி, மனிதர் நினைவுகள், அவற்றை அடையச் செய்யும் முயற்சி, அதனால் விளையும் பலன் என்னும் இவற்றின் இயைபை வெகு தெளிவாக ஒரு செய்யுளிலே விளக்கித் தக்க காரணமும் காட்டிச் செல்கின்றார். எல்லாரும் வளமுற்று வாழவே நினைக்கின்றனர்; முயல்கின்றனர். ஆனால், போகம் அல்லது பலன், அவரவரது ஆற்றலுக்குத் தக்கபடி அமைகின்றது. இங்குக் குறித்த ஆற்றல் என்பது, மேற்கொண்ட வினையிலே உள்ள திட்பம், அதனை நிறைவேற்றும் அறிவின் நுட்பம், கடைசி வரை கொண்டு செலுத்தும் மனத்தினது ஒட்பம் ஆகிய இவைகளது கூட்டுறவினாலே கருக்கொள்ளும் ஒருவகைப் பெருந்திறமை அல்லது மனவலிமை ஆகும். இந்தத் திறமையைப் பொறுத்தே ஒருவர் எண்ணிய கருமம் திண்ணிதாக முடியும் என்று அச்செய்யுள் தெரிவிக்கிறது:

"வளம்பெற வேண்டாதார் யார்? யாரு மில்லை;
அளந்தன போகம் அவரவர் ஆற்றால்;

விளங்காய் திரட்டினார் இல்லை ; களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்.''

என்பது அவ்வரிய பெரிய கருத்து அடங்கிய செய்யுள். 'அவரவர் முயற்சியால் விளையும் நற்பயன் தீப்பயன்களுக்குக் காரணம் ஊழ்வினையோ அன்றி ஈசன் செயலோ அன்று; அவ்வரவர் செய்யும் முயற்சித் திறனின் ஆற்றலே தலையாய காரணம்,' என்பதை மிகத் தெளிவாய் வற்புறுத்தியிருத்தலை இதில் நாம் காணலாம்.

" எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்ற பொதுமறைச் செய்யுளிலும் இக்கருத்தின் ஒட்பம் மிளிரக் காணலாம்.

சில செயல்கள் நாம் நினைத்தபடி நடப்பதில்லை என்பது கொண்டு, 'நடக்கிற செயல்களுக்கும் நாம் நினைக்கிற நினைவுகளுக்கும் ஒரு தொடர்புமில்லை,' என்று நாம் எல்லாருமே பல சமயங்களில் முடிவு கட்டிவிடுகிறோம். இஃது உண்மைதானா?

நாம் நினைக்கிறபடி காரியங்கள் யாவும் நடப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால், இஃது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு நூறு மடங்கு உண்மையாகும் 'நாம் நினைக்கிற நினைவே காரிய நிகழ்ச்சிகளைத் தூண்டிச் சித்தி பெறும்படி செய்யும்,' என்பதும்.

இனி நாம் கொள்ளும் முடிவு, 'நாம் நினைக்கிறபடி சில செயல்கள் நடப்பதில்லை,' என்ற உண்மை, 'எந்த நிகழ்ச்சிக்கும் நினைவு காரணமன்று,' என்ற முடிவைத் தாராது என்பதே ஆகும். அது மட்டும் அன்றி, 'நம் எண்ணமே முதன்மையானது. அவ்வெண்ணமே நம் செயல்

களைத் தோற்றுவிக்கின்றது. நாம் கருதியதைக் கருதியபடியே அடைய முடியும். எண்ணங்கள் இன்றி ஒரு செயலும் நடவாது,' என்பதும் காணக் கிடக்கின்றது.

'நாம் நினைத்ததை நினைத்தபடி அடையலாம் என்றால், உலகினர் ஏழை பணக்காரர், நல்லவர், கெட்டவர், உயர்ந்தார், தாழ்ந்தார் என ஏன் வேறு பட்டிருக்கின்றனர்? எல்லாருமே பணக்காரராயும், நல்லவராயும், உயர்ந்தவராயுமன்றோ இருக்க நினைப்பர், விரும்புவர்? அவ்வெண்ணப்படி அவர்கள் இல்லாமற் போவானேன்?' எனச் சிலர் வினவலாம். இவை மிகவும் நல்ல கேள்விகளே.

நினைவுதான் நம் வாழ்விற்கு மூல காரணம். ஆனால், நாம் நினைக்கிறபடியே எல்லாச் செயல்களும் நடைபெறாத போதுதான், 'நீருக்குள் நெருப்பிருக்கும்,' என்றால் எப்படியோ, அப்படியே அது ஒன்றுக்கொன்று தொடர்பற்ற முரண்பட்ட கொள்கையாய் நமக்குத் தோன்றுகிறது. இதை இன்னும் சிறிது நோக்குவோம்:

சில செயல் நிகழ்ச்சிகள் மிக விரைவிலே முடிவதாகத்தான் இருக்கும். ஆனால், அச்செயல் ஒவ்வொன்றிலும் நிகழ்ச்சி வேறுபாடுகள் பல உண்டு. நினைத்தவுடனே நாம் எல்லா எழுத்துக்களையும் உச்சரித்துவிடுகிறோம். அது முடியவும் முடியும்; சிரமமில்லை. நினைவும் செயலும் அதன் திறத்தில் அடுத்த விநாடிக்குள்ளாகவே அடுத்தடுத்து உண்டாகிவிடுகின்றன. எனினும், நாம் அவ்வாறு உச்சரிப்பதற்குள், அது பல நிகழ்ச்சி வேறுபாடுகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கின்றது என்பதை யாரும் மறுக்கவியலாது.

ஓர் எழுத்தை உச்சரிக்க முதலில் நிறைந்த உயிர் முயற்சி வேண்டும். அது பின்பு 'உதானன் என்ற காற்றினை எழுப்பும். பின்பு அக்காற்று மார்பு, கண்டம், தலை முதலிய இடங்களுள் ஏதேனும் ஒன்றைச் சாரும். அதன் பின்பு இதழ், நா, பல், மேல்வாய் ஆகியவற்றின் தொழிலால் வெவ்வேறு எழுத்தொலியாகப் பிறக்கும். இஃது ஒலி நுட்ப நூலுடையார் கண்டறிந்த உண்மை. ஆனால், ஒன்றன்பின் ஒன்று மிக விரைவிலே அடுத்தடுத்து நிகழ்ந்துவிடும். இந்த நிகழ்ச்சி வேறுபாடுகளை எல்லாம் நாம் உச்சரிக்கும்போது சாதாரணமாக அறிந்துகொள்வதே இல்லை. ஆனாலும், இப்போது அவைகளை எல்லாம் நிகழ்வதே இல்லை என்று நாம் சொல்லிவிட முடியுமா? முடியாது. சிறிது கருத்தூன்றிப் பார்த்தால், அவை இன்றிக் காரிய நிகழ்ச்சி தோன்றாதென்பது தெரிய வரும். இப்படியேதான் நினைவு செயலாகத் தோற்றுகிற விதத்திலும் பல நிகழ்ச்சி வேறுபாடுகள் அடங்கியிருக்கின்றன.

நாம் ஒரு பொருளைக் கண்டவுடன் நமக்கு அது பற்றிய நினைவுண்டாவது மன இயல்பு. பின்பு அதில் நமக்கு விருப்பம் இருந்தால், 'வேண்டும்' என்று அதை அடைவதிலே ஆசை உண்டாகும். அவ்வாசை முற்றிய நிலை, பின் 'அதை அடைந்தே தீர வேண்டும்!' என்ற மனத்துணிவை உறுதிப்படுத்தும். அத்துணிவே அதை அடைவதற்குரிய கருவிகளைக் கூட்டுவித்து, அடைந்தே தீரும்படி செயலில் வெற்றியையும் உண்டாக்கி வைக்கும். மிக விரைந்த நிலையிலே இவை யாவும் ஏற்பட்டுவிடுகிறபடியாலேதான் நினைவும் செயலும் அடுத்தபடியி

லேயே தோன்றிவிடுவதாக நாம் நினைக்க நேரிடுகிறது.

இந்த 'விருப்பம் முற்றிய நிலை'யாகிய மனத் துணிவை எல்லாரும் அடைய முடியாதா? முடியும். இது யாவரும் அடைவதற்கு உரியதே. அடைந்தும் தீரவேண்டும். இவ்விடத்தில் பேராசையைத் துணிவு என்பதிலிருந்து பிரித்தறிய வேண்டுவது நமது கடமை. ஒருவன் தன் நிலைமைக்குத் தகாத எண்ணங்களை மனத்தில் கொள்வது பேராசை. மனத் துணிவு அப்படிப்பட்டதன்று. கூடுமான வரை தன்னியல்பு, ஆற்றல் இவற்றோடொட்டிய மனவலியையே துணிவு என்கிறோம். இதற்கோர் உதாரணத்தைக் கவனிப்போம் :

பத்தடி தாண்டுபவனுக்கு வெள்ளிக் கோப்பை ஒன்று பரிசு கிடைக்கும் என்றவுடன் ஓரடி தாண்டவும் பழக்கமும் வலி நிலையும் இல்லாத ஒருவன், கோப்பையின் மீதுள்ள பேராசையினால், 'தாண்டுவோம் : பரிசடைந்தே தீருவோம்,' என்று கருதுகிறான். இது காரியசித்திக்கான மனத் துணிவாகுமா? ஆகாது. ஏன்?

நாலடி தாண்டிவிடும் பழக்கமும் திறமும் படைத்த வேறொருவன் அவ்வாறு நம்புகிற நம்பிக்கைக்கும், முன் சொன்ன பேராசைக்காரன் நினைவிற்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. அனுபவத்துடன், தாண்டும் திறமையும் படைத்த அவன் நினைத்த நினைவுதான் மனத் துணிவு அல்லது ஒரு நிலைப்பட்ட நினைவு. மற்றவனுடையதோ, பலன் கருதித் தூண்டப்பட்ட பேராசையேயாகும். இப்படிப்பட்ட பேராசையினால் காரியம் முடியாதது மட்டுமன்றி, பெருங்கேடும் விளையும். பேராசை

பேரிழவின் அடிப்படை.

இப்படித் தன் நிலைமைக்கும் அனுபவத்திற்கும் ஒட்டிய செயல்களை நினைத்து, அவற்றை அடைய முயற்சி செய்யும் ஒவ்வொருவனும், தான் நினைத்தவற்றை நினைத்தபடியே அடைவன் என்பதிற் சிறிதும் ஐயமின்று. இது வாழ்வில் வளர்ந்த உண்மை. இதைத் தெரிவிக்கத்தான் அனுபவ ஞானியாரான திருவள்ளுவர், தமது தெய்வத் திருமறையில்,

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்."

என்று சொல்லிச் சென்றார். இக்குறளில் 'திண்ணியர்' என்பதன் பொருள் நம்மால் நன்கு கவனித்தற்கு உரியது: திண்ணியராவார், 'காரியத்தை முடித்தே தீருவோம்!' என்ற துணிவுடன் கூடிய ஒருநிலைப்பட்ட மனமுடையவர்: அல்லது அசையாவுள்ளம் என்ற மனவலிமை படைத்தவர்.

இப்படிப்பட்ட ஒருநிலை மனத்தை நைடத நூலாசிரியராகிய அதிவீரராம பாண்டியர், 'நிறை' என்னும் சொல்லால் குறிப்பிட்டு, அஃதுடையாரை, 'நிறையுடையோர்' என்றும்குறிப்பர். மற்றவற்றை மறந்து, தாம் நினைத்த ஒன்றிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து கருதியது முடித்துக்கொள்ளும் பேரியல்பிலே மனத்தை நிலை நிறுத்தும் வலி நிலையுடையாரையே அவர் 'நிறையுடையோர்' என்று குறிப்பிட்டுள்ளார் என்பதை நாம் நன்குணரலாம். அப்படிப்பட்ட மனவலியுடையவர்களைச்செயற்கரிய செய்யும் பெரியாரெனப் பேசும் பாண்டியர், 'அவர்கள், பிறர் மனத்தால் நினைத்தற்குரிய பொருள்களையும் பெற்றுவிடக்கூடிய பேராற்றல் வாய்ந்தவர்கள்: உணர்ச்சிக்கும் நினைவிற்கும் அப்பாற்பட்டு

எட்டாது நிற்கும் கடவுளையும் நேரே கண்டுகொள் ளும் தவச் செல்வர்கள்,' என்றெல்லாம் உயர்த்திக் கூறுகின்ருர்.

"மனத்தாலும் நினைவரிய பொருளினையும்
நிறையுடையோர் அடைகு வாரால்."

என்பது இது பற்றி அவர் தெரிவிக்க விரும்பிய கருத்து. 'மனம் போல வாழ்வு,' என்று வழங்குகிற சாமானிய வழக்கும் இப்பெரிய மனேதத்துவ உண்மையைத்தான் வற்புறுத்துகின்றது.

திருநாவுக்கரசர் ஒரு பெரிய சைவசித்தாந்த ஞானியார். அவர் உலக வாழ்க்கையைக் கடலாகத் தம் அறிவால் கண்டுணர்த்துகிருர். வாழ்வும் தாழ் வும் மாறி மாறி வரும் வாழ்க்கையை, அலை மாறிமாறி வரும் கடலுக்கு ஒப்பிட்டது மிகவும் பொருந்தும். கடலுக்கும் வாழ்க்கைக்கும் பொருத்தம் இந்த ஒன் றில் மட்டுமன்று; பல வகைகளாலும் பொருத்தம் உண்டு. "வாழ்க்கைக் கடலிலே மனமாகிய தோணி செல்கிறது. அதிலே உள்ள சரக்கு, அளவில் மிகு மாஞல், சத்தி வாய்ந்த சினம் அதனை உள்ளே அமிழ்த்திவிடும். தோணியை நல்வழிச் செலுத்தும் துடுப்பு 'மதி' ஆகும். இப்படிப் பிரயாணம் செய்யும் கடலிலே இடையிடையே 'ஆசை' அல்லது 'காமம்' என்னும் பாறைகள் எதிர்ப்படும். அவற்றில் தோணி மோதிச் சில சமயங்களில் சிதறித் தவிடு பொடி யாவதுமுண்டு. அப்படி எனது வாழ்க்கையும் சிதறும்படி நேரிட்டால், அச்சமயத்தில் எனக்கு உன்னை நினைக்கும் உணர்வு உண்டாவது இயலாது. ஆகையால், எனக்கு மதன் எனும் பாறை தாக்கி வருத்தம் தரும்போது, நீயே வந்து உன் நினைவைக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும்!" என்று நாவுக்

கரசர் குறிப்பிட்டிருக்கின்றார்.

கடலைக் கடந்து கரையேற விரும்பும் ஒருவர், அவ்விருப்பத்தின்படி இடையூறின்றி நிறைவேற வேண்டுமானால், அவரால் முதலிலே ஒருதலையாகப் பெரிதும் வேண்டப்படுவது எது? அது தோணி. அது போலப் பிறவிக் கடலின் கரை காணும் தோணியாக அவ்வளவு நிச்சய நிலையிலே நாவுக்கரசரால் அமைத்துக்கொள்ளப்படும் பொருள் எது? அதுவே மனம்.

“மனம்எனும் தோணி பற்றி
மதிஎனும் கோலை யூன்றிச்
சினம்எனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும் போது”

என்பது அவர் இயற்றிய ஒற்றியூர்த் தேவாரப் பகுதி. ‘வாழ்க்கையிலே குழறலும் கொந்தளிப்பும் நிறைந்து நின்றாலும், திடமாக நினைத்து ஒன்றை அடைய முயன்றால், மனம் போலப் பெற்று வாழ முடியும்,’ என்னும் உண்மையை இத்தேவாரப்பகுதி நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகிறதன்றோ?

இது பற்றிப் புதுமைப் பெருங்கவிஞர் பாரதியார் கொண்ட கருத்தைக் கவனிப்போம்;

தமக்கு முன் தோன்றிய காளி தேவியை நோக்கிச் சில கேள்விகளும் வரங்களும் கேட்பதாக ஒரு கற்பனைப் பாட்டினை அவர் பாடி வைத்திருக்கின்றார். அவர் கேட்ட கேள்வியுள் ஒன்றைப் பின் வரும் செய்யுளடி நமக்குத் தெரிவிக்கிறது:

“ஞாலத்தில் விரும்பியது
நண்ணுமோ?”

என்பது அவர் கேள்வி. இவ்வாறு அவர் கேட்கும் போது, “காளியே, நான் விரும்பியவை எல்லாம்

நடக்க வேண்டும். நடந்தால் நல்லது. நினைப்பது நடந்தேறி விடுமானால், உலகில் எவருக்கும் பிறகு துன்பமில்லை. இதுவே சுவர்க்கம். நினைப்பது நடவாமையினாலேதான் பல தொல்லைகள் நேரிடுகின்றன. அவரவர் நினைப்பது நடந்துவிட்டால், பகை, வருத்தம், பொறாமை ஆகிய யாவும் உலகை விட்டே நீங்கி ஓடிப்போய்விடும். எனவே, நினைத்தது நினைத்தபடி 'நடக்க எனக்கு அருள்,'' என்று அவர் கேட்ட மனக்குறிப்பு நமக்குத் தெரிகிறது. கேள்வி மிக நல்ல கேள்விதான். இது பாரதியாரது ஆசை மட்டுமன்று. உலக மக்களது மனத்தில் உள்ள ஆசையும் இதுவே. தாம் நினைப்பவெல்லாம் நிறைவேறி வளமுற்றிருக்க வேண்டாதவர் யார்?

இதற்குக் காளி சொன்ன பதில் யாது? அதிலேதான் பல நுட்பங்கள் அடங்கியிருக்கின்றன. 'சாதாரண மனோதத்துவ உண்மையாகிய இதை மனிதன் அநுபவத்தில் அறிந்துகொள்ளமுடியாமல் அல்லற்படுகிறானே!' என்று வருந்திச் சொல்லியது போலக் காளிதேவியின் பதில் அமைந்திருக்கிறது. அப்பதிலைக் கவிச்சக்கரவர்த்தியாராகிய பாரதியார்,

" நாலிலே ஒன்றிரண்டு
பலித்திடலாம் என்றாள்."

என்று நமக்குத் தெரிவிக்கிறார். " ஒரே சமயத்தில் நான்கு பொருள்களைப்பற்றி மனிதன் உறுதியானவுள்ளத்துடன் நினைக்க இயலாது. ஆகையால், அந்த நான்கு நினைவுகளுள் இரண்டொன்றிலே தான், உறுதியானதும் அதையொட்டி வாழ்விற்பழக்கமானதுமான வலிமை அல்லது உள்ளத்தின் நிறை சிறந்து நிற்கும். அப்படிப்பட்ட நினைவுகளே செயலிலே நிறைவேறும்: ஆகவே, நாலு சிந்தனை நீ

கொள்ளாதே. ஒன்றையே நினை. நடக்கும் என்று உறுதியாக நம்பு. விடா முயற்சியுடனும் மனவூக்கத்துடனும் அதை அடைய முயற்சி செய். அது உறுதியாகக் கை கூடும்," என்னும் உண்மையைத்தான் அவருக்குக் காளி தெரிவித்தாள்.

'ஞாலத்தில் விரும்பியது நண்ணுமா?' என்று கேட்ட கேள்விக்கு, 'நாலிலே ஒன்றிரண்டு பலித்திடும்,' என்னும் விடை சரியான விடையாக நமக்குத் தோன்றவில்லை. 'விரும்பியது பலிக்கும் அல்லதுபலியாதுஎன்பதைச்சொல்லவேண்டாவா?' என்று நினைக்கிறோம். 'விருப்பம் நாலைந்திலே இருந்தால், யாவும் நினைத்தபடியே பலிப்பதில்லை; இரண்டொன்றுதான் பலிக்கும்,' என்று சொல்லி, 'செயலுக்கு நினைவுதான் காரணம்,' என்பதைக் குறிப்பாலே உணர்த்தியிருக்கிறாள். ஆனால், முன் இதைச் சொன்ன காளிதேவி, 'நினைத்தது நினைத்தபடியே நிச்சயமாய் நடைபெற வேண்டும்,' என்று கருதினால், அதற்கும் அடுத்து வழி சொல்லுகிறாள். ஐந்தாறு நினைவுகளை மனத்தில் வைத்து எல்லாம் முடிய வேண்டும் என்று விரும்பி முயன்று பின்பு சில தடைகள் நேரிட்டது கண்டு, 'முடியுமோ, முடியாதோ!' என்ற துணிவில்லா நெஞ்சுடன் சிந்தனையை ஏலத்தில் விடுகிற நிலையில் நாம் இருந்தால் நமக்கு ஒன்றும் நினைத்தபடி நிறைவேறாது. ஒன்றையே நினைத்து, 'வெற்றி பெற்றே தீருவோம்!' என்னும் மனவுறுதியுடன் இடையூறுகளைப்பொருட்படுத்தாமல் முயன்றால், நாம் நினைத்தது நிச்சயம் கை கூடும் என்னும் உண்மையையும்,

> 'ஏலத்தில் விடுவதுண்டோ
> எண்ணத்தை?' என்றேன்;

'எண்ணினால் எண்ணியது
நண்ணுங்காண்,' என்றாள்."

இதில் பிறிதொரு நயமும் அமைந்திருக்கிறது: 'எண்ணினால், எண்ணியது நண்ணுமோ?' என்று கேட்ட அவருக்கு, 'நண்ணிடும்கேள்,' என்றல்லவா காளி விடை கொடுக்க வேண்டும்? அப்படிக்கன்றி, 'நண்ணிடும் காண்' என்று கூறும் அவளது கருத்து, 'இது உலக அனுபவத்தில் இயற்கை நிகழ்ச்சியின் மூலம், யாரும் கேட்டுத் தெரிவ தன்றியே கண்டுணர வேண்டிய உண்மையல்லவா? நீ அறியாமற்போனதென்ன?' என்று அவரை எள்ளி நகையாடிக் கூறுவாள் போலச் சொல்லி, 'இது நடைமுறையுலகிலே காணப்படும் சாதாரண அனுபவ உண்மை,' என்பதை எவருக்கும் நினை வூட்டியவாறாயிற்று.

எனவே, நினைவு செயலுக்குக் காரணம். முழு உறுதியுடன் முயன்றால், ஆகாத காரியம் ஒன்று மில்லை. அம்முயற்சி பேராசையுடன் கூடியுள்ளதா யிராமல், அனுபவபூர்வமான மனவலிமையுடன் வலிமை வாய்ந்ததாயிருக்க வேண்டும். எனவே, உயர்ந்த எண்ணங்களையே நாம் எப்போதும் நினைப் பது தவறாகாது. உண்மையான பாலைக் குடியாவிடி னும், கற்பனையான மனப்பாலிலும் கலத்தண் ணீரை உழக்குப் பாலில் கலந்து பருகுவதாக நாம் ஏன் நினைக்க வேண்டும்? அப்படி நினைப்பது சிற்றறிவு. வற்றக் காய்ச்சி உண்பதாக எண்ணு வதே மிக நல்லது. நினைவே மனிதனை உருவாக்கு கிறது. எண்ணங்களின்றி மனிதனால் வாழ்க்கை யில் உயர்நிலை அடைதல் இயலாது. அந்த எண் ணங்கள் உயர்ந்த இலட்சியங்களை உடையனவாய்

இருத்தல் வேண்டும். 'அது கைகூட வேண்டாவா?' என்பது வேறு செய்தி. நினைத்த அளவிற்கு அதில் பெருமையும் பலனும் உண்டு. குறுமுயலை ஒருவன் குறி வைத்து எய்துவிடுகிறான். யானையைக் குறி வைத்து எய்தவன் தவறுகிறான். அதனால் என்ன? யானையை எய்ய நினைத்தவன் காரிய வெற்றி பெறாவிட்டாலும் எப்படியும் உயர்ந்தவனே ஆவன். நாமும் உயர்ந்த நல்ல குறிக்கோளை வைத்துக்கொண்டு வாழ்க்கையில் அதை அடைய முயலுவோம். பலன் அப்போது கிடைக்காமல் நாம் தோல்வியுற்றாலும், தோல்வியுறலாம். உண்மையிலேயே அது தோல்வி அன்று. பின்னிட்டுத் தோன்றும் வெற்றிக்கு அறிகுறியே அது.

'கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.'

என்றார் வள்ளுவர். சினத்துடன் முட்டி மோதி எதிர்த்துத் தாக்கவரும் தகர், ஒரு கால் பின்னிட்டுச் சென்றால், அது மறுமுறை வெற்றி காணும் நிச்சயமான அறிகுறி என்பதை நாம் காண்கின்றோம். அப்படிப்பட்டதுதான் வாழ்க்கைப் போராட்டமும். இக்கருத்துப் பற்றியே,

'உள்ளுவ எல்லாம் உயர்வுள்ளல் : மற்றவை
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.'

என்று குறளாசிரியர் உபதேசிக்கிறார். இவ்வுபதேச உண்மை நம் வாழ்க்கைக்கு நின்று வழிகாட்டுவதாக!

முன்னோர் அறிவால் ஆராய்ந்து கண்ட முடிவுகளையும், உள்ளத்திற்கொண்ட தூய எண்ணங்களையும், அவற்றால் அவர்கள் வாழ்ந்து சிறப்புற்ற வழிகளையும் பின்னுள்ளார் அறிந்துய்யுமாறு எழுதி வைத்த நூல்களின் தொகுதியே இலக்கியச் செல்வம் ஆகும். தமிழலக்கியச் செல்வம் சங்க காலத்தில் 'அகம், புறம்' என்ற இரு பெருந்துறைகளில் தழைத்துப் பழந்தமிழர் வாழ்வு செழிக்கப் பெருந்துணை புரிந்தது. அதன் பின்னர் அவ்விலக்கியச் செல்வம் காப்பியங்களின் சேர்க்கையால் கலை மணம் கமழ்ந்தது. அதன் பின்பு மக்கள் இறை வழிபாட்டில் பற்றுக்கொண்ட தன்மையால் இலக்கியச் செல்வமும் தோத்திரச் செல்வமாய் உருக்கொண்டது. அதனைத் தொடர்ந்து புராணங்களும் இதிகாசங்களும் அச்செல்வத்தைப் பெருக்கி நின்றன. இப் புராண காலத்திற்குப் பின்பு மக்கள் மீண்டும் பழந் தமிழ் இலக்கிய வகையில் பற்றுக்கொள்ளலானார்கள். எனவே, புலவர்கள் புராண முறையைத் தழுவியும், அகம் புறம் என்ற முறைகளைப் பேணியும், காப்பிய அமைதி கண்டும், சிறு சிறு நூல்களை இயற்றலானார்கள். அவைகளே பிற்காலத்தமிழிலக்கியங்களாம். அவற்றைச் சிற்றிலக்கியம் என்றும் சில்லறைப் பிரபந்தங்கள் என்றும் வழங்கினர். அவை தொண்ணூற்றாறு வகை எனக் கூறப்படலாயின; கோவை, பரணி, உலா, மடல், தூது, கலம்பகம், அந்தாதி, மாலை, ஊசல், பிள்ளைத் தமிழ், குறம் முதலாகப் பல பெயர்களுடன் வழங்கலாயின. இவ்வகையில் இலக்கியச் செல்வத்தைப் பெருக்கின புலவர் பலர்.

இவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்புடையது. இவற்றை ஆக்கியருளிய புலவர்களுள் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்கினர். பரணி பாடுவதில் சயங் கொண்டாரும்; கோவை, உலா, அந்தாதி பாடுவதில் ஒட்டக்கூத்தரும்; கலம்பகத்திற்கு இரட்டையரும் புகழ் பெற்று விளங்கினர்.

இவ்வாறு சிற்றிலக்கியம் புனைவதில் பெரும் புகழ் பெற்ற புலவர் மணிகளுள் அழகிய மணவாளதாசர் என்று வழங்கப் பெற்ற திவ்விய கவி பிள்ளைப்பெருமா ளையங்காரும் ஒருவர். அவர் திருமாலைப் பொருளாகக் கொண்டு பாடிய நூல்கள் எட்டு. அவை, திருவரங்கத் தந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவேங்கடத்தந் தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி, திருவரங்கக் கலம்பகம், ஸ்ரீ ரங்கநாயகரூசல், திருவேங்கடமாலை என்பனவாம். இந்த எட்டு நூல் களும் 'அஷ்டப் பிரபந்தம்' என்னும் பெயரால் தமிழிலே வழங்கும் தோத்திர நூல்களாகும். இவற்றில் உள்ள பாக்கள், சொல் நோக்கும் பொருள் நோக் கும் தொடை நோக்கும் நடை நோக்கும் நனியினிது வாய்க்கப் பெற்று, கற்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இன்சுவை உடையனவாய்த் திகழ் கின்றன. மேலும், 'வெண்பாப் பாடுதலில் வல்ல புகழேந்தியும், விருத்தம் பாட வல்ல கம்பரும், அந்தாதிக்கு எடுத்த ஒட்டக்கூத்தரும், கலம்பகத்திற் கான இரட்டையரும், சந்தம்பாடுதலில் வல்லவரான படிக்காசுப் புலவரும் முதலான பெரும்புலவர் யாவருமே ஒன்று சேர்ந்து இயற்றியது, ஒத்த சிறப் பினை உடையது, இவ்வஷ்டப்பிரபந்தம்,' என்று இன்றளவுள்ள அறிஞர் பலராலும் இந்நூல்

பாராட்டப் பெறுகிறது. 'அஷ்டப்பிரபந்தம் கற்றவர் அரை வித்துவான்,' என்பது நம் நாட்டு வழக்கு. அதாவது, தமிழிலே உள்ள பெரும்பான்மையான நூல்களைப் படித்துப் பாதிப் புலமை அடைவதை விட, இந்த ஒரு நூலிலேயே பல நூற்கருத்துக்கள் பயின்றிருக்கும் காரணம் கொண்டு, இதைப் படித்தாலும் அத்தகைய புலமையை அடைந்துவிடலாம் என்பது அதன் கருத்து. இப்பிரபந்தங்களில், நம்மாழ்வார் முதலான பன்னிரு ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்த சாரார்த்தங்களும், நாதமுனிகள் முதலிய வைணவப் பெரியார்களின் அருளிச் செயல் விசேஷார்த்தங்களும் ஆங்காங்கே பொதிந்திருக்கின்றன.

மணவாளதாசர், வீரவைணவகுலதிலகர். ஆகையால், மறந்தும் புறந்தொழாத இயல்பினராய், திருமாலே உலகிற்கு முதல்வன் என்பதைத் தமது மெய்யுற்ற ஞானத்தால் தேர்ந்து, அவனுக்கு ஆளாவதே தமது கடமை என்று பத்தி செய்து, 'உலகமுண்ட கந்தரத்தனை அல்லால் எண்ணேன் வேறு ஒரு தெய்வத்தையே!' என்று கூறுமளவிற்கு 'வைராக்கியநிலையை' மேற்கொண்டவர். இவ்விடத்து, சமய நூல்களிலே சிறப்புடையதாகச் சுட்டப்படும் வைராக்கிய மனநிலையினைப் பற்றிச் சற்று விரிவாகக் கூறுவதும் பொருந்தும் :

கடவுளை அடைந்து முத்தி பெறுதற்கு உரிய நெறியிலே உள்ள மூன்று படிகளாக, ஞானம், பத்தி, **வைராக்கியம்** என்பவை பேசப்படுகின்றன. ஞானம் என்பது அறிவு. முதலில், 'நாம் அடிமை; அவன் ஆண்டவன்,' என்னும் கடவுளறிவு பெறவேண்டும்; இதுவே '**மெய்ஞ்ஞானம்**' எனப்படும். பின்பு இவ்வறி

வோடு நின்றுவிடாமல், அப்படிப்பட்ட ஆண்டவனிடத்து அன்பு பூண்டு பத்தி பண்ண வேண்டும். ஆனல், இந்த ஞான பத்திகள் மட்டும் போதுமானவையல்ல. பிறிதும் இறுதியாகக்கைவரல் வேண்டும். அதுதான் 'வைராக்கியம்' என்பது. அதாவது' 'நாம் ஞானத்தால் கண்டறிந்து பத்திபண்ணிவரும் ஆண்டவன் ஒருவனுக்கே அடிமை,' என்னுந்துணிவுள்ளம் பெற்று, அவன் ஒழிய 'வேறு எவரையும் நினைத்து வழிபடுவதில்லை என்னும் திண்ணிய மனநிலையுடையராய், மறந்தும் புறந்தொழாதிருப்பது ஆகும். ஞானபத்திகளோடு இவ்வைராக்கிய நிலையும் கூடிஞற்றுன் முத்திசித்திக்கும் என்பது நம் முன்னையோரது கோட்பாடு. 'நான் என் கடவுளையே 'பரிபூர்ணன்' என்று நம்புகிறேன்; என்னை அவன் ஒருவனே காப்பன். நான் அவன் ஒருவனுக்குத் தவிர மற்றவர்க்கு ஆட்படேன்!' என்றிருக்கும் நிலை, பிறகடவுளரைப் பழிக்கும் இழிந்த மனப்பான்மையினின்று பிறக்கும் தீயவுணர்ச்சியினும் வேறுபட்டது என்பதை இங்கு நாம் பிரித்தறியவேண்டும். 'தெய்வம் ஒன்றென்று இரு' என்ற திருமூலர் கருத்தும் இதுவே. ஆனல், மதநிலை சீர் குலைந்து கெட்ட பிற்காலத்திலே, இதுவே வெறுப்பினையூட்டும் அளவிற்குமுற்றி, சைவ வைணவச்சண்டைக்கு நாட்டிலே வித்திட்டு வளர்த்ததென்பதையும் நாம் நன்கு அறிய முடியும். இவை கொண்டு, நம் மணவாள தாசரைச் 'சிவநிந்தனை புரிபவர்' என முடிவு கட்டிவிடக் கூடாதென்பது அறிவாளர் கருத்து. இவரை ஒத்த வைராக்கிய மனநிலையுடையராய்ச் சிவனையன்றிப் பிற தெய்வம் பேணுத குமரகுருபரர், சிவப்பிரகாசர் முதலிய சைவப்புலவர் பலரும் நம்

நாட்டில் இருந்து வந்தனர். இவ்வாறுள்ள தெளிந்த கருத்துக்களை நன்கு தெரிந்துதான் புலவர் புராண மியற்றிய முருகதாச சுவாமிகள், நம் மணவாளதாசரைப் பற்றிப் பேசும் போது, 'இவரைச் சிவ நிந்தனை செய்பவர் எனச் சிலர் பேசுவர்; அவர் பழுத்த சைவராகமாட்டார்; அவ்வாறு பேசுபவர் இளஞ் சைவர். நன்கு சிந்தித்தால் இவருக்கு விரோத மனப் பான்மை இல்லை என்பது புலப்படும்.

"சிவனை நிந்தனை செய்தவ ரேயென
இவனைச் சிற்சில் இளஞ்சைவ ரேசுவர்
அவன்றன் மாதவ னுகத்திற் பாதியென்
றுவந்து பாடிய பாக்களும் உள்ளவே."

அந்தச் சிவனையே தம் மாயவன் ஆகத்தில் பாதி என்று இவர் உவந்து பல பாடல்கள் பாடியிருக்கி றார்,' என்று நடுவுநிலை உள்ளத்தோடு தக்க சான்று பகர்ந்து சென்றிருக்கிறார்.

தோத்திரப் பிரபந்தமாகிய இந்த ஞான நூல்க ளில், இடையிடையே இன்பச் சுவையையூட்டும் அகப்பொருட்செய்யுட்கள் விரவி இருப்பது கொண்டு சிலர் இப்பிரபந்தத்தின் பெருமையைக் குறைத்து மதிப்பிட நேரிடும்: அதுவும் தவறு ஆகும். ஆண்டவனுக்கும் அடியவனுக்கும் உள்ள தொடர்புகளைப் பல வகையாக விதந்து கூறும் சித்தாந்த சாத்திரம், 'நாயக நாயகி பாவம்' என் னும் ஒன்றையும், பல வழிகளுள் சிறந்த ஒன்றாகக் கூறிச் செல்கின்றது. கடவுளோடு கலந்து மகிழும் பேரின்பமும் உலக இன்பத்திற்கு மாறுபடாத வகையிலே உள்ளது என்று அமைத்துக் காட்டிய அழகு தமிழ் மரபு ஒன்றினுக்கே சிறப்பாக உரியது என்னலாம். ஒத்த அன்புடைய தலைவன் தலைவிய

ரது கூட்டுறவின்கண்ணே பிறந்து, பிறருக்கு இன்னவாறிருந்தது எனக் கூறவொண்ணாததாய், அவரவர் உள்ளத்துணர்வாலேயே உணரப்படும் தன்மைத்தாய இன்பந்தான் இவ்வுலகத்துத் தலையாய இன்பம் என்று கொள்ளப்படும். வீட்டு உலக இன்பமும் இப்படியே, ஆண்டானும் அடிமையுமாகிய இருபொருட் சேர்க்கையிலேதான் உண்டாகிறது. அங்கு ஆண்டவன் தலைவன்; அடிமை தலைவி. இவ்விரண்டின் சேர்க்கையிற் பிறக்கும் இன்பம் அழிவில்லாத பேரின்பம். தமிழர்கள் இப்படிப் பேரின்ப நிலையை, உலக இன்ப நிலைக்கு மாறாகக் கொள்ள உடன்படாத மனநிலையாலேதான், தமிழ்ப்பழம்பெருமதங்களாகிய சைவ வைணவ சித்தாந்த மதங்களிரண்டும், ஆண்டானும் அடிமையுமாகிய ஜீவாத்தும பரமாத்தும தத்துவங்களை ஒப்புக்கொண்டு, இவ்விரண்டும் கூடும்போதே பெரும்பேரின்பமாகிய வீட்டுலக வாழ்வு கிடைக்கிறது என்று தத்தம் சமய நூல்களிலே அறுதியிட்டுச் சென்றிருக்கின்றன. மேலும், உலக நாயகனான கடவுட்கு முன்னே, அடியார்கள் எல்லாம் தங்களைப் பெண் நிலையிலேதான் வைத்துக் காண முடியும். அப்படியே கண்டு பேசியிருக்கிறார்கள். வடநாட்டு இராமகிருஷ்ணபரமஹம்ஸரும், பல சமயங்களில் பெண்ணுடை உடுத்துத் தம்மை இராதையாக நினைத்துக்கொண்டொழுகிக் கிருஷ்ணபக்தியிலே மூழ்கியிருப்பதுண்டு என்பதை நாம் கேட்டறிகிறோம். ‘அறிவாற்சிவனே’ என்று கொள்ளப்படும் சைவசமயாசாரியருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகளும், இப்படியே ‘**திருக்கோவையார்**’ என்ற சிறந்த நூலை இயற்றியிருக்கிறார். எனவே,

"பலபடியாலும், திருமாலது பேராண்மையைக் கருதித் துதித்த பிள்ளைப் பெருமாள் ஐயங்காருக்கு அவனைக் கிட்ட வேண்டும் என்னும் ஆசை உண்டாகி, அது பொறுமையாலே காதல் மீக்கூர்ந்து, தளர்ந்து பெண்ணும்படியான நிலைமை தோற்ற, அப்படி மாறி இன்பச் சுவை நிறைந்த பாடல்களை அநுபவித்துப் பாடியிருக்கிறார்," என்று அவ்வகைப் பாடல்களுக்கு அமைதி காணவேண்டும். இங்ஙனம் சைவவைணவ நூல்களில் அகப்பொருட்சுவை தழுவிய செய்யுட்கள் கலந்து வருதலை, 'கடுத் தின்னுதானைக் கட்டி பூசிக் கடுத் தின்பிப்பார் போலே, சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பநிலை நாட்டுதல் ஆகும்,' என்று நம் தமிழ் மரபறிந்தார் அமைப்பர்.

நம் பழந்தமிழர்கள் மேற்கொண்டிருந்த பல சீரிய கருத்துக்களும், பலபடியாலும் இவர் நூல்களில் பாராட்டிக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுட்சில காணுதல் நல்லது.

"காயிலை தின்றும் கானி லுறைந்தும் கதிதேடித்
தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்!"

என்று தவம் செய்து வீடெய்த முயல்வாரை இகழ்ச்சி தோன்றக் கூறி விளித்து, "நீவிர், அங்ஙனம் எல்லாம் மெய் வருந்தியுழல வேண்டுவதில்லை.

"தாயினும் அன்பன் பூமகள் நண்பன் தடநாகப்
பாயல் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீரே."

என்று பணிக்கின்றார். மறுமை நோக்கி இம்மை இன்பங்களைத் துறந்து வெறுப்புக்கொண்டு உடலை வருத்திக் காடும் மலையும் திரிந்து திரிந்தலைந்து தவம் செய்வதிலும், பத்தியாகிய மனநிலையை வளர்த்து, தனுகரணபுவன போகங்கள் ஆண்டவன் தந்தவை என்றுணர்ந்து, மனப்பற்றின்றி அவற்றையும்

நுகர்ந்து, இருமைக்கும் வழி செய்துகொள்ள வேண்டும் என்பதே நம் தமிழ் முன்னையோர் கண்டுணர்ந்து சொன்னவழிஎன்பதனை யாவரும் அறிவர்.

மக்களுள்ளே பிறப்பால் அன்றி, அறிவு ஒழுக்கங்களாலேயே உயர்வு தாழ்வு கற்பித்து வந்தனர் நம் தமிழ் முன்னோர் என்பதை நாம் விளக்கமுறக் காணலாம். 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' என்று நால்வகைச் சாதியை நிலை நாட்டிய புறநானூறும்,

> "கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.''

என்று அறிவாலலது பிறப்பினால் உயர்விழிவு வேண்டாமையையே வற்புறுத்திச் செல்கிறது. இருந்தும், பிறப்பால் உயர்வு தாழ்வு காட்டும் மனப்பான்மை, நம் நாட்டிலே இடைக்காலத்துக் குடி கொண்டுவிட்டது. ஆனால், தமிழ்ப் பண்பறிந்து நாட்டை நலமுறக் காக்க விரும்பிய புலவர் யாவரும், இதனை வெறுத்தொதுக்கி மறுத்தே வந்துள்ளனர். 'சாதி இரண்டொழிய வேறில்லை: மேதினியில் இட்டார் பெரியோர்; இடாதார் இழி குலத்தோர்,' என்பது, இம்மறுப்பின் அறிகுறி ஆகும். நம் மணவாள தாசரும், நல்ல தமிழ்ப்பண்பாட்டிலே வளர்ந்த வைணவ குலதிலகராகையால், பிறப்புரிமைக் கொள்கையை அடியோடு வெறுத்து, "ஞான ஒழுக்கங்களாலே சிறந்து திருமாலன்பு பூண்டவரே மேற்குலத்தோர்; அல்லாதார், சாதியால் சதுமறையால் சிறந்து, வேத வேள்வி இயற்றிய மேதக்கோராயினும், உயர்ந்தவராகார். அவர் புலையரே ஆவர்,'' என்ற கருத்தைத் திறம்படத் தமது நூலுள் எடுத்துக் காட்டியுள்ளார் :

'பாதியாய் அழுகியகால் கைய ரேனும்,
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்,
'ஆதியாய்! அரவணையாய்!' என்ப ராகில்
அவர்கண்டீர் யாம்வணங்கும் அடிக ளாவார்;
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கா ரேனும்
சதுமறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில்நான் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்அரங்கம் போற்றுதார் புலையர் தாமே.'

என்பது அவரியற்றிய திருவரங்கக் கலம்பகச் செய்யுள். 'புலையர்' என்று சொல்லி நம்மொத்த பிறப்பினரை ஆண்டவன் அருகு செல்வதற்கும் அனுமதியாது வீதியின் புறத்தே நிறுத்தி வேடிக்கை காணும் இக்காலத் தமிழுலகத்திற்கு, 'அவர் கண்டீர் யாம் வணங்கும் அடிகளாவார்' என்று அந்தணராகிய அவர் பேசுவது, நல்லதோர் அறிவுரையாகும். ஆண்டவன் அருகிலே நம்முடன் நின்று தொழுவதற்கும் அவர்கட்கு அனுமதி மறுக்கும் நம்மை நோக்கி, 'கோயிலிலே உள்ள அரங்கனை நீக்கி அவர்களைவிட்டு அவர்களையே அரங்கனாகக் கண்டு வணங்குங்கள்,' என்னும் முறையிலே அவர்கட்கு ஆலயநுழைவு மட்டுமல்லாமல், கடவுளிருப்பையே செய்துவிடச் சொல்லும் அளவிற்குச் சென்ற அவரது விரிந்த உள்ளத்தையும் பரந்த நோக்கத்தையும் என்னென்று பாராட்டிப் பேசுவது!

இவ்வளவிற்கும் மேலாக அவர் பிரபந்தங்களிலே தமிழன்பு தலை சிறந்து நிற்கின்றது. ஆழ்வார்களுள் ஒருவர், 'இருந்தமிழ் நன்மாலைகள் இணையடிக்கே சூட்டினேன்; ஆகையால், பெருந்தமிழன் நான்; பெரிதும் நல்லேன்,' என்று

சொல்லித் தமிழுரிமை பாராட்டினர்: அம்முறை யிலே, அரங்க நகர் அப்பனுக்குச் செந்தமிழால் நன்மாலைகள் பல சூட்டிய நம் பிள்ளைப்பெருமா ளையங்காரும் நல்ல பெருந்தமிழர் என்பதில் ஐய மில்லை. தமிழ்ப்பற்று ஒன்றுதான் நல்ல தமிழனை அறிதற்கு உற்ற கருவி. நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி யிலே 'திருவாறன் விளை' என்ற தலத்திலே எழுந்தருளி யிருக்கும் திருமாலைக் குறித்து அவர் பின் வரும் செய்யுளைச் செய்துள்ளார்:

"சென்று புனல்மூழ்கிச் செய்தவங்கள் செய்தாலும்
வென்றுபுலன் ஐந்தடக்கி விட்டாலும்—இன்தமிழால்
மாறன் விளைத்தமறை ஓதாதார்க்கு இல்லையே
ஆறன் விளைத்திருமால் அன்பு."

இதிலே அவரது அளவிறந்த தமிழ்ப்பற்றை நாம் நன்கு காணலாம். மற்றொன்றும் சொல்லியிருக் கிறார்:

அறிதற்கு அரிய வடமொழி வேதங்களைக் கேட்ட எம்பெருமான் திருப்புயங்கள் வருத்த மிகுதி யாலே வாடியிருந்தனவாம்; ஆனால், அவை துணிந்த அருமறைப் பொருளை இன்சொல்லால் அமு தொழுகுகின்ற தமிழில் விளம்பியருளிய நம்மாழ் வாரது திருவாய் மொழியைப்பெற்று அவை வருத் தம் நீங்கி மகிழ்பூத்துப் பூரித்தனவாம்! இதை

"அருமறைது ணிந்த பொருள்முடிவை இன்சொல்
அமுதொழுகு கின்ற தமிழினில் விளம்பி
அருளிய சடகோபர் சொற்பெற் றுயர்ந்தன."

என்று தெரிவிக்கும் போதும், அதே தமிழன்பு பெருக்கிட்டோடக் காண்கிறோம்.

இங்ஙனம் எல்லாம் பொது முறையிலே பார்ப் பதை நிறுத்தி, சிறந்த செய்யுட்கள் சிலவற்றை

எடுத்து, அவற்றின் மூலம் பல நயங்களைக் கண்டு சுவைப்பதும் நலம் பயக்கும் செயலாகும். ஆதலால், அவற்றை மேலே காண்போம்:

"பண்டேயுன் தொண்டாம் பழவுயிரை என்னதென்று
கொண்டேனைக் 'கள்வன்' என்று கூறுதே—மண்டலத்தோர்
புள்வாய் பிளந்த புயலே! உனைக்'கச்சிக்
கள்வா!' என்று ஓதுவதென் கண்டு?"

இது நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியிலுள்ள ஒரு செய்யுள்.

'திருக்கள்வனூர்' என்ற தொண்டை நாட்டுத் திருப்பதி எம்பெருமானைப் பற்றியது ஆகும் இது. 'வழிவழியாக உனக்கேயுரிய அடிமையான உயிரை நான் என்னுடையதென்று கொள்வதனால், என்னைக் கள்வன் என்றல் தகும். ஆனால், உலகத்திற்கே முதல்வனான நின்னை வெண்ணெய் திருடி உண்டது குறித்துக் 'கள்வன்' என்று உலகினர் கூறுகின்றனரே! என்ன அறியாமை!' என்று கூறி வியக்கின்றார் கவிஞர். இதில் அவரது ஆழ்ந்த பத்திப்பெருக்கமும், மனவுருக்கமும், சொல்வன்மையும் மிகவுயர்ந்து விளங்குகின்றன.

'வெள்ளக்குளம்' என்பது ஒரூர். அவ்வூரில் எழுந்தருளியுள்ள கடவுளைப்பற்றி, நூற்றெட்டுத் திருப்பதியந்தாதியில் ஒரு செய்யுள் இயற்றித் தந்திருக்கிறார் கவிஞர். வெள்ளம் என்பது நீர்ப்பெருக்குக்கும் பெயர். வெள்ளக்குளம் என்பதற்கு 'நீர் மிகுதியாயுள்ள குளம்' என்று ஒரு வகையாகப் பொருள் பண்ணிக்கொண்டார் அவர். நீர் வேட்கை உள்ளவர்கள் குளத்தில் வந்து நீர் பருகி வேட்கை தீரப் பெறுவது இயல்பு. இதை மனத்திலே கருதிய அவர், ஒரு கற்பனையை வெகு அழகாகச் செய்து, அச்செய்யு

ளிலே அமைத்துவிடுகிருர். 'பகவான் அழகிய மண வாள தாசரை அடிமை கொள்ள வேண்டும் என்று ஒரே தாகமாய் இருந்தாலும்; அவரும், அவனுக்கு அடிமை பூண்டுய்ந்துபோக எண்ணிஞராம்; இப்ப டித்தாகம் பூண்ட இருவரும் திருவெள்ளக் குளத் திலே சந்தித்தார்களாம்; சந்தித்து, 'ஒருவரோ டொருவர் உளம் கலந்து களிப்பு மூழ்கி விடாய் தணிந்து மகிழ்வுற்ரேம்!' என்கிருர். இதனை,

> " நானடிமை செய்யவிடாய் நாளுனேன்; எம்பெருமான்
> தானடிமை செய்யவிடாய் தானுனன்;—ஆனதன்பின்
> வெள்ளக் குளத்தே விடாயிருவ ரும்தணிந்தோம்
> உள்ளக் குளத்தேனை ஒத்து."

என்று அழகிய வெண்பாவிலே சொல்லியிருக்கிருர்.

> "தொலைந்தானை ஓதும் தொலையானை அன்னைசொல் லால்மகுடம்
> கலைந்தானை ஞானக் கலையானை ஆய்ச்சி கலைத்தொட்டிலோ(டு)
> அலைந்தானை பாலின் அலையானை வாணன்கை அற்றுவிழ
> மலைந்தானைச் சோலை மலையானை வாழ்த்துஎன் மடநெஞ்சமே!"

என்பது அழகரந்தாதிச் செய்யுள். 'மட நெஞ்சமே, கஜேந்திரன் என்ற யானையால் அழைக்கப்பட்ட பழமையானவனும், கைகேசி வார்த்தையால் மகுடம் இழந்தவனும், ஞானக்கலைகளின் பெருமையுள்ள வனும், அசோதையது சேலைத்தொட்டிலிலே அலைந்து கிடந்தவனும், பாற்கடலுடையவனும், வாணனெடு மலைந்து அவனது கையற்றுவிழக்கண்டு மகிழ்ந்தவனும் ஆகிய சோலைமலையானை வாழ்த்து,' என்பது இதன் பொருளாகும். இதனுள், 'தொலைந்தான் — தொலையான்; கலைந்தான் — கலையான்; அலைந்தான் — அலையான்; மலைந்தான் —மலையான்,' என்று முரண்பட்ட சொற்களை அமைத்து, பொருளளவில் வேறு பொருள் உடை

யதாய் மாறுபாடின்றி முடித்திருக்கும் கவித்திறம் மெச்சத்தக்கது. இவ்வாறு வருவதனை 'முரண் விளைந்து அழிவணி' என்பர் அலங்கார நூலார்.

> " சித்திக்கு வித்தது வோவிது வோஎன்று தேடிப்போய்நூல்
> கத்திக் குவித்தபல் புத்தகத் தீர்!கட்டு ரைக்கவம்மின் :
> அத்திக்கு வித்தனை யும்உண்ட வேங்கடத்து அச்சுதனே
> முத்திக்கு வித்தகன் என்றே சுருதி முறையிடுமே. "

என்பது ஓர் இனிய பாட்டு. திரிபந்தாதிகளிலே, இவ்வளவு எளிமையாகப் பொருள் விளங்கும்படி இனிய கவிகள் செய்தமைத்தல் மிகமிக அருமை என்று கவி புனைய வல்லார் கூறுவர். பொய்ந் நூல்களை ஓதுவதெல்லாம் வீண் என்பதைக் 'கத்தி' என்ற சொல்லால் சுட்டியும், அவை உண்மை நிலை உரைப்பன அல்லவாகையால், அவைகளைத் தேடிய தால் வருந்திச் சேமித்த பலனைத் தவிர வேறுதல் இல்லை என்பது தெளியக் 'குவித்த' என்ற சொல் லால் காட்டியும், பத்தி முதிர்ந்து அனுபவ நிலையிலே தெரியத்தக்க அப்பரம்பொருள் உணர்ச்சி தனிப் பட்ட நூலறிவால் மட்டும் ஏற்பட்டுவிடமாட்டாதுஎன் பதைப் 'பல்புத்தகத்தீர்' என்று இழிவு நிலை தோன்றச் சொல்லியும் செல்லும் அழகு, தகுதி மிக உடையது. ஸித்தி, புஸ்தகம், அப்தி, அச்யுதன், ஸ்ருதி முதலிய பல வடசொற்களை அவர் எடுத்தாண் டாலும், அவை யாவும் இங்குத் தனித்தமிழ் ஒத்து நின்று நம்மை இன்புறுத்துகின்றன.

பத்தர்கட்குக் கடவுள் தேனும் பாலாயிருந்து இனிமையூட்டுபவன். அப்படியே நம் ஆசிரியர்க்கும் திருவரங்கன் தேன் ஒத்து நின்றான். அவனை அப்படிச் சுவைத்த அனுபவத்திலே மூழ்கி ஒரு செய்யுள் தந்திருக்கிறார் :

"சிந்திக்கத் தித்திக்கும் செவ்வாய் துவர்த்துப்பாம்
புந்திக்குள் ளேஇன் புளிமேவும் — நந்தம்
கருவரங்கங் கைத்தழலும் காவிரியி னூடே
திருவரங்கத் தேவளரும் தேன்."

அவருக்குத் தேனைத் தித்தித்த திருமாலின் இயல்புகள் பலவற்றையும் சொல்லுகையில், 'அவனது வாய் செம்பவளம் ஒத்தது. அவன் நினைக்க நினைக்க அறிவிலே இன்பந்தந்து நிற்கும் பேரியல்பினன்; அடியன்' என்றுசொல்லி வணங்கி ஆட்பட்டவரது கருப்பமாகிய சிறையைக் கோபித்து நீக்கிவிடும் தண்ணளி அவனுக்கு உண்டு,' என்று தெரிவித்திருக்கிறார். இதிலே, தித்திப்பு, துவர்ப்பு, உப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு என்னும் அறுசுவைகளையும் சொல்லால் அடுக்கி வரும்படி செய்துள்ளார். அதுமட்டுமன்றி, மேலும் பல நயமும் உண்டு. 'திருவரங்கனை இனிமை தருவது பற்றித் 'தேன்' என்றவர், அவ்வளவிலே அமையாது, 'வளரும் தேன்' — 'அரங்கத்தே வளரும் தேன்' என்றெல்லாம் சொல்லியுள்ளதேன்?' என்று யோசித்தால், அந்நயங்கள் தெரிய வரும். சாதாரணத் தேன், உண்ண உண்ண அளவும் குறையும்; சுவையிலும் தெவிட்டிவிடும். திருவரங்கத் தேனோ, உண்ண உண்ண அளவிலும் சுவையிலும் குறையாது வளர்ந்துகொண்டே போகிறதாம். மேலும், தேன் பலரும் புகவெண்ணாத மலை முழைகளிலும் சிகரங்களிலும் மரவுச்சிகளிலும், எடுக்க முடியாத உயரத்திலே கிடைத்தற்குஅரிதாகக் கிடக்கும். நம் ஆசிரியர் அனுபவித்த தேன், பலரும் காணும் பொதுவிடத்தே, காட்சிக்கெளியதாய், யாவரும் கண்டனுபவிக்கும்படி இருக்கும் என்று இவ்வளவு வேறுபாடு

தோன்றி நயமுறுத்தும்படி, 'தேன் - வளரும் தேன்-அரங்கத்தே வளரும் தேன்' என்றெல்லாம் சொல்லி, 'உலகில் தேனுக்கு இன்சுவை ஒன்றே உண்டு; திருவரங்கத் தேனுக்கோ, அறுசுவையும் உண்டு,' என்று கூறி வியப்பாரைப்போல, அறுசுவையின் பெயரையும் சொல்லளவிலே குறிப்பாக அமைத்துச் செய்யுளைச் செய்திருப்பது மிகவும் நயத்தற்குரியது!

தலைவனைப் பிரிந்த தலைவி, அவனது வருகையை எதிர் நோக்கிக் கடற்கரையிலே வருந்தி நிற்கின்றாள். குறித்த காலத்திலே அவன் வரவில்லை. அவளுக்குத் துயரம் மிகுகின்றது. துயர் மிக்க நிலையில் உள்ளவர்கட்குக் காணும் பொருள்கள் யாவும், தம்மொத்த துயர் கொண்டிருப்பனவாகவே தோன்றுவது மனவியல்பு.

கடலோ, பேரொலி செய்கிறது; அவளும் வாயினால் இரங்கிப் புலம்புகிறாள். கடல் முத்து மணிகளை வீசுகிறது; அவளும் தனிமையின் வெறுப்பால் முத்து மாலைகளை அணிய மனமின்றிக் கழற்றி வீசி எறிகின்றாள்; கடல் வெள்ளிய சங்குகளைக் கரையில் ஒதுக்குகிறது; அவளும் சங்காலான வளையல்களை, உடல் மெலிவு காணவே கழற்றி எறிகிறாள். கடல் குளிர்ந்து பாயும் அலைகளை வீசுகிறது; அவளும் பாய் படுக்கை முதலியவற்றை விரும்பாது வீசி விடுகிறாள். கடல் பெருமையும் கருமையுமுடையதாய் இருக்கிறது; அவளும் வேட்கை மிகுதியால் மயக்கம் அடைகிறாள். கடல், இரவு பகல் உறங்காது அலைத்துக்கொண்டிருக்கிறது; அவளும் இரவு பகல் உறங்குவதில்லை. இப்படிக் கடலிடத்தும், தனக்கு நேர்ந்துள்ளவை போன்ற செயல்களைக்

கண்டவுடனே, கடலுக்கும் தனக்கும் இந்நிகழ்ச்சிகள் ஒத்திருத்தலால், அதுவும் திருமாலினிடத்துக் காதல்கொண்டிருக்க வேண்டும் என்று கருதி, கடலை நோக்கிப் பின் வருமாறு கேட்கிருள் :

“ வாயி லிரங்கினை! ஆர மெறிந்தனை! வால்வளை சிந்தினை!தண்
பாயலை யுந்தினை ! மாலை யடைந்தனை ! பாரில் உறங்கிலையால்
கோயில் அரங்கனை மாகன கந்திகழ் கோகன கம்பொலியும்
ஆயிழை நண்பனை நீயும் விரும்பினை யாகு நெடுங்கடலே !”

என்பது திருவரங்கக்கலம்பகத்திலே அக்கருத்துக் குறித்து வரும் செய்யுள். இதனுள் செம்மொழியும் பிரிமொழியுமாகிய சிலேடை வகைகளை அமைத்து, கடலுக்கும் தலைவிக்கும் பொருந்தப் பொருள் கொண்டு கருத்து நயம் காணுமாறு அமைத்துள்ள அழகு பெரிதும் போற்றத் தக்கது !

இறுதியாக, இவரது கற்பனைத் திறனையும் சொல்லாற்றலையும் ஒருங்கே இயைத்துக் காட்டுமாறு அமைந்த திருவரங்கக்கலம்பகச் செய்யுள் ஒன்று கூறி முடிப்போம் :

நீலத்திரைக் கடலும், கரை புரண்டொழுகும் ஆறும் நம் கண்களுக்குக் கவர்ச்சியூட்டி விருந்தளிக்கும் திறத்தனவாகும். இதை அறிந்த ஐயங்கார், அப்படிக் கரை புரண்டோடும் காவிரியாற்றை, நமது மனக்கண்ணுக்கு முதலிலே முன்னிலைப்படுத்தி, ‘அவ்வாற்றிலே ஓர் ஐந்து தலைப் பாம்பு இருக்கிறது,’ என்று அதனை அடுத்துச் சொல்லுகிருர். ‘ஆற்றிலாவது, ஐந்து தலைப்பாம்பாவது !’ என்று நாம் வியக்கிறோம் ! வியப்பு இம்மட்டோடு நிற்கவில்லை. அந்த ஐந்து தலைப்பாம்பு ஒரு நீல மலையைச் சுமந்திருக்கிறதாம் ! ‘மலையிலே, பாம்பிருக்கும் ; அம்முறையிலே மலை பாம்பைச்

சுமக்கிறதென்பது நியாயம். பாம்பு மலையைச் சுமக்குமா?' என்று நமக்கு நினைக்கத் தோன்றுகிறது. தாமரைத் தடாகத்திலே மலைத் தாமரை என்று ஏதாவது உண்டா? இல்லை. ஆனால், அவர் சொன்னரே! பாம்பு சுமந்த மலை—அந்த மலையிலே ஒரு பெரிய தாமரைக் காடும் உண்டாம்! இதுவே நமக்கு விந்தையாயிருக்கிறது! அவர், அக்காட்டிலேயுள்ள ஒவ்வொரு தாமரை மலரிலும் ஒவ்வொரு விந்தை உண்டென்று சொல்லுகிருர்:

"கரைபொருது ஒழுகும் காவிரி ஆறே;
ஆற்றிடைக் கிடப்பது,ஓர் ஐந்தலை அரவே;
அரவம் சுமந்தது,ஓர் அஞ்சன மலையே;
அம்மலை பூத்தது,ஓர் அரவிந்த வனமே;
அரவிந்த மலர்தோறும் அதிசயம் உளவே!"

காவிரிவாய்ப் பாம்பணைமேல் பள்ளி கொண்ட பரந்தாமனைத்தான் கவிஞர் மேற்கண்டவாறு சொல்லியிருக்கிருர் என்பதை இப்போது நாம் அறிய முடிகிறது. அவனுடைய கை கால் கண் நாபி மார்பு முகம் இதழ் வாய் முதலியவற்றையே அவர் அஞ்சனமலை பூத்த தாமரை என்று உருவகித்துக் காட்டியுள்ளார். திருமால், உலகளந்தது, கங்கை ஈன்றது, பிரம கபாலம் நீக்கினது, இராவணனை வதைத்தது, வீடணனுக்கு அருளியது ஆகிய அருஞ் செயல்களை எல்லாம், முற்கூறிய அவயவங்களின் செயலாக ஏற்றி, அவைகளைத் தாமரையிடத்துள்ள அதிசயங்களாகக் காட்டிக் கற்பித்தவர், இறுதியிலே, தம்மை வியப்புடன் நோக்கிப் பவக்கடல் கடக்குமாறு பேரருள் செய்த கருந்தடங்கண்களைக் குறித்து,

"கடைசிவந் தகன்று கருமணி விளங்கி
இடைசில வரிபரந்து இனியவாய் நெடியவாய்
இன்பம் தழீஇய இருபெருங் கமலம்
துன்பம் தழீஇய தொண்டனேன் எனையும்
உவப்புடன் ஒருகால் நோக்கிப்
பவக்கடல் கடக்கும் பரிசுபண் ணினவே!"

என்று, மனமுருகிக் குழைந்து பாடியிருக்கிறார். இது, "கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரி யோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்" என்ற திருப்பாணாழ்வார் திருவாக்கை ஒட்டி நிற்கின்றது. இதில் திருமாலின் பத்து அங்கங்களைப் பொறுக்கிப் பத்துத் தாமரையாக உருவகித்தவர், தாமரைக்குள்ள வேறு மொழிகளை எல்லாம் சுவைபட எடுத்தமைத்திருக்கிறார். பத்துத் தாமரையைச் சுட்டி, ஒன்பது அதிசயங்களைக் காட்டிக் கவினுறுத்தியிருக்கிறார். இப்படி மனவியல்பறிந்து, கவர்ச்சி மிக்க ஆற்றை முதலிலே நினைப்பூட்டி, வியப்பு ஏற்படுமாறு பொருளை அடுக்கி, அரங்கனுடைய அங்கங்களைத் தாமரையாக உருவகித்து, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு புராணக் கதையையும் இயைத்து, அவை செய்த அற்புதங்களாகக் காட்டி அழகுபடுத்தியுள்ளது மிக வியக்கற்பாலது!

இவ்வாறாக, கன்னல் பாகினும், கோல் தேனினும், கனியினும் கனிந்த கவி பாடிய பெருமை, தமிழிலக்கியத்திலேயே மிகச் சிலருக்குத்தான் உண்டு. அவருள் என்றும் அழியாத முதன்மை நிலை பெற்றவர் நம் மணவாள வள்ளல் என்னும் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

★